SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119,Tooting High street, London, SW17 OSY

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 12 ♦ ISSUE - 250 ♦ FRIDAY 25 SEPTEMBER 2015

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE *
* Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




## Maths & Physics Tutor
One to One & Group Classes for
11+, KS3, GCSE, IGCSE : Mathematics
AS & AL : Core Maths, Further Maths, Mechanics, Statistics, Decision Maths, Physics
By Qualified & Experienced Tutor
Kokulan BSc(Maths) MSc(Maths) (UK) Reading PhD(UK)
Mathematics Tutor and Researcher at London University
- 100% A* - A Grade Achievement
- Fast Track Revision Classes for Retakes
- Weekly Based Mock Exam & Paper Classes
Tel : 079 464 53977
Email : info.ramtutors@gmail.com

- விசா முடிவடைந்து சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள்.
- புதிதாக அகதி அந்தஸ்து கோருபவர்கள்.
- ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்
- கைது செய்தல் தடுத்து வைத்தல் மற்றும் உயர் நீதிமன்ற விண்ணப்பம்
- ஐரோப்பிய சட்டத்தின் கீழ் உறவினர்கள் மற்றும் துணைகளை Sponsor செய்தல்
- மனிதாபிமானம் மற்றும் Fresh Application விண்ணப்பம் அனுப்புதல்

போன்றவை தொடர்பில் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழு தமிழ் மக்களுக்கான இலவச ஆலோசனை வழங்கி வருகிறனர்.
M&S Solicitors
1A Beaconsfield Road Southall Middlesex UB1 1BA
(Southall Stationக்கு அருகாமையில்)
Mob: 078 7076 3570, 075 0874 4038
Tel: 020 8571 7760
Email: fahmy@mandssolicitors.com

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

OFF LICENCE / GROCERY SHOP FOR SALE
IN EPPING FOREST
256 High Road, Epping Forest இல் அமைந்திருக்கும், £ 7,500 முதல் £8,000 வரை வாரத்திற்கு செய்யக்கூடிய Off Licence மற்றும் Grocery Shop உள்ள கடை விற்பனைக்கு உள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கலாம்
மேலதிக விபரங்களுக்கு
Ali - 079 8398 2965

AGILOGIX connecting the world
குறைந்த செலவில் விமான மார்க்கமான பொதி அனுப்பும் சேவை
யாழ் கொழும்பு கண்டி போன்ற இடங்களுக்கு வீட்டுக்கு வீடு சேவை
(Door to Door ) உண்டு
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
Tel: 020 3371 1272 Mob: 07913842265
Email: sales@agologix.co.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

வேலையாட்கள் தேவை
மிட்சம் (Mitcham) பகுதியில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு Stock Counting செய்வதற்கு வேலையாட்களும் பொருட்கள் விநியோகம் செய்வதற்கு வான் சாரதிகளும் தேவை.
Robert Fresh Fruit & Veg Ltd
Unit 13 , 91 -92 church road, Mitcham, CR4 3TD
தொடர்புகளுக்கு : 02086871222
Mob : 079 1902 6083


ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்


herbalAid
ஆண்களுக்கான மசாஜ் எண்ணெய்
பார்மசிகளில் பெற்றுக் கொள்ளலாம்
பாலியல் பிரச்சினை உங்களுக்கு ஏதாவது
இருந்தால் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.
QUALITY ASSURANCE
Massage oil for Men to increase strength & vitality
100% safe herbal formulation
Premium SAANDHHA OIL
AN ORIGINAL PRODUCT REGISTERED IN UK
Note: Please beware of counterfeit products for safety reasons.
For more information or buy online
Visit : www.herbalaid.co.uk
Email : herbalaid@hotmail.co.uk
Phone : 020-8843-0330
R.E.P.L
SATISFACTION 100% GUARANTEE


• தோசை
• இட்லி
• வடை
Dosa – Idly - Vada
• தோசை
• இட்லி
• வடை
off 50% off
50% Discount Until September 2015
Prepared by our new Dosa Chef with over
40 years experience in South Indian Cuisine.
CERTIFICATE of EXCELLENCE 2015 Winner
tripadvisor
Award winning Fushia Restaurant
Daily opening from 5 pm to 11 pm
(Sunday 12 Noon to 11.00 pm)
FUSHIA
Fushia Restaurant and Banqueting Hall
TEL - 020 8680 8833 / 07958424222
3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA
web : www.fushiauk.com Mail : info@fushiauk.com


ஒரே அழைப்பில் பல்வேறு சேவைகள்
in4Repairs
Computer Support & Repair
Web Design & Hosting
Security, Alarm & CCTV
078 2627 9343
www.in4repairs.co
CCTV
Camera System
1080
CCTV in operation
அனைத்து வகையினருக்கும் ஏற்ற
விலைக்கழிவுகளில் பாதுகாப்பு சாதனங்கள்
உங்கள் இல்லங்களை CCTV Cameras மற்றும் Burglar Alarm
கொண்டு எந்நேரமும் காத்திடுங்கள்
கணினித் திருத்தவேலைகள்
அனைத்து வகையான கணினிகளையும்
பாதுகாப்பான முறையில் திருத்திப்
பெற்றுக்கொள்ளலாம்
with our ON-SITE SERVICE WE COME TO YOU!
PCs, Macs, Laptops & Netbooks
Save Money on Computer Repair Services 20% Discount
Discount for Student and NHS Staff Help Student and NHS Staff
இணையத்தள வடிவமைப்பு, இணையத்தள
பராமரிப்பு, லோகோ வடிவமைப்பு, மென்பொருள்
வடிவமைப்பு மற்றும் அனைத்து வகையான
சேவைகள்
Quickser.com
Hostings - Design - Development
FREE WEB HOSTING
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
Skype : in4repairs Email – in4repairs@gmail.com
Call : 020 360 26293


SAJA ACCOUNTANCY LTD
உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார ஆலோசனைகளுக்கு...
• Personal Tax Affairs & Self-Assessment (Including Tax Credits, Benefits Application Visa Related Tax Assistance)
• Company Formation & Annual Return
• Book Keeping & Accounting
• Payroll
• VAT Registration & VAT Returns
• Company Tax Returns
• Business Management Consultancy
மேலதிக விபரங்களுக்கு
UNIT A2C,Redlands
Coulsdon, CR5 2HT.
Tel : 020 3754 3678 Mob : 079 2010 5186
Mail : info@sajaaccountancy.co.uk
Web : www.sajaaccountancy.co.uk


TOP MARKS FOR MATHS – A* TUTOR
GCSE, A/S & A/2, Maths Statistics and Mechanics
Students, All examinaton boards Covered
by highly experienced mathematician
Also coach for 11+ and Grammar school exams
For further details call
KAMALANATHAN BSC (HONS)
'el : 020 8883 3126 Mobile: 079 7083 9507
E-Mail: rasiah.nathan@yahoo.co.uk
North, North-West & East London areas


SRI LAKSHMI MATHA
ASTROLOGICAL CENTRE
All Religions Welcome
Pandith: RAMRAJU
To get Solutions:
• Financial • Education
• Children • Property
• Employment • Court Cases
• Business • Love
• Marriage • Health
• Sexual Problems
• Family Problems
• Job • Relationship etc.
We also give suggestion for any type of personal problems.
100% REMOVAL OF BLACK MAGIC & GIVEN LIFE LONG PROTECTION
Call for an Appointment
0744 078 0447
241 C, High Street North, Manor Park, Eastham.
London E12 6SJ




## உலகநீதி

ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவினால், நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை வெளிவர இருக்கும் இத்தறுவாயில், அதனுள் அடங்கி இருக்கும் உண்மைகளை இலங்கை அரசாங்கம் கௌரவிக் குமா என்பது மில்லியன் டொலர் கேள்வி. அந்த உண்மைகளினால், பாதிக்கப்படுபவர்கள் யாராக இருப்பினும், உலக நீதிக்கு முன் கட்டுப்பட வேண்டியது பகுத்தறிவு. இல்லையெனில், உள்நாட்டு விசாரணைகளையோ, சர்வதேச விசாரணைகளையோ கோருவதில் அர்த்தமில்லை.

*- உமா மகாலிங்கம்*

## போராட்டம் மூலமே இலக்கையடையலாம்

உலகம் சந்தையைச் சார்ந்தது. சந்தையைச் சார்ந்தே ஈழச்சிக்கல் பார்க்கப்படுகிறது. தமிழன் அதிகமாக உழைக்கவேண்டியது உள்ளது. கட்சி சாதி பதவி உணர்வுகளுக்குள் ஆட்பட்டுகிடக்கிறான். இதில் மாற்றம் தேவை.... தொடர் போராட்டங்கள் நம்மை ஒரு நாள் இலக்கை அடைய வழி சமைக்கும்.

*- கா. யோகநாதன்*

## முருகன் இந்துக் கடவுளல்ல

சிந்துவெளி நாகரீகத்தில் கொற்றவை கடவுளாக இருந்து பின் சமூகம் தாய் வழிச்சமூகத்தில் இருந்து ஆணாதிக்கச் சமூகமாக மாறிய காலத்தில் முருக வழிபாடு தோன்றி இருக்கிறது. முருகனுக்கும், இந்துவிற்கும் சம்பந்தம் கிடையாது. 1922இல் தமிழக அரசு அறநிலையத்துறை சம்பந்தமாக மசோதாவை கொண்டு வந்த பொழுது, திருநெல்வேலியில் இருந்த சைவர்கள், 'இந்து' எனும் வார்த்தையை தம்மை குறிக்கப் பயன்படுத்தக்கூடாது என்று வழக்கு தொடர்ந்தார்கள் என்பது வரலாறு.... கடவுளை வணங்குபவன் கூட தம்மை இந்து என்று சொல்லக் கூடாது என்று பதிவு செய்திருக்கிறார்கள்..

*- பவன்*

## வீரவணக்கம் வேண்டாம்!

ஐயா ஒருபேப்பர்காரரே, தீபாவளி வரப்போகிறது. திராவிடத்தீரன் நரகாசுரனுக்கு வீரவணக்கம் என்று அட்டைப் படத்தை போட்டுவிட்டு நீங்கள்தான் ஏதோ புரட்சிவாதிகள் என்று கிளம்பி விடாதீர்கள். நரகாசுரன் என்பவன் திராவிடன் அல்லது தமிழன் என்று யார் சொன்னது? புராணங்கள் பொய் என்றால் அதில் வரும் பாத்திரங்களும் அவர்களது குணவியல்புகளும் எவ்வாறு உண்மையாக இருக்கும்? பெரியார் சொன்னார் என்றால் உங்களுடைய மதி எங்கே போய்விட்டது. கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

*- அழகானந்தன்*

## ஏன் குத்தி முறிகிறார்கள்?

முதலமைச்சர் விக்னேஸ்வரனை பதிவியிலிருந்து அகற்ற வேண்டும் என்று தமிழரசுக்கட்சியின் சுமந்திரன் அணியினர் செயற்படுவது தெரிகிறது. இதற்குப் பின்னால் கூல், கதிர்காமர், நேசையா, அங்கிற்றல் என்ற யாழ்ப்பாணத்து புரட்டஸ்தாந்துக்காரர் இருப்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. ஆனால் தமிழாராச்சி டைஜஸ்ட் நடாத்திற ஆவரங்கால் சின்னத்துரையின் பெடியன் சிறிவாயுவும், பரமார்த்த குரு கனடா தங்கவேலுவும் ஏன் குத்தி முறிகிறார்கள் என்பதுதான் விளங்கவில்லை.

*- ந. திருஞானம்*

## கேள்வி கேட்கப்படாதாம்

கூட்டமைப்பின் தலைமைக்கு யாரும் தங்களைக் கேள்வி கேட்கிறது பிடிக்காது போலிருக்கிறது. சுவிஸ் பேர்ணில் ஜீ.ரி.எப் கூட்டத்தில் சுமந்திரனிடம் கேள்வி கேட்டவர்களை கடந்த வாரம் லண்டனில் இமானுவல் பாதிரியார் கூட்டிய கூட்டத்தில் scoundrels, uncivilised people என்றெல்லாம் கழுவி ஊற்றினார் சுமந்திரன். போததற்கு அமெரிக்கதீர்மானத்தினை எரித்தவர்கள் சுவிற்சலாந்துக்கு ஏன் வருகிறார்கள் என்று ஒரு 'அறிவு பூர்வமான' கேள்வியையும் கேட்டிருக்கிறார் சுமந்திரன். இலங்கை சட்டப் புத்தகத்தில் இப்படியும் ஒரு சட்டவிதி இருக்கிறதா ?

தெரிந்தவர்கள் கூறுங்கள்.

*- சிறீமதி ஷெரின் நதானியல்*

## கத்துக்குட்டி அரசியல்வாதிகளும் குத்துக் கரணங்களும்

அரசியல் சாணக்கியர் என சிலரால் வர்ணிக்கப்படும் மூத்த அரசியல்வாதியைப் பற்றி முதலில் குறிப்பிட வேண்டும். ஈழத்தமிழர் பிரச்சினை என்னவென்று தெரியாதவர் போல சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் சந்தர்ப்ப அரசியல் பேசும் இவரைப் பற்றி ஓரளவு தெரிந்தவன் என்பதால் கடந்த 2014 தமிழ் வானொலி ஒன்றில் திரு. சிறிதரன் (பா.உ) கலந்துகொண்ட நேர்காணல் (பேட்டி தொலைபேசி ஊடாக) ஒன்றில் திரு. சம்பந்தன் பற்றி எனது கருத்தைக் கூறினேன். அந்நேரத்தில் திரு. சிறீதரன் இவர் (சம்பந்தன்) பழுத்த அரசியல்வாதி என்று கூறினார். நான் எனது பதிலில் கூறியவை இப்போது 100% சரியாக இருக்கிறது. திரு. சம்பந்தன் பதவி மோகம் உள்ளவரா? பண ஆசை பிடித்தவரா? என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இன்னுமொருவர் ம.ஏ.ச எனப் பெயருடையவர். இவர் பணம் வாங்கிக் கொண்டு அடையாள அட்டை (தமிழர்களுக்கு) செய்து கொடுத்தார். (நான் 40 வருடங்கள் கொழும்பில் வசித்தவன்) இவர் எப்போது அரசியல் செய்தார். பெயரில் கூட (ம)க்களை (ஏ)மாற்றும் சு'மந்தி'ரன் (RUN) அரசியல் அனுபவம் இல்லாத காரணத்தினால் எப்படியெல்லாமோ பேட்டி கொடுக்கிறார்.

என்னால் இவர்களிடம் ஒன்றை மட்டும் தான் கேட்க முடியும். தயவு செய்து சுயநலத்துக்காக தமிழர்களின் நியாயமான 60 வருடகால உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தாதீர்களா. இப்படி எல்லாம் பத்திரிகையில் எழுதுவது கூட எனக்கு மன அழுத்தத்தைத் தான் தருகிறது. இருந்தும் இவர்கள் எல்லாம் திருந்தி தமிழ் இனத்துக்காக இதயசுத்தியுடன் போராட வேண்டும் என்பது தான் எனது வேண்டுகோள்.

*பி.கு. தனிப்பட்ட ரீதியில் எனக்கு எந்த அரசியல்வாதிகளுடனும் மன விரோதம் கிடையாது.*

*- நாதன் - தென் கென்சிங்டன்*

## ஏமாற்றுகிற வேலை

2009 பிறகு சம்பந்தருருக்கு தெரிந்தது பிரிக்கப்படாத ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற 3 வாசகங்கள் மட்டுமே. மற்றும்படி போர்க் குற்றம், இனப்படுகொலை அதைப் பற்றியெல்லாம் கவலை கிடையாது. அவரது உறவுகள் போரில் சாகவும் இல்லை பாதிக்கப்படவும் இல்லை. அவர் இப்போது தமிழினத்துக்க எதிரான கருத்துக்களையெ வெளியிட்டு வருகிறார். ததே கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களை ஏமாற்றுகின்ற வேலையைத்தான் சம்சும் கும்பல் செய்கிறது. மாவை அதற்கு ஒத்து ஊதுகின்றார்.

*- தி. மகேந்திரன்*

*ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....*
**Tel : 020 7043 4314**
*Email: info@orupaper.com*

## இனப்படுகொலை என்ற வார்த்தையை சர்வதேச அறிக்கைகளில் ஏன் தவிர்க்கின்றனர் ?

இங்கு நடந்தது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டால், அதனை உத்தியோகபூர்வ அறிக்கைகளில் பயன்படுத்தத் தொடங்கிவிட்டால், மறுபுறத்தில், உலகம், தமிழர்களை ஓர் இனமாக ஏற்றுக்கொண்டது என்றே அர்த்தம். அவ்வாறு ஓர் இனம் என்று தமிழர்களை ஏற்றுக்கொண்டால், இன்றைய ஜனநாயக வெளி சூழ்ந்த உலகில் ஓர் இனம் அனுபவிக்கும் சகல விடயங்களுக்கும் உலகம் இடம்கொடுத்தே ஆகவேண்டும். அதில் சுய நிர்ணய உரிமை முதன்மையானது. எனவே இனப்படுகொலை என்று சொல்லி விட்டால், இனம் என்ற அங்கீகாரம் தமிழர்க்குத் தானாகக் கிடைத்துவிடுகிறது. அதே போல சுயநிர்ணய உரிமையும் தானாகவே அங்கீகாரநிலைக்கு சென்றுவிடுகிறது. சுயநிர்ணய அங்கீகாரம் தமிழர்களை தானாகவே அடுத்த கட்டத்துக்கு கொண்டு சென்றுவிடும்.

எனவேதான் உலகம், இலங்கையில் நடப்பது இரண்டு மதங்களுக்கிடையிலான சச்சரவு எனவும், தமிழர்கள் இலங்கைத்தீவில் வாழும் ஓர் இனக் குழுமம் எனவும், போர் எனில் ஏற்படுகின்ற பக்கவிளைவுகள் தான் தமிழர்க்கு ஏற்பட்டுள்ளதே தவிர, இன அழிப்போ, இனப்படுகொலையே நடந்தமைக்கான போதிய ஆதாரங்கள் இல்லையெனவும் திரும்ப திரும்ப சொல்லுகின்றது. எனவே தமிழர்களும், தமிழர்கள் வாக்குப்போட்டு தம் ஏகப் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம், அதனையும் தாண்டி உலக அறமன்றங்களுக்கு அனுப்பியவர்களும் செய்ய வேண்டியதென்ன?

தமிழர்கள் ஓர் இனம் என்பதையும், இங்கு நடந்தது ஓர் இனத்துக்கு எதிரான அழிப்பு என்பதையும் நிறுவவேண்டும். உலகம் முழுவதும் பறந்து திரிந்து இதனை நிறுவுவதற்கான பொறிமுறை என்ன என்பதைத் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும். ருவாண்டாவில் பாலியல் வன்முறைகள்தான் அங்கு நடந்தது இனப்படுகொலை என நிறுவுவதற்கு முழுமுதற் காரணியாகக் கொள்ளப்பட்டது. அப்படி பார்த்தால் தமிழர்களிடம் எத்தனை ஆதாரங்கள்.....! ஆனால் நடப்பதென்னவெனில், நாங்கள் ஓர் இனமே அல்ல எனவும், நாங்கள் அழிக்கப்பட்டமைக்கு ஆதாரங்கள் இல்லை எனவும் வாக்குமூலம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.அதற்கு வாக்காளத்து வாங்கிக்கொண்டிருக்கிறோம்.

*- ஜெரா*

நண்பர்களே !

இன்று அமெரிக்கா, இந்தியா, மற்றும் மேற்கு நாடுகளின் கருத்தான "இலங்கையில் தமிழர்கள் இனவழிப்புக்கு உட்படுத்தப்படவில்லை" என்ற கருத்துக்கு ஆதாரவாக சட்டநிபுணர், இராஜதந்திரி, புத்திஜீவியாக உங்களால் கூறப்பட்டு, நாடாளுமன்றப் பிரதியாக உங்களால் தெரிவுசெய்யப்பட்ட சுமந்திரன் எங்கும் குரல் கொடுத்து வருகிறார்.

முன்னரும் தமிழரின் விடுதலை போரட்டத்தை நடாத்திய புலிகள் பயங்கரவாதிகள் என லக்ஷமன் கதிர்காமர் அமெரிக்கா சார்பில் பிரச்சாரம் செய்து, 1997ஆம் ஆண்டில் புலிகளை அமெரிக்கா சர்வதேச பயங்கரவாதிகள் எனப் பிரகடணப்படுத்தலை ஆரம்பித்து வைத்திருந்தது. அதனைத் தொடர்ந்து ஏனைய முதலாளித்துவ நாடுகளும் அதனைச் செய்து வந்தன. புலிகள் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டு விட்டன எனச் சிறீ லங்கா அரசைப் புகழும் இந்த 'சர்வதேசம்' இன்றும் புலிகளைத் தொடர்ந்து சர்வதேச பயங்கரவாத பட்டியலில் இட்டுத்தான் வைத்துவருகின்றன!! இது ஏன் என்பதும் சுமந்திரன், சம்பந்தன் கூட்டத்திற்கும், அதன் புத்திஜீவி ஆதரவாள தமிழர்களுக்கும்தான் விளங்கும்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்படவும், நீங்கள் ஆதரவு கொடுத்துவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் அதற்கு ஆதரவை வழங்கியிருந்தது. இவைகளைத் தொடர்ந்து தமிழர்கள் பேரழிவுக்கு உள்ளாக்கப்பட்டு, தமிழர்களின் விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்டது! இலங்கையின் விடயங்களை 2002ஆம் ஆண்டுமுதல் மாத்திரம் ஆராய்ந்து, இலங்கையில் நடைபெற்று வருவது "தமிழர் இன அழிப்பு அல்ல" என்பது பற்றி இந்தக் கூட்டமைப்பு புத்திஜீவித் தமிழ்ஆதரவாளர்களுக்குச் சுமந்திரனும், தமிழரசுக் கட்சியும் இரகசியமாக விளக்கித்தான் இருப்பர்!

தமிழரசுக் கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்து வந்தவர்களும், இன்று ஆதரவை வழங்குகின்றவர்களும், இலங்கையில் நடைபெற்று வந்தது, நடைபெறுவது, நடைபெறவிருப்பது 'தமிழர் இன அழிப்பு' அல்ல என்பதற்கான ஆதாரங்களை எமக்கு உங்கள் மௌனத்தைக் கலைத்து தயவு செய்து விளக்குவீர்களா?

*- சித்தாவத்தை உதயகுமார்*



ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, SEPTEMBER 25, 2015, ISSUE 250

## சிறு சோடனைகளுடன் ஒரு வெற்றுத் தீர்மானம்?

ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் அமெரிக்கா கொண்டுவரவிருக்கிற சிறிலங்கா தொடர்பான தீர்மானத்தின் இறுதி வரைபு நேற்று வெளிவந்திருக்கிறது. இனி இவ்வரைபில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுத்தப்படுவதற்குச் சாத்தியமில்லை என்கிற நிலையில், சிறிலங்கா அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடன் கொண்டுவரப்படவிருக்கும் இத்தீர்மானமானது பாதிக்கப்பட்ட தரப்பான தமிழ் மக்களைப் பொறுத்தவரை பலத்த ஏமாற்றத்தையளிப்பதாக அமைந்துள்ளது.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளரின் அறிக்கையில் சிறிலங்காவில் நடைபெற்ற பாரதூரமான மானிடத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் பற்றி பட்டியலிடப்பட்டிருந்தது. குறைந்த பட்சம் இவ்வறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்ட விடயங்களை அமுல்படுத்துமாறு கோருவதாக இத்தீர்மானம் அமையலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 'நம்பகத் தகுந்த முறையில் அமையக்கூடிய' ஒரு உள்ளக விசாரைணையை வலியுறுத்துவதுடன் தற்போதைய சிறிலங்கா அரசாங்கத்திற்கு புகழாரங்களைத் தெரிவிப்பதாக இத்தீர்மானம் அமைந்துள்ளது. பொறுப்புக்கூறல் விடயத்தில் சுயாதீனத்தன்மையைப் பேணுவதற்காக பொதுநலவாய நாடுகளினைச் சேர்ந்த சட்டவல்லுனர்கள், நீதியாளர்களை பயன்படுத்துமாறு வழங்கப்பட்டுள்ள ஆலோசனை மாத்திரமே இத்தீர்மானம் குறிப்பிடுகிற சர்வதேச ஈடுபாடாக அமைந்திருக்கிறது.

மேற்கொள்ளப்படவிருக்கும் விசாரணைகள் தொடர்பிலும், நாட்டில் நல்லாட்சி, மனிதவுரிமை பேணுதல் போன்ற விடயங்களில் நிலமையைக் கண்காணித்து 2016ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெறவுள்ள 32வது கூட்டத் தொடரில் ஒரு வாய்மூல அறிக்கையும், 2017ம் ஆண்டு ஜனவரியில்நடைபெறவுள்ள 34வது கூட்டத் தொடரில் முழுமையான அறிக்கையும் ஐ.நா. மனிதரிமை ஆணையாளரிடமிருந்து கோரப்படவுள்ளது. இவ்வறிக்கைகள் வெறும் சம்பிரதாயபூர்வமான அறிக்கைகளாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதில் பின்னணியில் நின்று செயற்பட்ட அமெரிக்காவும், மற்றைய மேற்குநாடுகளும், சிறிலங்காவுடன் இணைந்தே இவ்வறிக்கையைத் தயாரித்துள்ளதுடன். அதற்கான தயாரிப்பு வேலைகளில் கடந்த ஜனவரியிலிருந்து செயற்பட்டுவருகின்றமை அறிக்கையில் புகழாரத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்து தெரிகிறது. அறிக்கையை மனதிற்கொண்டு, வெளித்தரப்பு ஆலோசனைகளுடன் மேற்கொள்ளப்பட்ட சிறு நகர்வுகளைக்கூட பாராட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நீதியென்பது அரசியல்மயப்பட்டதாகவும், நாடுகளின் நலன் சார்ந்ததாகவும் உள்ளபோது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு ஐ.நா. சபை போன்ற சர்வதேச மன்றங்கள் உதவப் போவதில்லை என்பதே கடந்த ஆறுவருடகால சர்வதேசச்செயற்பாடுகளிலிருந்து தமிழ்மக்கள் கற்றுக்கொண்ட பாடமாக இருக்கும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*முதலிலை கிட்ட்டியிலை நடந்த விசயம் ஒண்டைச்சொல்லோணும். போன பேப்பர் வந்த நேரம் சவுத் ஹரோவிலை இருக்கிற தமிழ்க் கடையொன்றுக்கு எங்களுக்கு தெரிஞ்ச ஒராள் போயிருக்கிறா. அங்கை பேப்பரை தேடிப்பார்த்திருக்கிறா. காணேல்லை. பிறகு சாமானுகளை வாங்கிக்கொண்டு கவுண்டருக்கு போனால் அவ வாங்கின வாழையிலையை பேப்பரால் சுத்திக் குடுத்திருக்கிறா கவுண்டரிலை நிண்ட பொம்பிளைப்பிள்ளை. "இதென்ன இந்தக் கிழமை வந்த* ***ஒரு பேப்பர்*** *எல்லோ? அதாலை வாழையிலைச் சுத்திறதோ?" எண்டு கேட்டதற்கு, அந்தப் பொம்பிளைப்பிள்ளை சாவாகசமாகச் சொல்லியிருக்கிறா. "ஓ அது பிறீ பேப்பர்". அதுக்கு எங்கட வாசகி "பிறீ பேப்பர்தான் ஆனால் அது சனம் வாசிக்கிறதுக்கோ.. அல்லது வாழையிலை சுத்துக் குடுக்கிறத்துக்கோ" எண்ணு கேட்டுட்டு வாழையிலையும் வாங்காமல் வந்திருக்கிறா.*

*கடையிலை இருந்த பொம்பிளைப்பிள்ளைக்கு பத்திரிகை படிக்கிற பழக்கமிருக்குதோ அல்லது எழுத்துக்கூட்டி வாசிக்கத்தான் தெரியுமோ எண்டது எங்களுக்குத் தெரியாது. ஆனால், பத்திரிகைகள் என்னத்துக்கு பிரசுரிக்கப்படுகிறது எண்டதாவது தெரிஞ்சிருக்கோணும் எண்டு எதிர்பார்க்கிறம். இது நெடுகிலும் நடக்கிற ஒரு விசயம்தான். பாடப்புத்தகத்தை கடலை விற்கிற ஆச்சிக்கு குடுத்து கடலை வாங்கியவர்களும். ஆத்திசூடிப் புத்தகத்தை கிழிச்சு கடலை சுருட்டிக் கொடுத்த சம்பவங்களும் ஊரிலை நடந்திருக்கு. இந்த விசயங்களிலை எங்கடை சனம் கொஞ்சமாவது கவனத்திலை எடுக்க வேண்டும் எண்டதற்காக இதை எழுதுகிறமே தவிர எல்லாரும் உடனடியாக திருந்திவிடுவினம் எண்டு நாங்கள் நம்பேல்லை. இருந்தாலும் இப்பிடி நடக்கிற கடைகளிலை பேப்பர் வைக்காமல் விடுறது எண்டு முடிவெடுத்திருக்கிறம்.*

*இந்தப் பேப்பர் இருநூற்றைம்பதாவது பேப்பர். எண்ணுக்கணக்குக்கு எண்டில்லாமல் உண்மையான வளரச்சியை காட்டுவதாக இது அமையவேணுமெண்டால் உங்களின்ரை ஒத்துழைப்புடன் தான் நாங்கள் அடுத்த கட்டத்திற்கு போக முடியும். அதற்கு எல்லா விசயத்திலும் உங்களது பங்களிப்புகள் அதிகரிக்க வேணும். அதுகளைப் பற்றி முந்தி முந்தி எழுதியிருக்கிறம் ஆனபடியாலை திரும்ப இங்கை எழுதேல்லை.*

***ஒரு பேப்பர்*** *ன் இணையதளம் திரும்பவும் சில தொழினுட்ப பிரச்சனைக்கை இருக்குது. அதை சரிப்படுத்திற வேலையளை மெள்ள மெள்ளச் செய்து கொண்டு வரைக்கும். அதுவரைக்கும் புது இதழ்களின் இணைப்பை எங்கடை பேஸ்புக் பக்கத்தில் பார்க்கலாம்.*

*வேற என்ன..*

*அடுத்த பேப்பரில் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# Road To Reckoning



**Tamil Guardian**

The release of the long awaited OHCHR investigation into Sri Lanka (OISL) report last week is a monumental moment for the victims of mass atrocities on the island and all those who continue to work towards seeing justice served. The crucial document, which was mandated by a UN resolution, meticulously outlines the gravity of the crimes perpetrated, and lays down the path towards accountability for them. Clear decisive action must now be taken to follow it.

The report is damning. Crimes committed before and after the climax of the armed conflict were laid bare. The suffering that Tamils endured, including the state's calculated and deliberate shelling of hospitals, the deprivation of food and medicines, extra judicial killings, torture and the "particularly shocking" use of sexual violence, all made for grim reading. As the report notes, the Sri Lankan military "retains an oppressive presence in the war-affected areas of the north and east… maintaining a culture of surveillance and harassment of the local population and civil society".

By Sri Lankan Foreign Minister Mangala Samaraweera's own admission, troops "were acting on orders they received". The report states, the gravity, consistency and widespread pattern of the attacks, required resources, coordination, planning and organisation. The High Commissioner said this all points towards crimes of a grave and systematic nature "with a design at various levels of the state". The victims have clearly articulated that this amounts to genocide - a conclusion that the High Commissioner did not rule out upon future criminal investigation. The charge now requires thorough judicial scrutiny. His office was unequivocal that Sri Lanka cannot investigate these crimes domestically.

Despite more cordial relations with the office since the new government came to power, Colombo's reluctant proposals fall far short of what the OISL outlined as the bare minimums needed. If Sri Lanka is sincere in dealing with accountability, it must heed those recommendations without reserve. The doors must be open to an international criminal investigation, with decisive international involvement at all levels, including international judges that will prosecute international crimes.

Any mechanism that proceeds without these clearly defined positions risks falling the way of previous commissions. Mr Samaraweera's assertion that the burden of criminal investigation continues to lie with the state, will stir no confidence in the victims that this occasion will be different from the past. Indeed, whilst even announcing these proposals, Prime Minister Ranil Wickremesinghe lamented the previous government's agreement for a domestic investigation, and President Sirisena boasted of saving military commanders from being named in the report. These statements will only compound the victims scepticism in any domestic process. As the OHCHR noted, this government too denied OISL investigators entry. This will not assuage the fears of witnesses, many of whom risked their lives and their liberty to ensure the publication of this report, or instil confidence in testifying before any domestic mechanism. Their safety must be guaranteed by the international community and a process that all victims have facilitated and have faith in implemented. Without a process that wins the confidence of those who suffered the most at the hands of the state, witness participation will not exist.

Meanwhile steps must be taken in parallel to win the confidence of beleaguered victims, including the return of unlawfully occupied land by the military, an immediate halt on ongoing torture, repealing the Prevention of Terrorism Act and releasing the names of Tamil detainees. Allowing the OHCHR to establish a presence in the North-East and ratifying the Rome statute would be welcome gestures that send a wider signal of co-operation with the international community. Through the continuous monitoring of tangible deliverables, the international community must also hold Sri Lanka to its commitment given to the UNHRC of non-recurrence by seeking a political solution that addresses the grievances of the Tamil people.

Whilst the recognition of the grave nature of these crimes and the suffering faced is undoubtedly welcome, without a concrete path to justice, it will provide little solace to the victims. Indeed, over the last six years, in the face of continuing harassment and oppression, it is they who have tirelessly repeated their calls for an international process of justice.

An internationally mandated investigation has now acknowledged that the crimes cannot be tackled by a domestic mechanism - a rationale that Tamils had consistently argued was the case. It was the international community that mandated the OISL report and it now requires those members to follow through with robust action.

The report states, the gravity, consistency and widespread pattern of the attacks, required resources, coordination, planning and organisation.

The failures of the international community have been documented in the Petrie report. The OISL report now signals a historic juncture where those failures can be put right and justice that is long overdue served. Only a UN Human Rights Council resolution, that incorporates all the recommendations made by the OISL team, will drive change in Sri Lanka. The crimes are simply too grave for any other mechanism to take its place. Sustained international pressure, the single largest factor that has been key to driving progress on Sri Lanka, cannot falter now. Only that can bring about an enduring peace to the island and restore the Tamil people's much worn faith in the international community.

# Anti-Austerity Victory Poses Challenge for Right-Wing Tamil Leadership



By TU Senan

Did Labour lose the general election in Britain because it was too left-leaning as was claimed by the party's then leadership ? This question has now been decisively answered by left-winger Jeremy Corbyn's stunning victory as Labour leader. Liz Kendall, basically a mini-me for the Tory Prime Minister not just in policies but also in mannerisms, only managed to secure a 4% vote against a whopping 59% vote for Jeremy.

Despite the fact that the Tories won the election with only 24% of the electorate, the weakest victory since 1918, all the right-wingers across the Westminster political spectrum hailed their victory as proof that Britain was shifting to the right. The Labour leadership tried to use this as an opportunity to push their party further to the right.

In reality one of the dominant themes of the general election was the lack of difference that existed between the Tories and New Labour. Only 43% of young people even voted. Millions stayed away. On the burning question of austerity Labour was mostly in agreement with the Tories on most issues. For five years Labour-led councils have been relentlessly passing on Tory cuts. Hence in Scotland they were derided as "Red Tories".

Jeremy_youthMargaret Thatcher said that her biggest achievement was Tony Blair and New Labour – referring to the successful Torification process through which Labour, once a workers' party at its base, albeit with a pro-capitalist leadership, was transformed into an out and out capitalist party. The former leader Ed Miliband just applied the icing to the cake when he changed the election process within the party by removing the last shred of the voice of the organised working class, the trade unions, from the decision making process. The leadership election that followed Labour's defeat was the first outing of the new method and the contest was opened up to anyone who paid £3 for a vote as well as members and those who signed up inside the affiliated unions.

Initially Jeremy Corbyn seemed somewhat reluctant to enter the leadership contest and he was not expected to get on the ballot paper given that only nine of the party's MPs are in the socialist group and 35 nominations were required. But the Blairites played a last minute 'trick' by voting for Jeremy. They are known for tricks and spinning. However this time it backfired in such a way that no one –including Jeremy Corbyn – expected. One Blairite who voted for him later called herself a "moron"! Support for the left-winger began to grow rapidly despite Tony Blair claiming Corbyn supporters need a "heart transplant". Too many heart transplants needed in the end, as one of the journalist put it.

Every attempt by the right to discredit Corbyn's campaign and anti-austerity message backfired. A funny appeal by Blair pleaded "even if you hate me" don't vote for Jeremy was destined to rebound. He later wrote that he didn't understand what was going on.

> Jeremy Corbyn and John McDonell were two MPs who have shown consistent support for the Tamil Solidarity campaign due to the principled position they have on national rights and human rights, not because they wanted something in return. Jeremy Corbyn gave his support to various minority organisations in Britain, including Kurdish/Turkish organisations.

Recent history is full of examples like this. The masses moved against the powerful dictators in the Middle East for example. Every country in the world restricts democratic rights to various degrees in one form or another. Despite this, the masses move to make their mark on history whenever they believe their involvement will become meaningful. Jeremy Corbyn talked about free university education, a £10 an hour minimum wage, defending the NHS and nationalising the gas and electric companies – measures that would make an enormous difference to the living standards of millions of people.

In Sri Lanka people used the limited opportunity offered them at the election to put an end to the possible emergence of a dictatorship. Tamils, in particular, mobbed the ballot boxes to mark their revolt against the old regime. In Scotland, where the independence referendum was seen as a chance to strike against Westminster-led austerity, almost an uprising was in the air. Elements of this also developed during the Jeremy Corbyn Labour leadership campaign.

The right-wing had propagated the idea that there is no alternative to austerity. An FT columnist Janan Ganesh, for example, arrogantly dismissed the possible emergence of an anti-austerity movement. He wrote in August: "As for the popular insurrection against austerity, your columnist invites you to wake him up when it happens." They will never wake up from this self-imposed coma! But creatures like him are establishing another clarity among the masses ie the unbridgeable gulf that exists between the possessing class of the 1% of the population and the rest who provides the labour needs of the planet.

The idea that we – the working people – should not pay for the crisis that was caused by the billionaires has been growing along with the growth of austerity measures. People simply refuse to accept that the austerity is inevitable. From the Occupy movement across the world in 2011, to Corbyn's campaign in Britain in the last months, this fightback against injustice is the engine. Anti-austerity feeling emerged as the dominant feature of "Corbynmania".

Tamils living in Britain are not exempt from austerity or from the divide in society. While numerous Tamils will be enthused by Jeremy Corbyn's victory, the so-called 'leaders' are tightening their ties with the Tories. The British Tamil Forum's appointment of arch right-winger Lee Scott as its 'face' reveals the nature of the organisation's leadership. Scott voted to cut benefits, against creating jobs for young people, for war and against taxes on the super-rich bankers.

Another close ally in the so-called all-party representatives for Tamils (APPGT) is John Mann – another Blairite right-winger. In fact it is this MP who wanted to stop the leadership contest by claiming that the Militant Tendency (now the Socialist Party) is trying to join Labour in tens of thousands. So much is his love for democracy and human rights that he is a regular feature at the Mullivaikal day, every May in Trafalgar square. But John Mann who has taken a right-wing position on almost every issue in parliament is now claiming that the party under Jeremy will have "more positions than the kama sutra" and that "he is not remotely up for the job". In contrast to him Jeremy has taken a progressive position on every issue in the parliament, whether its about the trade unions, caste or race relations legislation or the debate on human rights. Jeremy never played the "double game" of voting against human rights and then pretending to be a defender of it among some sections for some votes and benefits. Jeremy Corbyn and John McDonell were two MPs who have shown consistent support for the Tamil Solidarity campaign due to the principled position they have on national rights and human rights, not because they wanted something in return. Jeremy Corbyn gave his support to various minority organisations in Britain, including Kurdish/Turkish organisations.

Why then, you could ask, do some Tamil organisations such as the GTF and BTF appear to not care less about Jeremy Corbyn and other left-wing MPs who gave their full support regardless? Why is the so-called APPGT so full of good-for-nothing Tories? Has this group ever taken any action whatsoever regarding the false promise that the current PM made to Tamils?

> While numerous Tamils will be enthused by Jeremy Corbyn's victory, the so-called 'leaders' are tightening their ties with the Tories. The British Tamil Forum's appointment of arch right-winger Lee Scott as its 'face' reveals the nature of the organisation's leadership.

Just like the TNA, the 'leaders' of most of the so-called Tamil organisations are right wing. Some of them, just like Sambanthan, are manoeuvring against left wingers to maintain control for themselves. More needs to be written about this process later. But numerous questions may have arisen in the minds of the Diaspora who watched the Labour leadership debate. With the idea that an anti-austerity alternative is possible now on the agenda nothing will be the same. Tamil workers, young people and all those suffering austerity must join this fight. And 'leaders' should be aware of what's coming to them.

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: ORU PAPER Ltd
Bank: HSBC
A/C: 02211556
S/C: 40-07-04

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

கனடா
**தயா - அரவிந்தன் - சிந்து**

பொறுப்பாசிரியர்
**- கோபி -**

விளம்பரம்
**அஜந்தா**

அச்சு
**தர்சினி (கனடா) - சுகன்யா**

வடிவமைப்பு
**மயூரன் - யுகன்**

முகப்பு வடிவமைப்பு
**seven zero graphics**

விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**

நிதி – நிர்வாகம்
**அஜந்தா**

வழங்கல்
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
**லண்டன் 020 7043 4310**
**கனடா 416 613 2850**

தொலைநகல் (Fax)
**லண்டன் 020 7043 4312**
**கனடா 416 438 7855**

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

மின்னஞ்சல்:
**info@orupaper.com**

இணையம்:
**www.orupaper.com**


*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# ஐ.நா. மனித உரிமை ஆணையம் ஒரு நம்பகமான அமைப்பு என்பதனை நிரூபிக்க வேண்டும்!

**அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை**

*ஐ.நா. மனித உரிமை ஆணையம் ஒரு நம்பகமான, நேர்மையான அமைப்புதான் என்பதை நிரூபிப்பதன் மூலம் மட்டுமே, அதன் மதிப்பும் மாண்பும் காப்பாற்றப்படும் என ஆணையாளரின் அறிக்கை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் வெளியிட்டுவரும் கருத்துகள் பற்றி அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வறிக்கையின் முக்கிய விடயங்களை இங்கு தருகிறோம்:*

இலங்கை தொடர்பான ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தின் விசாரணை அறிக்கை முழுமையான ஒன்றல்ல என்றபோதிலும், நேரடியாகவும் வெளிப்படையாகவும் விசாரிப்பதற்கான வாய்ப்பை சிங்கள இனவாத அரசு மறுத்த நிலையிலும் நடத்தப்பட்ட விசாரணை ஒன்றின் அறிக்கை என்கிற வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. அந்த அடிப்படையிலேயே அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை அதை வரவேற்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் நேரடியாக சாட்சியம் அளிக்க முடியாத நிலையிலேயே இந்த விசாரணையை நடத்த வேண்டியிருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் செயித் அல் உசேன் கவலையுடன் இதைக் குறிப்பிட்டிருக்கிறார். அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் மற்றும் உளவுத் துறை கண்காணிப்புகளின் மூலம், பாதிக்கப்பட்ட மக்களோ, நேரடி சாட்சிகளோ இந்த விசாரணையில் பங்கேற்பதை முந்தைய அரசு தடை செய்ததையும் ஆணையர் சுட்டிக்காட்டியிருக்கிறார். நேரடியான விரிவான விசாரணை ஒன்று, குறித்த காலக்கெடுவுக்குள், நடத்தப்பட வேண்டியது அவசியமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய குரலைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவாகவே இருந்தது என்பதிலிருந்து, நடந்திருப்பது ஒரு சமச்சீரற்ற விசாரணை என்பது ஊர்ஜிதமாகிறது. அதனால்தான், 'நடந்தது இனப்படுகொலை தான் என்று கருத இன்னும் அதிக ஆதாரங்கள் தேவை' என்கிறார் ஆணையர். இலங்கை அரசு போட்ட முட்டுக்கட்டைகளே, ஆதாரங்களைத் திரட்டத் தடையாக இருந்தன - என்று அவர் சொல்வதிலிருந்து இந்த விசாரணை அறிக்கை ஒரு தொடக்கப் புள்ளி மட்டுமே என்பதை நம்மால் அறிய முடிகிறது.

சர்வதேசத்துடன் ஒத்துழைக்க ரணில் - மைத்திரி இருவரும் தயாராக இருப்பதாகச் சொல்லப்படுவதால், கூடிய விரைவில் நேரடி விசாரணை ஒன்று வடகிழக்கில் நடத்தப்படும் என்று எங்கள் அவை நம்புகிறது. அப்படியொரு விசாரணை நடக்கும் போது, நடந்தது இன அழிப்பு தான் என்பது உறுதி செய்யப்படுவதுடன், எமது தாயகத்தின் விடுதலைப் போராட்ட வீரர்கள் மீதான குற்றச்சாட்டுகள் பிழையானவை என்பதும் நிரூபணமாகும்.

இலங்கையின் தலைநகரில் அரசு நடத்திய அதிகாரபூர்வ செய்தியாளர் சந்திப்பின் போது, மனித உரிமைகள் பேரவையின் நேர்மையையும் நம்பகத்தன்மையையும் அவமதிக்கும் விதத்திலான குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி மைத்திரிபாலா முன்வைத்திருக்கிறார்.

"ஐ.நா. அறிக்கையில் காரம் குறைக்கப்பட்டதற்கு எங்கள் அரசின் நடவடிக்கைகள் தான் காரணம். எங்களால்தான் ஜனவரி 8க்கு முன் தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கையின் காரத்தைக் குறைத்தே ஆக வேண்டிய நெருக்கடி உருவானது. தங்களது பெயர்கள் அறிக்கையில் குறிப்பிடப்படலாம் என்று படைத்தளபதிகள், பாதுகாப்பு அதிகாரிகள், மூத்த அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட சிலர் அச்சத்தில் இருந்தனர். அவர்களில் எவரது பெயரும் அறிக்கையில் இடம் பெறாததற்கு நாங்கள்தான் காரணம்.ஜனவரி 8க்கு முன் இருந்த விதத்திலேயே விசாரணை அறிக்கை வெளியாகியிருந்தால், நாடும் மக்களும் சில முக்கியஸ்தர்களும் கடும் விளைவுகளை எதிர்கொண்டிருப்பர்" என்று ஊடகவியலாளர்களிடம் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி.

நாடாளுமன்றத் தேர்தல் சமயத்திலேயே, 'மின்சாரக் கதிரையிலிருந்து மகிந்த ராஜபக்சவை நாங்கள்தான் காப்பாற்றியிருக்கிறோம்' என்று மைத்திரியும் ரணிலும் பேசினர். அதை எமது அவை தேர்தல் காலப் பரப்புரையாகவே கருதியது. இப்போது, 'நாங்கள் கொடுத்த நெருக்கடியால்தான் விசாரணை அறிக்கை நீர்த்துப் போனதாக இருக்கிறது' என்று ஜனாதிபதி பகிரங்கமாகப் பேசியிருப்பதை, ஆணையத்தின் நம்பகத்தன்மை குறித்த நேரடிக் குற்றச்சாட்டாகவே எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

அதே கூட்டத்தில் பங்கேற்ற வெளியுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவும், ஜனாதிபதியின் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தியிருக்கிறார். 'ஜனவரி எட்டுக்கு முன் மட்டுமல்ல, மார்ச்சில் இந்த அறிக்கை வெளியாகியிருந்தாலும் கடும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும்' என்று பேசியிருக்கிறார் அமைச்சர். இவர்தான், ஜெனிவாவில் நடக்கும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக் குழுவுக்குத் தலைமை தாங்குகிறார் என்பதும், இலங்கை அரசின் கருத்துக்களை அந்த மதிப்புமிக்கப் பேரவையில் தெரிவிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள் ஆணையர் தெரிவித்துள்ளபடி, வடகிழக்கில் ஒரு விரிவான நேரடி விசாரணை நடைபெறும் பட்சத்தில், 'அந்த விசாரணையால் எந்தப் பயனும் இராது, எந்த விசாரணையாக இருந்தாலும் இறுதி அறிக்கை நாங்கள் விரும்புகிற விதத்தில்தான் வெளிவரும். சர்வதேச விசாரணை என்று நம்பி சாட்சியமளித்துவிட்டு அதன்பின்விளைவுகளை அனுபவிக்காதீர்கள்' என்று தாயகத் தமிழ் மக்களை மறைமுகமாக எச்சரிப்பது இதன் நோக்கமாக இருக்கலாம்.

எங்களால் தான் விசாரணை அறிக்கை நீர்த்துப் போயிருந்தது - என்று வெளிப்படையாக இலங்கை ஜனாதிபதி கூறுவதைக் கண்டிக்காவிட்டால், இலங்கையின் அந்தக் கூற்று தான் உண்மையானது என்பதை ஏற்றுக் கொண்டதாகிவிடும். அப்படியொரு நிலையில், இந்த விசாரணை அறிக்கையின் முதல் வடிவம் என்ன, அதில் எவரெவர் பெயரெல்லாம் இடம்பெற்றிருந்தது என்பதை ஆணையம் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அந்த முதல் அறிக்கையை மாற்றச் சொல்லி நெருக்கடி கொடுத்தவர்கள் யார், அதன் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

மனித உரிமை ஆணையம் - ஒரு நம்பகமான, நேர்மையான அமைப்புதான் என்பதை நிரூபிப்பதன் மூலம் மட்டுமே, அதன் மதிப்பும் மாண்பும் காப்பாற்றப்படும்.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## எல்லாம் தகரும் தருணங்களில்!

விதி வலியது. அது சில சமயங்களில் நம் வாழ்க்கையை அப்படியே புரட்டிப் போட்டு விடும். அந்த சமயங்களில், இருந்தது எல்லாம் தகர்ந்து போய் ஒரு பூஜ்ஜியமாய், எதிர்கால வாழ்க்கையே ஒரு கேள்விக்குறியாய் போய் விடுவதுண்டு. இனி ஒன்றுமில்லை, வாழ ஒரு வழியுமில்லை என்கிற நிலைக்கு வந்து நமக்கு நேர்ந்ததை ஜீரணிக்கவும் முடியாமல் நம்மை திகைக்க வைத்து விடுவதும் உண்டு. அது போன்ற ஒரு நிலை பிரபல ஆங்கில எழுத்தாளர் ஒருவரின் நல்ல கதை ஒன்றில் முக்கியப் பாத்திரத்திற்கு வந்து விடுகிறது.

அவன் ஒரு பெரிய தேவாலயத்தைப் பராமரிக்கிற வேலையில் இருந்தான். சிறு வயதிலிருந்தே அங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்த அவன் வயோதிகப் பருவத்தையும் அடைந்து விட்டிருந்தான். அந்த தேவாலயத்திற்கு ஒரு பாதிரியார் புதிதாகப் பொறுப்பேற்று வந்தார். அவர் தேவாலயத்தைப் பராமரிக்கிறவன் எழுதப் படிக்கத் தெரிந்தவனாக இருக்க வேண்டும் என்று உறுதியாக எண்ணினார். ஆனால் இவனுக்கோ எழுதப்படிக்கத் தெரியாது.

அவர் அவனை அழைத்து ஆறு மாத காலத்திற்குள் அவன் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும், இல்லா விட்டால் அவன் வேலையை விட்டு நீக்கப்படுவான் என்றும் கறாராகச் சொல்லி விட்டார். இந்த வயதில் இனி எழுதப்படிக்கக் கற்றுக் கொள்வது கஷ்டம் என்று அவன் அவரிடம் மன்றாடிப் பார்த்தான். கல்வியறிவு மிக முக்கியம் என்று நினைத்த அவர் அவன் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. கற்றுக் கொள் இல்லையேல் வேலை இல்லை என்று முடிவாகவே சொல்லி விட்டார். ஆனால் அவனால் கற்றுக் கொள்ள முடியவில்லை. கடைசியில் வேலையில் இருந்து நீக்கப்பட்டான்.

அவனுக்கு அந்த தேவாலய வேலையைத் தவிர வேறு எந்த வேலையும் தெரியாது. வேலையை இழந்து தேவாலயத்தை விட்டு வெளியே வந்த அவன் மனதில் இருந்த துக்கத்திற்கு அளவில்லை. பெரிய சேமிப்பும் கிடையாது. அவனை ஆதரிக்கிறவர்களும் இல்லை. கவலையுடன் அவன் தன் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தான். நடந்து செல்கையில் சுருட்டுப் பிடிக்கும் பழக்கம் உள்ள அவனுக்கு சுருட்டுப் பிடிக்க வேண்டும் என்று தோன்றியது. தன்னுடைய பையில் துழாவினான். சுருட்டு இல்லை.

சரி கடையில் இருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணிதேடி நடந்தான். சுமார் இரண்டு மைல் தூரம் நடந்தும் அந்தப் பகுதியில் அவனால் சுருட்டு விற்கும் கடை ஒன்றைக் கூடப் பார்க்க முடியவில்லை. தன்னைப் போல் எத்தனை பேர் இந்தப் பகுதியில் சுருட்டுக் கடை இல்லாமல் அவதிப்பட்டிருப்பார்கள் என்று எண்ணிய அவன் உடனடியாகத் தன்னிடம் இருந்த சிறிய சேமிப்பில் அந்தப் பகுதியில் சிறியதாக ஒரு சுருட்டுக் கடை வைத்தான்.

அந்தப் பகுதியில் சுருட்டுக் கடை வேறு எதுவும் இல்லாததால் அவனுக்கு வியாபாரம் நன்றாக நடந்தது. கடையை விரிவுபடுத்தினான். வேறு பொருள்களையும் சேர்த்து விற்றான். அவன் விரைவிலேயே பெரியபணக்காரன் ஆகிவிட்டான்.வங்கியிலும் அவன் கணக்கில் பெரும் தொகையை வைத்திருந்தான்.

தன் வங்கிக் கணக்கை சரி பார்க்கிற விஷயமாக ஒரு நாள் அவன் வங்கிக்குச் சென்றிருந்த போது வங்கி அறிக்கை ஒன்றில் அவன் கையெழுத்து இட வேண்டி இருந்தது. அவன் தனக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்று சொல்லி அதைப் படித்துக் காட்டும் படி வங்கி அதிகாரியைக் கேட்டுக் கொண்டான்.

திகைப்படைந்த அதிகாரி “எழுதப்படிக்கத் தெரியாமலேயே இவ்வளவு பெரிய பணக்காரர் ஆகி விட்டீர்களே, தெரிந்திருந்தால் இன்னும் என்ன ஆகியிருப்பீர்களோ” என்று சொன்னார்.

“எழுதப்படிக்கத் தெரிந்திருந்தால் தேவாலயத்தில் பணியாளனாகவே இருந்திருப்பேன்” என்றான் அவன்.

இது என் மனதில் நின்ற ஒரு கதை. நான் ஆரம்பத்தில் சொன்னது போல தேவாலயப் பணிபோன போது அவன் வாழ்க்கையில் எல்லாமே தகர்ந்து போய் எதிர்காலமே கேள்விக் குறியாக நின்றது. படிக்கத் துவங்கும் வயதோ, அதற்குரிய திறமைகளோ இல்லாத அந்த முதியவன் வாழ்க்கையே அஸ்தமனமாகி விட்டது என்று நினைத்திருந்தால் அது ஆச்சரியமல்ல. தேவாலயப் பணி தவிர வேறு வேலை தெரியாத அவனுடைய அந்த நேரத்து நிலைமை பரிதாபகரமானது தான். ஆனால் சுருட்டு பிடிக்க நினைத்து அதை வாங்க கடை ஒன்றும் அப்பகுதியில் இல்லாத போது 'இந்த சின்ன விஷயத்தில் கூட என் விதி எனக்கு சதி செய்கிறதே. எல்லாம் என் நேரம்” என்று வருந்தி நிற்பதற்குப் பதிலாக அந்த சூழ்நிலையில் வாழ்க்கையின் அடுத்த நிலைக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பாக அவன் பயன்படுத்திக் கொண்டது அவனுடைய புத்திசாலித்தனம். இது போன்ற சூழ்நிலைகள் பலருக்கு வரலாம். நல்லதாக, சௌகரியமான ஒரு வேலையில் பல வருடங்கள் வேலை செய்து அதிலேயே வாழப் பழகிய பின் எதிர்பாராமல் அந்த வேலையைப் பறி கொடுக்க நேரிடலாம். அப்படி ஒரு நிலை வரும் என்று சிறிதும் எதிர்பார்த்திராத போது அது ஏற்படுத்தும் எதிர்காலப் பயம் சாதாரணமானதல்ல. நின்று கொண்டிருக்கும் தரையேபோய் எல்லாம் தகர்வது போலக் கூட சிலர் உணரக்கூடும். ஆனால் அது போன்ற சந்தர்ப்பங்களில் சில உண்மைகளை நினைவு வைத்திருப்பது நல்லது.

எனவே எல்லாம் தகரும் தருணங்களில் நிலை குலைந்து போய் விடாதீர்கள். நடப்பதை ஜீரணிக்க முடியாமல் திண்டாடாதீர்கள். எதையும் நம்பி யாரும் இல்லை என்று தைரியமடையுங்கள் அமைதியாக அந்த இன்னொன்றைத் தேடுங்கள். அந்த நேரங்களில் அமைதியிழக்காமல், நம்பிக்கை இழக்காமல் நீங்கள் அப்படித் தேடுவீர்களானால் பெறுவது இழப்பதற்கு முன்னிருந்த நிலையை விட உயர்வான நிலையாகவே இருக்கும்.

- என்.கணேசன்

# அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவாரா ஜெரமி கோர்பின் ?

**கோபி**
*ஒரு பேப்பர்*




பிரித்தானிய அரசியலில் மாத்திரமல்ல, சர்வதேச மட்டத்திலும் கவனத்தைப் பெறுகிற ஒரு நகர்வாக திரு. ஜெரமி கோர்பினின் தெரிவு அமைந்திருக்கிறது. செப்ரெம்பர் 12ம் திகதி தொழிற்கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு பிரித்தானியப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகியிருக்கிறகோர்பினின்வெற்றியைதனியொருவரின் வெற்றியாகக் கருதமுடியாது. மாறாக, அவரது தெரிவு பிரித்தானியாவில் அரசியற்கொள்கை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முனைப்பாகவே நோக்கப்படுவதனால், ஐரோப்பாவிலுள்ள மற்றைய நாடுகளின் அரசியற் தலைமைகளாலும் கூர்ந்து அவதானிக்கப்படுகிறது. இருப்பினும் அவரது தலைமைத்துவம் எத்தனை காலத்திற்கு நீடிக்கும் என்ற பேச்சு தொழிற்கட்சியின் உள்வட்டங்களிற்கூட இன்னமும் இருந்து வருகிறது. அவரால் நிழல் அமைச்சரவையை அமைக்க முடியுமா என்ற கேள்வியும் அது அமையப்பெற்ற பின்னர், தொழிற்கட்சியின் வருடாந்த மாநாடு வரைக்குமாவது அவர் தலைமைப்பதவியில் தாக்குப் பிடிப்பாரா என்று ஐயமுறுமளவிற்கு நிச்சயமற்றதன்மை நிலவி வந்தபோதிலும் யாரும் எதிர்பார்க்காதளவிற்கு அவரது தலைமைத்துவம் நாளுக்கு நாள் உறுதியடைந்து வருவதாகவே தெரிகிறது. அடுத்த வாரம் பிறைற்றன் நகரில் நடைபெறவுள்ள தொழிற்கட்சியின் வருடாந்த மாநாட்டில் அவர் தலைமை உரையை நிகழ்த்தவிருக்கிறார். அங்கும் அவருக்கான பெரும் ஆதரவு வெளிப்படுத்தப்படும் என்றே நம்பப்படுகிது.

கடந்த பல தசாப்தங்களாகவே நடுவநிலையுள்ள வலது சாரிகள் (Centre Right), அல்லது நடுவநிலையிலுள்ள இடதுசாரிகள் (Cemtre Left) ஆகிய இரு அரசியல் கொள்கைகளைக் கொண்ட தலைமைத்துவங்களுக்கிடையில் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைகளைச் சார்ந்து ஆடிக்கொண்டிருந்த பிரித்தானியாவின் மைய அரசியல் கோர்பினின் தலைமைத்துவத்தின் மூலம் இடது பக்கமும் நகரத் தொடங்கியிருக்கிறது. அதுவும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 'பிளேயறயிற்' என அழைக்கப்படும் ரோனி பிளேயரின் ஆதரவு தளத்திலிருந்து விலகி ஒரளவு இடதுசாரித்தன்மை கொண்ட எட் மிலிபான்ட் இன் தலைமையிலான தொழிற்கட்சியின் வெற்றிபெற முடியாத இந்நிலையில் அசல் இடதுசாரித்தளத்தில் நின்று செயற்படும் கோர்பினிற்கு கிட்டியுள்ள கட்சியின் ஆதரவு அரசியல் அவதானிகளுக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது.

### ஆதரவுத்தளம்

கடந்த தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து எட் மிலிபான்ட் தொழிற்கட்சியின் தலைப்பதவியிலிருந்து விலகிக்கொணடதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு கோர்பின் உட்பட நான்கு தொழிற்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் போட்டியிட்டார்கள். இத்தேர்தலில் கோர்பின் போட்டியிடுவதாக அறிவித்தபோது, அதனை ஒரு நகைச்சுவையாகவே பலர் எடுத்துக்கொண்டார்கள். ஏனெனில் முப்பத்தியிரண்டு வருடங்களாக இஸ்லிங்ரன் வடக்கு தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் கோர்பின் தொழிற்கட்சியின் பின்வரிசை உறுப்பினராக இருந்து வருகிறார். முன்னைய பிரதமர்களான ரோனி பிளேயர், கோர்டன் பிரவுண் போன்றவர்கள் கோர்பினுக்கு ஆதரவு வழங்கவேண்டாம் என வெளிப்படையாகவே கோரிக்கை விடுத்தார்கள். அதனால் தலைமைப்பதவிக்கு போட்டியிடுவதற்கு தேவையான இருபது பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதே கோர்பினுக்கு பலத்த சிரமமாயிருந்தது. பந்தயக்காரார்கள் (betting companies) முதலில் 1:200 என்று கோர்பினை நிரைப்படுத்தியிருந்தார்கள். அதாவது கோர்பின் வெற்றிபெறுவார் என ஒரு பவுணுக்கு பந்தயம் பிடித்தால் அவர் வெற்றிபெறும்போது 200 பவுண்ஸ்களைப் வெல்லும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

இருப்பினும் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு சில வாரங்களுக்கு முன்பிருந்தே நிலமையில் மாற்றம் ஏற்படுவதனை அவதானிக்க முடிந்தது. கோர்பினை வெற்றி பெற வைப்பதற்காகவே பல ஆயிரக்கணக்கானோர் தொழிற்கட்சியில் இணையத் தொடங்கினர். இவர்களில் இதுவரை அரசியலில் விரக்கதியடைந்திருந்த இளையவர்களும், தொழிற்கட்சியின் கொள்கைகளினால் வெறுப்படைந்து விலகிச்சென்ற அக்கட்சியின் முன்னாள் உறுப்பினர்களும் அடங்குவர். செப்ரெம்பர் 12ம் திகதி முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, 251,417 வாக்குகளைப் பெற்று தொழிற்கட்சியின் தலைவராக கோர்பின் தெரிவுசெய்யப்பட்டமை தெரிய வந்தது. மொத்த வாக்குகளில் 59.5 விழுக்காடு வாக்குகளை கோர்பின் பெற்றிருந்த நிலையில் அவருக்கு அடுத்த இடத்திலிருந்த அன்டி பேர்ணம் அவர்களால் 19 விழுக்காடு வாக்குகளையே பெற்றுக்கொள்ள முடிந்தது. கோர்பின் தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட சில தினங்களிலேயே புதிதாக இருபத்தோராயிரம் பேர் தொழிற்கட்சியில் இணைந்து கொண்டுள்ளமை அவரது தலைமைத்துவத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

### புது தொழிற்கட்சியின் வீழ்ச்சி

மார்கிரட் தட்சர் தலையிலான கொன்சவேர்ட்டிவ் கட்சியினை வெற்றிபெற முடியாதிருந்த தொழிற்கட்சியினை நடுவு நிலை இடதுசாரிக் கொள்கைக்குள் கொணடு சென்று தொடர்ச்சியாக மூன்று தடவை வெற்றியடைய வைத்தவர் ரோனி பிளேயர். ஆனால் இப்போது அவரது கொள்கைகளை வரித்துக் கொண்டுள்ள New Labour அணியைச் சார்ந்தவர்கள் தொழிற்கட்சியின் தலைமைக்கான தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளனர். 'பிளேயறயிற்' கொள்கைகளுடன் தலைமைப்பதவிக்கு போட்டியிட்ட லிஸ் கென்டல் 4.5 விழுக்காடு வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். அவரது தோல்வி பற்றி வினவியபோது, அவர் 'ஈராக்' என்ற ஒற்றை சொல்லில் பதிலளித்ததாகக் ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். ரோனி பிளேயர் அவர்களது பொருளாதாரக் கொள்கைகளை விட, அவர் ஜோர்ஜ் டப்ள்யு புஷ் உடன் இணைந்து ஈராக் மீது நடாத்திய போர் தொழிற்கட்சி உறுப்பினர்களை சீற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது. தான் பிரித்தானியாவின் பிரதமாராகத் தெரிவுசெய்யப்பட்டால் ஈராக் மீது நடாத்திய போரிற்காக ஈராக்கிய மக்களிடம் மன்னிப்புக் கேட்பேன் என கோர்பின் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொழிற்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கணிசமானளவினர் பிளேயறயிற் கொள்கைக்குச் சார்பானவர்களாக இருப்பதனால் அவர்களைச் சமாளிப்பது கோர்பினுக்கு தொடர்ந்து நெருக்கடியாக அமையப்போகிறது. இவர்களில் பலர் கோர்பினின் தலைமையிலான தொழிற்கட்சியானால் தேர்தலில் வென்று ஆட்சியமைக்க முடியாது என உறுதியாக நம்புகிறார்கள். ஆதலால் அடுத்த தேர்தலுக்கு முன்னர் தலைமையை மாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இவை கோர்பின் அறியாத தகவல்களாக இருக்க முடியாது.

### அதிகார மையத்தின் எதிர்ப்பு

கோர்பினின் தலைமையில் தொழிற்கட்சி வெற்றி பெறுவதையிட்டான சந்தேகம் தொழிற்கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் காணப்படுகிறது. அதே சமயத்தில் கோர்பினின் தலைமை வெற்றிபெறக் கூடிய வாய்ப்பு உள்ளதாக உணரும் பெருமுதலாளிகள், பல்தேசிய நிறுவனங்கள் போன்றவை, இடதுசாரிக் கொள்கைகளையுடைய ஒரு தலைமை வெற்றிபெறும் நிலையில் தமக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளையிட்டு அச்சப்படுகின்றன. தொழிற்கட்சியிலிருந்து அந்நியப்பட்டிருந்த தொழிலாள வர்க்க வாக்காளர்களில் ஒரு தொகுதியினர், தேர்தலில் வாக்களிப்பதில் அக்கறையின்றியிருக்கும் இளையவர்கள், ஸ்கொற்லாந்து வாக்காளர்கள் போன்ற தரப்புகள் கோர்பினை ஆதரிக்குமாயின் அடுத்த தேர்தலில் தொழிற்கட்சியின் வெற்றி நிச்சயப்படுத்தப்படும் என இவை எதிர்பார்க்கின்றன. ஆகவேதான் பெரும் முதலாளிகளால் நடாத்தப்படும் பிரித்தானியாவின் மைய ஊடகங்களில் பெரும்பாலானவை கோர்பினின் கொள்கைகள விமர்சித்து வருவதுடன், தொடர்ச்சியாக அவர் மீது தனிநபர் தாக்குதல்களை நடாத்தி வருகின்றன.

### தமிழ் மக்களின் தோழன்

பிரித்தானியத் தமிழ் மக்களுக்கு ஜெரமி கோர்பின் அவர்களோ அவரால் நிழல் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் ஹெய்ஸ் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டொனால்ட் அவர்களோ புதியவர்கள் அல்ல. 1983ம் ஆண்டு முதல்முதலாக பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட காலத்திலிருந்தே தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்காக்க் குரல் கொடுத்து வருபவர் கோர்பின். தமிழ் அரசியற் கூட்டங்களில் தவறாது கலந்து கொள்பவர். ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் கொள்கை ரீதியாக உடன்படுவர். பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறு 2006ம் ஆண்டு ஒரு மனு அனுப்பப்பட்டபோது அதில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டார்கள். ஒருவர் ஜெரமி கோர்பின். மற்றவர் ஜோன் மக்டொனால்ட்.

**ஈழத்தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகளை கொள்கைரீதியாக ஆதரிக்கும் கோர்பின் மற்றும் மக் டொனால்ட் போன்றவர்கள் பிரித்தானிய பாராளுமன்றத்தின் நிழல் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளை வகிப்பது எத்தகைய வாய்ப்புகளை எமக்கு வழங்கியிருக்கிறது என்பதனை தமிழ்ச் செயற்பாட்டாளர்களும், தமிழ் மக்களும் கவனத்திற்கொண்டு செயற்பட முன்வரவேண்டும்.**

பிரித்தானித் தமிழர் பேரவை போன்ற தமிழ் அமைப்புகள், கொள்கைப்பிடிப்புடைய கோர்பின் போன்றவர்களை விடுத்து New Labour அணியினருடன் தொங்கிக் கொண்ருப்பதனை கோர்பின் விரும்பவில்லை. இவ்விடயத்தில் தனது எதிர்ப்பினை அவர் நேரடியாகவே வெளிப்படுத்தியிருந்ததாகத் தெரியவருகிறது. பிரித்தானியத் தமிழர் பேரவையுடன் இணைந்து செயற்படும் Tamils for Labour அமைப்பினர் கோர்பினின் தெரிவு பற்றி இதுவரை கருத்து வெளியிட்டதாகத் தெரியவில்லை. கடந்த முறை தலைமைப்பதவிக்கான தேர்தல் நடைபெற்றபோது முண்டியடித்துக்கொண்டு டேவிட் மிலிபான்ட் அவர்களை ஆதரித்த இந்த அமைப்பினர் இம்முறை எந்த நடவடிக்கையிலும் இறங்கவில்லை.

ஈழத்தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகளை கொள்கைரீதியாக ஆதரிக்கும் கோர்பின் மற்றும் மக் டொனால்ட் போன்றவர்கள் பிரித்தானிய பாராளுமன்றத்தின் நிழல் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளை வகிப்பது எத்தகைய வாய்ப்புகளை எமக்கு வழங்கியிருக்கிறது என்பதனை தமிழ்ச் செயற்பாட்டாளர்களும், தமிழ் மக்களும் கவனத்திற்கொண்டு செயற்பட முன்வர வேண்டும்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

## ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Selvarajah Gold house | 020 8767 3795 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS Supermarket | 020 8297 9432 |
| Best Food | 020 8692 9811 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Saiva Munneta Sangam | 02085144732 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| Anjappar | 020 8552 1155 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri store ltd | 020 8553 7737 |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| North Harrow C&C | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **Coventry** | |
| Eellakanthan Temple | 02476663554 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Abi Fast Food | 0208 813 9494 |
| Palm Palace Restaurant | 020 8574 9209 |
| Spicy Palace Restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |



sarasas
SOUTH INDIAN RESTAURANT
• தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
• உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
• சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
• நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே
* Outdoor catering * Function hall * Party orders
புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது
SARASAS CATERING
எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்
We make 30 different Types of Dosa
630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com
FREE CAR PARKING UPTO 100 CARS
Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)




அனைவருக்கும் எமது தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
www.poojasweets.com
Best Quality Vegetarian Food for Any Occasions!
5% OFF ON-LINE PURCHASES ENTER: "ORUPAPER" AT CHECKOUTS!
...tempting?
discover a new heaven on earth:
ORDER ON LINE
FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*
We also do International deliveries*
*Terms apply. See online for details
POOJA
SWEETS & SAVOURIES
The Taste That You Will Love, The Quality That You Can Trust
TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com
KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com

# மனித உரிமை விசாரணை அறிக்கையும் தமிழர்களின் நீதிக்கான அடுத்த கட்டமும்



**ச.பா.நிர்மானுசன்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கைத் தீவு தொடர்பான விசாரணை அறிக்கை, தமிழ் மக்களுக்கு சந்தர்ப்பங்களையும் சவால்களையும் தந்து நிற்கிறது. தமிழர் தரப்புகள் எடுக்கும் ஆக்கபூர்வமானதும் தந்திரோபாயம் உடையதுமான நகர்வுகளால் சவால்களை முறியடிக்கவும், சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்துவதனூடாக நீதிக்கான போராட்டத்தை முன்னகர்த்தவும் முடியும்.

சர்வதேச குற்றவியல் விசாரணைக்கான பரிந்துரையை எதிர்பார்த்த தமிழர் தேசத்துக்கும், வெறும் உள்ளகப் பொறிமுறைக்கான ஆதரவை எதிர்பார்த்த சிங்கள தேசத்துக்கும் இந்த அறிக்கை ஏமாற்றம் தான். ஆயினும் போராட்டம் என்பது ஏமாற்றங்களை திருப்பு முனையாக மாற்றுவதிலும், தடைகளைத் தாண்டுவதனூடாகவுமே போராட்டத்தின் உயிர்ப்பை பேணுவதோடு அதன் இலக்கை அடைய முடியும்.

அந்தவகையில், நீதிக்கான போராட்டத்தில் புதிய அணுகுமுறைகளை கைக்கொள்ள வேண்டிய சூழல் தமிழர் தேசத்துக்கு எழுந்துள்ளது. சிறீலங்காவின் உள்ளகப் பொறிமுறையில் உள்ள பலவீனங்களையும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி, சிறீலங்காவின் உள்ளகப் பொறிமுறைக்கான சந்தர்ப்பத்தை நிராகரித்துள்ள இந்த மனித உரிமைகள் விசாரணை அறிக்கை, கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்குமாறு பரிந்துரை செய்துள்ளது.

சர்வதேச குற்றங்களான போர்க்குற்றம் மற்றும் மானுட குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட ஒரு தரப்பிடம், பல தசாப்தங்களாக குறைபாடுகளுடன் உள்ள உள்ளகப் பொறிமுறையில் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு சர்வதேச நீதிபதிகள், சட்டவாளர்கள், விசாரணையாளர்களை உள்ளடக்கி ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை மேற்கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. குறுகிய காலப்பகுதிக்குள் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன், இலங்கைத் தீவுக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களுடன் தகவல்களை பெறாமல் மேற்கொள்ளப்பட்ட இந்த விசாரணை ஒரு சர்வதேச குற்றவியல் விசாரணையோ அல்ல முடிந்த முடிபோ அல்ல. மாறாக, நீதியை நோக்கிய பயணத்தில் அடுத்த கட்டத்திற்கான ஒரு அத்தியாயம். அடுத்த கட்டம் தமிழர்களுக்கு சாதகமாகவும் இருக்கலாம். பாதகமாகவும் மாறலாம். ஆயினும், தமிழர்கள் மேற்கொள்கின்ற நகர்வுகள் இந்த சாதக, பாதகங்களில் செல்வாக்குச் செலுத்த முடியும்.

## தமிழர்களின் கரிசனைகள்

போரினால் மிகப்பெரும்பான்மையாக பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். தமிழர்கள் என்ற நோக்கத்திற்காக அவர்கள் மீது பல தாக்குதல்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு அழிக்கப்பட்டார்கள். ஒரு இனக்குழுமமோ, மதக் குழுமமோ, தேசிய இனமோ திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டு பகுதியாகவோ முழுமையாகவோ அழிக்கப்படுவது இனஅழிப்பு என்று இனஅழிப்பு தொடர்பான ஐ.நா சாசனம் கூறுகிறது. ஆயினும், போரினால் அதிகமாக பாதிக்கப்பட்டது தமிழ் மக்கள் என்றோ அல்லது தமிழ் மக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டார்கள் என்றோ உறுதியாகவும் பரவலாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடபடவில்லை. தமிழரின் அபிலாசைகள், தமிழர்களின் பிரச்சினை, பிரபலமான தமிழ் அரசியல்வாதி என சிறீலங்காவின் முன்னால் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை குறிப்பிட்டுள்ள இந்த அறிக்கையில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என விளித்து கூறாமை கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியது. அதேவேளை, போர்க்குற்றம் மற்றும் மானுட குலத்திற்கு எதிரான குற்றம் பெரும்பாலும் இழைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ள அறிக்கை, இனஅழிப்பு தொடர்பாக மௌனம் சாதிக்கிறது.

## தமிழின அழிப்பு

இனஅழிப்பு இடம்பெற்றதாக கூறாவிட்டாலும் இனஅழிப்பு இடம்பெறவில்லையென கூறவில்லை. அத்துடன், இனஅழிப்பு இடம்பெற்றதாக நீங்கள் கருதுகிறீர்களா என சனல் 4 செய்தியாளர் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரைக் கேட்ட போது, இனஅழிப்பு இடம்பெறவில்லையென நிராகரிக்கவில்லை. மாறாக, அவ்வாறான ஒரு மதிப்பீட்டுக்கு நாம் இன்னும் வரவில்லை. நாம் பரீசிலித்த வடிவங்கள், போர்க்குற்றம் மற்றும் மானுடகுலத்திற்கு எதிரான குற்றம் எனக் கருதலாம் என கூறமுடியும் என நாம் நம்புகிறோம். இதன் அர்த்தம், எம்மைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொள்ளும் நீதிமன்றம் இனஅழிப்பு இடம்பெறவில்லை என்ற முடிவுக்கு வரப்போவதில்லை என்று கூற முடியாது. எங்களுடைய விசாரணைக்கு சிறீலங்கா அரசாங்கங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவில்லை. ஆதலால், இனஅழிப்பு தொடர்பான தீர்ப்பை தொடர்ந்து வரக்கூடிய குற்றவியல் விசாரணையிடமே விட்டுவிடுவோம் என்ற தொனிப்படத் தெரிவித்தார்.

நடந்தது இனஅழிப்பு என்பதை ஏற்றுக் கொள்ள வைப்பதில் பூகோள அரசியல் உட்பட்ட பல முக்கிய காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆதலால், இது இலகுவான விடயமல்ல. ஆயினும், அதற்காக அதனை கைவிட்டுவிட முடியாது. உலகில் முதலாவதாக இடம்பெற்ற இனஅழிப்பான ஆர்மேனிய இனஅழிப்பை, இனஅழிப்பு இடம்பெற்று 100 ஆவது வருடத்திலேயே ஜேர்மனி அங்கீகரித்தது. 1992- 1995 பொஸ்னியா போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, அங்கு இடம்பெறுவது போர்க்குற்றம் என அமெரிக்கா இராஜாங்க திணைக்களகத்தில் பணியாற்றிய இளநிலை அதிகாரிகள் குறிப்பிட்டார்கள். அதனை மூத்த அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாக ஐந்து இளநிலைகள் அதிகாரிகள் தமது பதவிகளை விட்டு விலகினார்கள் என சி.என்.என்னின் அன்றைய நிருபராகவும் ஐ.நாவுக்கான அமெரிக்காவின் இன்றைய தூதுவராகவும் இருக்கிற சமந்தா பவர் அவர்கள் தான் எழுதிய நூலொன்றிலே குறிப்பட்டுள்ளார். காலநீட்சியில் பொஸ்னியாவில் இனஅழிப்பு இடம்பெற்றது என்பது ஏற்று அங்கீகரிக்கப்பட்டது.

ஆகவே, இனஅழிப்பு இடம்பெற்றது என இந்த அறிக்கையில் கூறப்படாவிட்டாலும், தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்டது இனஅழிப்பு என்பதை நிரூபிக்கும் போராட்டங்ளை தமிழர்கள் தொடர வேண்டும். நவம்பர் 2012 வெளியிடப்பட்ட ஐ.நாவின் இடைக்கால மீளாய்வுகுழு அறிக்கையில் போரின் இறுதிக்காலப்பகுதியில் அண்ணளவாக 70,000 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், இந்த எண்ணிக்கையை விடவும் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகம் என தமிழர் தரப்பால் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. இத்தகைய சூழலில், இலங்கைத் தீவுக்கு சென்று பூரணமான விசாரணையை செய்யமுடியாததால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை உறுதியாகக் கூறமுடியவில்லை என இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 2002 - 2011 வரையான காலப்பகுதிக்குள் மட்டுப்படுத்தாமல் போர் இடம்பெற்ற முழு காலப்பகுதியையும் விசாரணையின் போது கவனத்திற்கொள்ள வேண்டும் என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளமை முக்கியத்துவம் மிக்கது.

சிறீலங்காவுக்கு நெருக்கடியை கொடுக்கும் பரிந்துரைகள்

- இனஅழிப்புடன் தொடர்புடைய சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உரோம் சாசனத்தில் சிறீலங்கா கைச்சாத்திட வேண்டும்.
- போர்க்குற்றம், மானுட குலத்திற்கு எதிரான குற்றம், இனஅழிப்பு மற்றும் பலவந்தமாக காணமல் போதல் ஆகியவை ஒரு குற்றம் என சட்டம் இயற்ற வேண்டும்.
- மனித உரிமைகள் நிலவரங்களை கண்காணிப்பதற்காக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் பூரணமான இருப்பைஉருவாக்குவதற்கான அழைப்பை சிறீலங்கா மேற்கொள்ள வேண்டும்.
- விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் சிறீலங்கா இராணுவத்திடம் பதிவுசெய்யப்பட்டவர்கள் தற்போது எங்குள்ளார்கள், அவர்களின் நிலை என்ன என்பது தொடர்பாக வெளிப்படுத்த வேண்டும்.
- பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக உயர் மட்ட மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.
- இராணுவம் ஆக்கிரமித்துள்ள தனியார் காணிகள் உரியவர்களிடம் மீளக் கையளிக்க வேண்டும்.
- புலனாய்வுப் பிரிவுகள் உட்பட்ட சிறீலங்காவின் ஆயுதப் படைகளின் கட்டளைச் சங்கிலியின் வகிபாகத்தை வெளிப்படுத்த வேண்டும் போன்ற பரிந்துரைகள் சிறீலங்காவுக்கு நெருக்கடியை கொடுக்கும் முக்கியமான பரிந்துரைகள் ஆகும்.

**போராட்டம் என்பது ஏமாற்றங்களை திருப்பு முனையாக மாற்றுவதிலும், தடைகளைத் தாண்டுவதனூடாகவுமே போராட்டத்தின் உயிர்ப்பை பேணுவதோடு அதன் இலக்கை அடைய முடியும்.**

சிறீலங்கா அரசாங்கத்தால் உணவும் மருந்தும் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது, மருத்துவமனைகள் இலக்கு வைத்து தாக்கப்பட்டது, சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டமை அல்லது அவர்களுக்கு என்ன நேர்ந்தது என தெரியவில்லை போன்ற குறிப்புகள் சிறீலங்காவுக்கு விரும்பத்தகாதவையும் எதிர்காலத்தில் நெருக்கடியை கொடுக்கக் கூடியவையும் இருக்கும்.

இந்த அறிக்கை சிங்கள தேசம் விரும்பியபடி அமையாவிட்டாலும், எதிர்வரும் 30ம் திகதி நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படும் தீர்மானம் சிறீலங்காவுக்கு தர்மசங்கடங்களை ஏற்படுத்தாமல் ஆதரவாக வருவதற்கான சாத்தியப்பாடுகள்,

(தொடர்ச்சி 26ம் பக்கம்)



# இயக்கம்

**சுகி**

*(ஒரு பேப்பருக்காக)*

சுத்தும் பூமி நின்றுவிட்டது போன்ற ஒரு பிரமை, ஒரு சிலருக்கு மட்டும் தானா அல்லது மற்றவர்களுக்கும் இந்த உணர்வு உள்ளதா? செந்நீரால் ஊற்றி வளர்ந்த விடுதலைப் பயிரை எப்படி கிள்ளி எறிந்தார்கள். ஒரு பரிணாம வளர்ச்சி போல் கொஞ்சம் கொஞ்சமாக கீழ் இருந்து மேல் நோக்கி எழுந்த எழுச்சி, கடலில் சிறீலங்கா கடல்படையினரால் பிடிபட்டு அடுத்த நாள் உடலமாக கரையொதுங்கிய காலம் போய், சிறீலங்கா கடல்படையினர் எம்மை கலைத்தால் பிடிபடாவண்ணம் வளர்ந்து, மேலும் சிறீலங்கா கடல்படையினரை நாம் கலைத்து, எமது கடல் எல்லையை நிர்வகிக்கும் வரை உயர்ந்து, அதைவிடவும் வேகமாக ஒடி சிறீலங்கா கடல்படை தப்பி தவறி எமது எல்லைக்குள் வந்தால் அவர்களைக் கலைத்து பிடிக்குமளவுக்கு வளர்ந்த எமது கடல்படையும், அதை ஆண்ட கடல்புலிகளின் திறமையும் வியப்பதற்குரியது, ஒரு முப்பது ஆண்டு வளர்ச்சியும், திறமையும், அடுத்த தலைமுறையை அடையாமல் இடையில் நின்று ஏதலிக்கின்றது.

தெருக்கூத்து, சிறுநாடகம், விபரணச் சித்திரம், ஓவியம், விளையாட்டு போட்டிகள், என்று எமக்கென தனியானதொரு பாணியில் தென்இந்திய திரைப்படத்தை மீள்பதிவு செய்யாத ஈழத்துக்கென தனி ஒரு பாணியை உருவாக்கும் வகையில் வளர்ந்த கலைகளும், பண்பாடுகளும் முடங்கிப்போய் உள்ளன. எண்ணத் திராணியற்ற வகையிலான அடக்குமுறைக்குள் எமது மக்கள், அங்கு வாழ்ந்து வருகின்றார்கள்.

உள்ளங்காலில் இருந்து உச்சம்தலைவரை விரவிக்கிடந்த ஓர் உணர்வு, மின்னலை போன்று தரணியெங்கும் வாழும் தமிழர்களை இயக்கும், இயங்கு சக்தியை இழந்த மனிதர்கள் போல இங்குள்ள மக்கள், பெரிய மின்சார ஓட்டம் தடைபட்டு, சின்ன சுற்றுக்குள் சுற்றிவருவதுபோன்று, தான்படித்த பழைய பாடசாலை, ஊர்சங்கம், கோயில்கள், மதகுருக்கள், இங்குள்ள தமிழ் பாடசாலைகள், சிறு சிறு சமூக தொண்டு நிறுவனங்கள் என்று அதற்குள்ளேயே அவர்களது சுற்று நின்று விடுகிறது, அந்த ஒன்றிணைந்த, கண்ணுக்குத் தெரியாத இழை, ஆங்காங்கே விடுபட்டு, தொடர்பற்று நிற்பதுபோன்ற உணர்வு. நல்லதா என்று உரைத்து பார்க்கத்தான் வேண்டும். ஆனால் அதிகமாக உரைத்தால் சேதாரமும் அதிகமாகும். உரைக்காமல் எடுத்தால் இல்லாததையும் பொன் என்று பொக்கிசப் படுத்தி ஏமாறும் அபாயம் உள்ளது. ஒன்றுமே வேண்டாம் ஏன் இந்த வம்பு என்று இருப்பது சுலபம், ஆனால் எங்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பும் வரலாற்றை நிர்மாணிக்கும் காலகட்டத்தில், வாளாதிருந்தவர்கள் என ஆகிவிடுவோம்.

நீங்கள் தமிழ்பேசும் அளவிற்கு இங்கு பிறந்த பிள்ளைகள் தமிழ் பேசுகின்றார்களா, இல்லையே, அப்பிடியானால் தமிழ் அழிகின்றது என்றுதானே அர்த்தம், அப்பிடி அழியும் தமிழுக்காக ஏன் பாடுபட வேண்டும். ஒருவரின் கேள்வி. இரண்டு விதமாக பதில் சொல்லாம் எதிர்மறையாக சொல்வதானால், ஓசோனில் ஓட்டை என்கிறார்கள், நீர்மட்டம் உயர்கின்றது என்கிறார்கள். உலகம் 40, 50 ஆண்டுகளில் அழிந்துவிடும் என்கிறார்கள். அப்பிடியானல் இவ்வழியும் உலகில் நிலையான பொருட்கள் என நாம் வீடு வாசல் எதையும் சேர்ந்து வைக்காமலா உள்ளோம்.

ஆங்கில மொழியை பார்த்தால் எல்லாமே கடன் வாங்கியவை, கணிதம் கூட 1இல் இருந்து 9 வரை அரபு நாட்டில் இருந்து வந்தது, சுழியம் இந்தியாவில் இருந்து வந்தது, இதை விட ஒன்று செய்யலாம், வளரும் மொழியான சீன மொழியைப் படிக்கலாம்! அல்லது ஒருபடி மேல் யோசித்து, ஏன் அது அழியாமல் வளர்கின்றது, என்று பார்க்கலாம், இரண்டு சீனர்கள் ஆங்கிலத்தில் பேசியதை நான் ஒருபோதும் கண்டதில்லை, ஆனால் நாம்?. இப்ப ஒரு 12 வருடங்களுக்கு முன், தொலைபேசியில் பேசும் போது' வணக்கம், நான்..' என்று தொடங்க, என்ன பெடியள் மாதிரி சுத்த தமிழில் கதைக்கிறீர் என்று பதில் வந்தது. ஆனால் இப்போ அது சர்வ சதாரணமாக எல்லோரும் சொல்கிறார்கள். 'சித்திரமும் கைபழக்கம், செந்தமிழும் நா பழக்கம் அல்லவா'.

**எம்மில் உள்ள, அந்த நாடு கடந்து எம்மை இணைக்கும் இயக்கத்தை நாம் சிந்தித்து செயல்பட்டு வளர்ந்துக்கொள்ளவேண்டும், இவர் சுள்ளுகிறார், அவர் கிள்ளுகிறார் என்று எம்மில் உள்ள சிறுசிறு குறைகளை பூதக்கண்ணாடி போட்டு பார்க்காது, இந்த இயங்குசக்தி என்று வரும் போது தமிழ் தேசியத்தின் பேரால் ஒன்றிணைய வேண்டும்.**

எமது இயங்கு சக்திக்கு தமிழ் தேசியம் ஒரு முக்கியமாக காரணம், அத்தேசியம் எம்மை நாடு கடந்தும் இணைக்கின்றது. இதுபற்றி ஆழமாக சிந்திந்து அத்தேசியத்தின் பேரால் நாம் ஒருகிணைய வேண்டும். இது சாராணமான சொல்லாடல் அல்ல. சுலபமாக விளங்குவது என்றால் "working from Home" என்று பலர் வீட்டில் இருந்து கொண்டே கணனி மூலம் மின்னஞ்சல், கணனி மூலம் பார்த்து உரையாடல் (Chat) சந்திப்பு அறை கூட்டம் (conference call) என்று ஒரு virtualஆக வீட்டில் இருந்துகொண்டே அலுவலகத்தில் இருப்பது போல முழு வேலையும் செய்யக்கூடியதாக உள்ள, இயக்கம் தான் இங்கு முக்கியமானது. அலுவலகத்தை பிறகு அமைத்துக்கொள்ளலாம்.

எம்மில் உள்ள, அந்த நாடு கடந்து எம்மை இணைக்கும் இயக்கத்தை நாம் சிந்தித்து செயல்பட்டு வளர்ந்துக்கொள்ளவேண்டும், இவர் சுள்ளுகிறார், அவர் கிள்ளுகிறார் என்று எம்மில் உள்ள சிறுசிறு குறைகளை பூதக்கண்ணாடி போட்டு பார்க்காது, இந்த இயங்குசக்தி என்று வரும் போது தமிழ் தேசியத்தின் பேரால் ஒன்றிணைய வேண்டும். இந்த எம்மிடம் உள்ள நாடு கடந்து விரவியிருக்கும் இயக்க சக்திக்குத் தான், நாடுகள் யோசிக்கின்றன. நாமும் எம் பலம் அறியாது, யானைப்பார்த்த குருடனைப் போல் தந்தம் கண்ணுக்கு முன்னால் தெரிவதை மட்டும் பார்த்துக்கொண்டு எம் முழுப் பலத்தையும் இணைக்காது பொழுதை விரயம் செய்கின்றோம்.

இது இப்படி இருக்க, அவனவன் கோட்டு சூட்டுப் போட்டுக் கொண்டு, சட்டம் படித்தவர்கள் என்று நேரத்திற்கும், நிற்கும் இடத்திற்கு அமைவாக கதைத்து தமது பதவியை தக்க வைத்துக் கொள்கிறார்கள். எமக்கு நடந்தது இனப்படுகொலை இல்லை என்று சொல்வதற்கு, தமிழ் மக்கள் பற்றி எவ்வளவு கணிப்பு இருந்திருக்க வேண்டும்? அவர்களின் கணிப்பின் படி, இந்த தமிழ் சனங்கள் ஒரு சோத்துச் சனங்கள், நாம் தமக்கு வசதியானதை சொல்விட்டும் போகலாம், அவர்கள் ஒன்றும் பேசாது, கேட்ட நீதி கிடைக்காமல் அலைந்தொழியும் ஆத்மாக்களுக்கு வருடாவருடம், அவ்வாத்மாக்கள் கேட்ட நீதியைக் கொடுக்காமல், தட்டிக் கழிப்பவர்களையும், சகித்துக் கொண்டு, வருடா வருடம் அவர்கள் கேட்காத திதியைச் செய்து படைத்து சாப்பிட்டு உறங்கும் மக்கள் எனக் கணித்திருக்கிறார்கள்! வேறு ஒரு நாட்டு வரலாற்றிலும், அதே இனத்தைச் சேர்ந்தவர்களே, அவ்வினத்திற்கு கிடைக்கவேண்டிய நீதிக்கு எதிராக செயல்பட்டதாக வரலாறு இல்லை. அப்படி அவர்கள் செய்ய நினைத்திருந்தால் கூட அம்மக்கள் அவர்களை சும்மா விட்டிருந்திருக்கமாட்டார்கள். எல்லாம் எமக்கென்று வந்து வாய்திருக்கிறார்கள், வைரவருக்கு வாகனம் வாய்ந்தது போல. இனி இவர்களின் சாயம் வெளுக்கும் மட்டும் காத்துக்கொண்டிருக்க, எமக்கு கிடைக்க வேண்டிய நீதி கிடைக்காமலே போய்விடும்.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper







**ஒரு பேப்பர**
ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________________

Address : ____________________
____________________
____________________

Postcode: ____________________

Telephone: ____________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# தமிழ் மக்கள் அனைத்துலக சமூகத்திடம் நீதி கோரும் போராட்டத்தில் தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறார்களா ?






**கலாநிதி சர்வேந்திரா தர்மலிங்கம்**
*(ஒரு பேப்பருக்காக)*

## 1.

ஐக்கிய நாடுகள் மனித உரிமையாளர் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட சிறிலங்கா தொடர்பான விசாரணை அறிக்கை குறித்து தமிழ் அரசியற் செயற்பாட்டாளர்கள் மத்தியில் வெவ்வேறுவகையான கருத்துக்கள் வெளிப்பட்டிருக்கின்றன. இவ் அறிக்கை சிறிலங்காவின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையினை நிராகரித்தமையினை அனைவருமே ஏற்றுக் கொள்கின்றனர். இதேவேளை கலப்பு நீதிமன்றப் பரிந்துரையை அனைவரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

உண்மையில் ஆணையாளரின் அறிக்கையின் நம்பகத்தன்மையும் நன்மதிப்பும் உள்நாட்டு விசாரணைப்பொறிமுறையினை நிராகரித்தமையிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது. இதனைப் புரிந்து கொள்வுதற்கு ஒரு எடுகோள் நிலைப்பாட்டை சிந்தித்துப் பார்ப்போம். சிறிலங்கா அரசதரப்பால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. புதிய ஆட்சியாளர்கள் பொறுப்புக்கூறல் விடயத்தில் அக்கறையாக இருக்கிறார்கள். இதனால் நடைபெற்றிருக்கக்கூடிய குற்றங்கள் தொடர்பாக சிறிலங்கா அரசு அனைத்துலக தராதரத்துக்கேற்ப குற்ற விசாரணையை நடத்த வேண்டும் என்ற பரிந்துரையினை ஐக்கிய நாடுகள் மனித உரிமையாளர் ஆணையாளின் அறிக்கை வழங்கியிருப்பின் இவ் அறிக்கையின் நம்பகத்தன்மையும் நன்மதிப்பும் காற்றிலே போய் இருக்கும்.

இதனால் கலப்புப் பொறிமுறை தொடர்பான பரிந்துரை பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்ற பெருவிருப்பில் இருந்து மட்டும் எழுந்தது என்று நாம் கருத முடியாது. ஐக்கிய நாடுகள் மனித உரிமையாளர் ஆணையாளரின் அறிக்கையின் ஏற்புடைத்தன்மையினைப் பேணுவதற்கும் கலப்பு நீதிமன்றப் பரிந்துரை அவசியமாக இருந்திருக்கிறது. இருப்பினும் அறிக்கை சிறிலஙகா அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட அநீதிகள் பலவற்றை காத்திரமாகப் பதிவு செய்திருக்கிறது என்பதனையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இவ் அறிக்கை அனைத்துலக குற்றவியல் நீதி விசாரணைப் பொறிமுறை குறித்துப் பரிந்துரைக்காமையும், தமிழின அழிப்புத் தொடர்பாகக் காட்டியுள்ள மெத்தனமான போக்கும் செயற்பாட்டாளார்கள் பலருக்கு கவலையை அளித்துள்ளது. தமிழ் மக்கள் ஒரு தேசம் என்ற வகையில், தமது சுயநிர்ணய உரிமையினை வென்றெடுப்பதற்கு தமிழின அழிப்பு ஏற்றுக் கொள்ளப்படுதல் அவசியமானதென இவர்கள் கருதுகிறார்கள். இனஅழிப்பை ஏற்றுக் கொள்வதில் உள்ள அரசியல் விளைவுகள் காரணமாகவே தமிழன அழிப்பத் தொடர்பாக விசாரைணகளை நடத்தவதற்கு அனைத்துலசசமூகம் தயங்குகிறது என்ற கருத்தும் இவர்களிடம் உண்டு.

## 2.

இந்த அறிக்கையின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்குமா என்பது குறித்து தமிழ் மக்கள் மத்தியில் ஆழமான சந்தேகம் உள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமையாளர் ஆணையாளரின் அறிக்கை வெளியாக முன்னரே உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை குறித்து அமெரிக்க வெளியுறவுத்தறைத் துணைச் செயலர் நிஷா பிஸ்வால் கருத்து வெளியிட்டு விட்டார். இதனால் பலம் வாய்ந்த அரசகளின் நகர்வுகளால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்து சாத்தியமற்றுப் போய் விடலாம் என்ற அச்சமும் உண்டு. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையிலோ அல்லது அதற்கு நெருங்கிய பொறிமுறையிலோ சிறிலங்கா அரசு திட்டமிட்டு மேற்கொண்ட இன அழிப்புதனிப்பட்ட படைவீர்கள் சிலரின் அத்துமீறல்களாக குறுக்கப்படக்கூடிய ஆபத்தும் உண்டு. மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமையாளர் ஆணையாளரின் அறிக்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதால் புலிகள் அமைப்பில் போராளிகளாக இருந்தவர்கள் சிலரையும் இராணுவத்தினரின் எண்ணிக்கைக்கு நிகராக விசாரணை செய்வதன் ஊடாக தமது பக்க குற்றப் பொறுப்பை சிறிலங்கா அரசு நீர்த்துப் போகச் செய்து விடும் என்ற அச்சமும் பலரிடம் உண்டு.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையின் ஊடாகக் கிடைக்கக்கூடிய நீதி என்பது நிலாந்தன் குறிப்பிட்டவாறு ‘அரசுகளின் நீதி’தான். அனைத்துலக சமூகம் என்று கூறும் போது அதில் அரசுகளே முக்கிய பாத்திரம் வகிக்கின்றன. ஐக்கிய நாடுகள் மன்றமே அரசுகளின் அவைதான். இங்கு எல்லா நாடுகளுக்கும் உறுப்புரிமை இருக்கின்ற போதும் அதிகாரங்கள் சமத்துவமாக இருப்பதில்லை. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் வீட்டோ உரித்து இதற்கு நல்லதோர் உதாரணம். நாடுகள் வழங்கும் நிதிஉதவியும் இங்கு முக்கியம் பெறுகின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் 47 நாடுகளைக் கொண்ட அரசுகளின் அவைதான். இங்கு மனித உரிமைகள் என்பது மொழியாக இருந்தாலும் இவற்றின் அடியில் அரசுகளின் நலன்கள் பொதிந்து கிடக்கும். இத்தகைய அரசுகளின் அவையிடம் இருந்துதான் தமிழ் மக்கள் நீதியைப் பெற்றுக் கொள்ளப் போராட வேண்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வெளியாகிய பின்னர் இரண்டு வகையான செயற்பாடுகளை தமிழ் அரசியல் அமைப்புகள் செய்து வருகின்றன. ஒன்று கலப்புப் பொறிமுறையில் சர்வதேசப் பரிமாணத்தை அதிகரிக்கச் செய்யும் வகையிலான செயற்பாடுகள். மற்றையது கலப்புப் பொறிமுறை பயனன்றது என நிராகரித்து அனைத்துலக குற்றவியல் நீதி விசாரணையைக் கோரி நிற்கும் வகையிலான செயற்பாடுகள். இரண்டாவது உடனடியாக அனைத்துலக சமூகத்தின் அக்கறைக்குரியதாக இருக்கப் போதில்லை. முதலாவது விடயத்தில் அனைத்துலக சமூகம் சற்று அக்கறை காண்பிக்கும். ஆனால் அரசுகளின் நலன்களின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளில் எந்தளவு தாக்கத்தை இவை ஏற்படுத்தும் என்பது கேள்விக்குரியதுதான்.

## 3.

தற்போது பேசப்படும் கலப்புப்பொறிமுறையும் சிக்கல் வாய்ந்த ஒரு நடைமுறையாகத்தான் உள்ளது. எந்த சட்ட நியாயாதிக்கத்தின் கீழ் இது இயங்கும் என்பதும் தெளிவாக வரையறுக்கப்படுவதில்லை. நான் அறிந்த வகையில் உள்நாட்டு சட்ட நியாயாதிக்கம் (National jurisdiction) அல்லது அனைத்துலக சட்ட நியாயாதிக்கம் (International jurisdiction) என்ற இரண்டு வகையான சட்ட நியாயாதிக்கங்களே உள்ளன. இவற்றின் ஊடாகவே மக்கள் நீதியைப் பெற்றுக் கொள்ள முயல்கிறார்கள். கலப்பு சட்ட நியாயாதிக்கம் (Hybrid jurisdiction) என்று ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை.

கலப்பு நீதி மன்றங்கள் என்பது ஒரு பொறிமுறையே. சட்ட நியாயாதிக்கம் அல்ல. உள்நாட்டு சட்ட பொறிமுறையின் ஊடாக நீதி வழங்க முடியும் என்பதனை மக்களை நம்ப வைக்க முடியாதபோது, அனைத்துலக பொறிமுறையினை முழுமையாக பயன்படுத்த விரும்பாத போது இக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை பரிந்துரைக்கப்படுகிறது.

இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால் இக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை எந்தச் சட்ட நியாயாதிக்கத்துக்கு உட்பட்டு இயங்கப் போகிறது என்பதுதான். இது உள்நாட்டு சட்ட நியாயாதிக்கத்துக்கு உட்பட்டுத்தான் இயங்கப் போகிறது என்றால் இதற்கும் உள்நாட்டுப் பொறிமுறைக்கும் பெரிய வேறுபாடுகள் எதுவும் இருக்கப் போவதில்லை. அனைத்துலக நீதிபதிகள் பங்குபற்றுவது பெரிய அதிசயங்கள் எதனையும் நிகழ்த்தப் போவதில்லை.

> **இங்கு மனித உரிமைகள் என்பது மொழியாக இருந்தாலும் இவற்றின் அடியில் அரசுகளின் நலன்கள் பொதிந்து கிடக்கும். இத்தகைய அரசுகளின் அவையிடம் இருந்துதான் தமிழ் மக்கள் நீதியைப் பெற்றுக் கொள்ளப் போராட வேண்டியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையின் தொடர்ச்சியாக, சிறிலங்கா தொடர்பாக அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முன்மொழியும் தீர்மானத்துக்கூடாக சிறிலங்காவின் உள்நாட்டு சட்ட நியாயாதிக்கத்தின் அடிப்படையிலேயே யுத்த மீறல்கள் குறித்து விசாரணைகள் நடைபெறும் எனத் தெரிகிறது. இது அடிப்படையில் சிறிலங்காவின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையாகவே இருக்கும். இதன் ஊடாகத் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த சட்ட நியாயாதிக்கத்தின் கீழ் விசாரணை நடைபெற வேண்டும் என்பது குறித்துப் பேசாது அனைத்துலக நீதிபதிகள் வேண்டும் எனப் பேசுகிறது. சிறிலங்காவின் சட்ட நியாயாதிக்கத்தின் கீழ் இடம் பெறும் விசாரணையில் பொதுநலவாய மற்றம் அனைத்துலுக நாடுகளில் இருந்து நீதிபதிகள் பங்கு பெறுவதனால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்து விடுமா? கூட்டமைப்புத் தலைவர்கள்தான் பதில் கூற வேண்டும்.

இதில் கவலையான விடயம் என்னவென்றால் எல்லோரும் தத்தம் நலன்களில் அக்கறையாக இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட நாம் மட்டும் தான் இன்னும் ஏனைய தரப்புகளது நலன்களுக்குச் சேவகம் செய்து கொண்டிருக்கிறோம்.

இப்போது மனதைக் குடையும் கேள்வி இதுதான் !

தமிழ் மக்கள் அனைத்துலக சமூகத்திடம் நீதி கோரும் போராட்டத்தில் தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறார்களா?

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service | Community Legal Service | The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY — Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

# சீனாவில் இருந்து வெளியேறும் மூலதனங்கள்

**வேல் தர்மா**
**(ஒரு பேப்பருக்காக)**

சீனாவில் இருந்து 2014-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் இருந்து 2015-ம் ஆண்டு யூலை வரையிலான ஓராண்டு காலத்தில் 610 பில்லியன் டொலர்கள் பெறுமதியான மூலதனங்கள் வெளியேறின. பின்னர் 2015 ஒகஸ்ட் மாதத்தில் மட்டும் 150 பில்லியன் டொலர்கள் பெறுமதியான மூலதனம் சீனாவில் இருந்து வெளியேறியது. நான்கு ரில்லியன் டொலர்களாக இருந்த சீனாவின் வெளிநாட்டுச் செலவாணிக் கையிருப்பு இப்போது 3.6 ஆகக் குறைந்து விட்டது. நாட்டை விட்டு மூலதனங்கள் வெளியேறுவதால் ஏற்பட்ட நிதிப் பற்றாக் குறையைத் தவிர்க்க சீன மைய வங்கி தனது வட்டி விழுக்காட்டை 2014 நவம்பரில் இருந்து எட்டு மாதங்களில் ஐந்து தடவைகள் குறைத்துள்ளது.

### ◆ சீனாவின் பெரும் சொத்துக் கரைகின்றது

சீனாவின் பெரும் சொத்தாக இருக்கும் அதன் வெளிநாட்டுச் செல்வாணிக் கையிருப்பு தொடர்பான தகவல்களும் அதன் பொருளாதாரம் தொடர்பான மற்றத் தகவல்கள் போல் நம்பகத் தகுந்ததவையாக இல்லை. அத்துடன் அதில் பெரும் பகுதி திரவத்தன்மை குறைந்த நீண்டகால முதலீடுகளில் முதலிடப்பட்டுளது. இதனால் சீனப் பொருளாதாரக் கப்பலில் ஓட்டை விழும் போது உடனடியாக அதை அடைக்கக் கூடிய நிலையில் சீனா இல்லை. 3.6 ரில்லியன் டொலர்களில் 667 பில்லியன்கள் மட்டுமே தேவை ஏற்படும் போது பாவிக்கக் கூடிய நிலையில் இருக்கின்றது. ஏற்றுமதியை ஒட்டி வளர்ந்து கொண்டிருந்த சீனப் பொருளாதாரம் 2008-ம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதி பெருமளவு வீழ்ச்சியைக் கண்டது. இதனால் ஏற்பட்ட உள்ளூர் உற்பத்தி வீழ்ச்சியை நிரப்ப சீன அரசு பெருமளவு முதலீடுகளைச் செய்தது. பிக்கிங் பல்கலைக்கழகத்தின் அரசியற்பொருளாதாரப் பேராசிரியர் கிறிஸ்டபர் பொல்டிங்கின் கருத்துப்படி சீனாவின் முதலீட்டுக் கூட்டுறவு வங்கி தனது மூலதனத்தைச் சீனமையவங்கியிடமிருந்தும் அமெரிக்க கடன் முறிகளாகவே கடன் பெற்றது. இதனால் சீனாவின் வெளிநாட்டுச் செலவாணிக் கையிருப்பு இருபது முதல் இருபத்தைந்து வீழ்ச்சியடைந்திருக்கலாம் என்கின்றார் அப்பேராசிரியர். ஆனால் உள்ளூரில் செய்யப்பட்ட பல முதலீடுகள் இலாபத் திறன் குறைந்தவனவாகவே இருந்தன. சீனாவில் வெற்றுக் கட்டிடங்கள் மைல்கணக்கில் நீண்டு இருக்கின்றன. அது போலவே பயன்படுத்தப்படாத பல புதிய விமான நிலையங்கள் பெருந்தெருக்கள் பல இருக்கின்றன.

தனது பெருமளவு ஏற்றுமதியால் கிடைத்த மிகையான அமெரிக்க டொலர்களை அமெரிக்காவின் கடன் முறிகளை வாங்குவதிலும் சீனா ஆபிரிக்க நாடுகளில் விவசாயங்களை வாங்குவதிலும் பாக்கிஸ்த்தானிலும் இலங்கையிலும் துறைமுகங்களைக் கட்டுவதிலும் நியூசிலாந்தில் பாற்பண்ணைகளை வாங்குவதிலும் கனடாவில் எரிபொருள் நிறுவனங்களை வாங்குவதிலும் ஐஸ்லாந்தின் வடதுருவப் பிரதேசத்தில் பனிப்பாறைகளை ஆய்வு செய்வதிலும் செலவழித்தது. அத்துடன் புதிய அபிவிருந்தி வங்கி, ஆசிய உள்கட்டுமான முதலீட்டு வங்கி எனப் பன்னாட்டு வங்கிகளையும் ஆரம்பித்தது. மேலும் பட்டுப்பாதை, புதியபட்டுப்பாதை, பட்டுப் பாதையை ஒட்டிய பொருளாதார வலயம் எனவும் பெரும் நிதிகளை முதலீடு செய்தது.

### ◆ சீனாவால் உலத்தில் காசுத் தட்டுப்பாடு ஏற்படுமா?

சீனாவின் வெளிநாட்டுக் கையிருப்பு குறைந்து கொண்டு போவது உலக அரங்கில் ஒரு நாணயத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம் என்ற அச்சத்தைக் கூட உருவாக்கியுள்ளது. Quantitative Easing எனப்படும் நாணயங்களுக்கான அளவுசார் தளர்ச்சி இனி quantitativetightening என்னும் அளவு சார் இறுக்கம் என ஆகிவிடுமா என எண்ணத் தோன்றுகின்றது. கடந்த ஓராண்டு காலமாகச் சீனப் பொருளாதாரத்தின் நகர்வுகள் இப்படி இருந்தன:

சீனப் பங்குகள் 12 மாதத்தில் 150விழுக்காடு விலை அதிகரிப்படைந்தன. பின்னர் 30 விழுக்காடு வீழ்ச்சியைக் கண்டன. சீனா தனது நாட்டின் 97 விழுக்காடான பங்குகளின் விற்பனையைத் தடை செய்தது. சீனா 1.2 ரில்லியன் டொலர்களை பெரிய பங்குகளின் விலைகள் சரியாமல் இருக்கச் செலவிட்டது. சீனா தனது பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகம் குறைவதாக அறிவித்தது. சீன நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. சீனா தனது நாணயத்தின் பெறுமதியைத் தக்கவைக்க பெருமளவு செலவு செய்தது. இந்தக் காட்சித் தொடர் சீனாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதைக் காட்டியது. ஏற்கனவே சீனாவின் உள்ளூர் சிறு முதலீட்டாளர்கள் சீனப் பங்குச் சந்தையில் முதலீடு செய்து இழப்பைச் சந்தித்துள்ளனர்.

### ◆ சீனாவில் இருந்து மூலதனம் பெருமளவில் வெளியேறுவதற்கான காரணங்கள்:

*1. நம்பிக்கை இழந்த வெளிநாட்டு நிறுவனங்கள்*

சீன அரசு அதனது நாணயத்தின் பெறுமதியையும் அதன் பொருளாதார வளர்ச்சியையும் தக்க வைத்துக் கொள்ளும் என்பதில் நம்பிக்கை இழந்த வெளிநாட்டு நிறுவனங்கள் தமது முதலீடுகளை விற்று விட்டு சீனாவில் இருந்து வெளியேறுகின்றன. தென் கொரியா உட்பட்ப பல ஆசிய நாடுகள் தமது பங்குச் சந்தை விலையை நிலைப்படுத்த என நிதியங்களை உருவாக்கியுள்ளன.

பங்குச் சந்தை விலைச் சரிவைச் சந்திக்கும் போது அந்த நிதியங்கள் பங்குகளை வாங்கும். விலை ஏறும் போதுவிற்கும். இப்படி ஒரு நிதியம் சீனாவில் இல்லாதது சீனாவில் முதலீடு செய்பவர்களைத் தயங்க வைக்கின்றது.

*2. சீன நாணயம் மேலும் மதிப்பிழக்கலாம் என்ற அச்சம்.*

றென்மின்பி என்றும் யூவான் என்றும் அழைக்கப்படும் சீன நாணயத்தின் பெறுமதியை முன்னர் அதன் மைய வங்கி நாள் தோறும் காலை 9.15இற்கு நிர்ணயித்து வந்தது. இதை நடுப்புள்ளி என்பர் பின்னர் நாணயம் சந்தையில் நடுப்புள்ளியில் இருந்து இரண்டு விழுக்காட்டிலும் பார்க்க கூட ஏற்றவோ இறக்கவோ அனுமதிக்கப்படுவதில்லை. இப்போது இது கைவிடப்பட்டு நாணயச் சந்தைதான் நாணயத்தின் பெறுமதியை நிர்ணயம் செய்யும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இனி சீனாவின் நடுப்புள்ளியை சீன மையவங்கி தான் விரும்பியபடி தினம் தோறும் தீர்மானிக்காமல் முதல் நாள் சந்தை மூடப்படும்போது என்ன பெறுமதியில் றென்மின்பி இருந்ததோ அதே அடுத்தநாள் நடுப்புள்ளிப் பெறுமதியாக்கப்படும். இது சீன நாணயத்தின் பெறுமதியில் அதன் மையவங்கியின் தலையீட்டைக் குறைக்கின்றது. இந்த முடிவால் சீன நாணயத்தின் பெறுமதி குறையைலாம் என்ற அச்சம் பன்னாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் தோன்றியுள்ளது. இதனால் அவர்கள் சீனாவில் தாம் செய்த முதலீடுகளை சீன நாணயத்தின் பெறுமதி மேலும் வீச்சியடையும் முன்னர் அதை விற்றுக் கொண்டு அமெரிக்க டொலர்களாக மாற்ற முயல்கின்றனர்.

*3. ஏறு முகமாக நிற்கும் அமெரிக்க டொலர்*

அமெரிக்கப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அங்கு வேலையற்றோர் தொகை வீழ்ச்சியடையும் அதேவேளை ஊதியம் உயர்வடையாமல் இருக்கின்றது. இதுபோன்ற காரணிகளால் அமெரிக்க டொலரின் மதிப்பு இனி ஏற்றத்தையே அடைந்து கொண்டிருக்கும் எனப் பன்னாட்டு முதலீட்டாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள் அதனால் அவர்கள் சீனாவில் முதலிடுவதிலும் பார்க்க அமெரிக்காவில் முதலீடு செய்ய விரும்புகின்றார்கள்.

*4. வளர்ச்சி வேகம் குறையும் சீனப் பொருளாதாரம்.*

சீன 2015-ம் ஆண்டிற்கான தனது பொருளாதார வளர்ச்சி எதிர்பார்ப்பை 7.5விழுக்காட்டில் இருந்து 7.4 விழுக்காடாகக் குறைத்துள்ளது. 2015 ஒகஸ்ட் மாதத்திற்கான சீனாவின் முதலீட்டு அதிகரிப்பும்(10.9மு) தொழிற்சாலைகளின் உற்பத்தியும்(6.4மு) எதிர்பார்த்ததை விடக் குறைவாகவே அமைந்திருந்தன. சீனாவின் கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டி ஜூலை மாதம் 50ஆக இருந்து ஒகஸ்ட் மாதம் 49.7 ஏழாகக் குறைந்துள்ளது. இந்தப் புள்ளி விபரங்கள் வெளிவந்த பின்னர் 2015 செப்டம்பர் மாதம் 14-ம் திகதி சீனப் பங்குச் சந்தையும் வீழ்ச்சியைக் கண்டது. சீன உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களின் விலைகளை பெரிய அளவில் குறைக்கின்றார்கள். இதனால் சீனாவில் இலாபத் திறன் குறைகின்றது. பொருளாதாரத்தில் இலாபத் திறன் குறையும் போது முதலீடுகளுக்கான கவர்ச்சி குறைகின்றது.

பொருளாதாரப் புள்ளி விபரங்கள் மோசமாக இருப்பதால் சீன அரசு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஊட்ட எடுத்த முயற்சிகள் பின்னடைவைச் சந்தித்தன. ஏற்கனவே சீனாவின் புள்ளி விபரங்கள் மிகைப்படுத்தப் பட்டவை என்ற கருத்துப் பரவலாக நிலவுகின்றது.

*5. சீனாவில் இருந்து வெளியேறும் செல்வந்தர்கள்*

சீனச் செல்வந்தர்கள் தமது நாட்டில் இருந்து பெருமளவில் வெளியேறுவது கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடந்து கொண்டே இருக்கின்றன. கடந்த 14 ஆண்டுகளில் 91000 செல்வந்தர்கள் சீனாவை விட்டு வெளியேறியுள்ளார்கள். இவர்களில் ஒருவரின் சொத்து ஆகக் குறைந்தது ஒரு மில்லியன் டொலர்களாகும். இவர்கள் தமது சீன முதலீட்டை வெளிநாடுகளுக்கு கடத்துகின்றனர். சீன ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதி விலைகளை கூட்டிக் காட்டி அதன் மூலம் கிடைக்கும் வெளிநாட்டு நாணயங்களை இந்த நாட்டை விட்டு வெளியேறும் செல்வந்தர்களுக்கு விற்பனை செய்கின்றனர். சீனாவில் இருந்து ஒருவரி ஐம்பதியானையிரம் டொலர்களை மட்டுமே வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லலாம். 200-ம் ஆண்டிற்கும் 2014-ம் ஆண்டிற்கும் இடையில் சீனாவில் இருந்து 3.7 ரில்லியன் டொலர்கள் வெளிநாட்டிற்குக் கடத்தப்பட்டுள்ளது. 2008-ம் ஆண்டின் உலகப் பொருளாதார வீழ்ச்சி சீனாவைப் பெருமளவு பாதித்த 2011-ம் ஆண்டு மட்டும் 600 பில்லியன் டொலர்கள் சீனாவில் இருந்து கடத்தப்பட்டுள்ளன.

**ஒரு நாட்டின் நாணயத்தின் பெறுமதி குறையப் போகின்றது என்ற எண்ணத்தில் அங்கிருந்து மூலதனம் வெளியேறும் போது நாணயத்தின் பெறுமதி மேலும் மோசமகக் குறைவடையும்.**

*6. சீனச் செல்வந்தர்களின் உல்லாசப் பயணம்*

சீனச் செல்வந்தர்கள் ஜப்பான், சிங்கப்பூர் போன்ற பௌத்த நாடுகளுக்கு உல்லாசப் பயணிகளாகச் செல்வதும் அங்கு ஆடம்பரப் பொருட்களைக் கொள்வனவு செய்வதும் சீனாவில் இருந்து நிதியை வெளியேறச் செய்கின்றது.

*7. வெளிநாட்டு நிறுவனங்களை வாங்கும் சீன நிறுவனங்கள்*

அமெரிக்காவிலும் வேறு பல நாடுகளிலும் உள்ள நிறுவனங்களை சீன நிறுவனங்கள் வாங்குகின்றன. அமெரிக்காவின் நிகழ்வுகளை ஒழுங்குச் செய்யும் நிறுவனம் ஒன்றை சீன நிறுவனம் 650மில்லியன் டொலர்களுக்கு வாங்கியது. இப்படிப் பல நிறுவனங்கள் துருக்கியிலும் வாங்கப்பட்டன.

ஏற்றுமதியிலும் உள்ளூர் முதலீட்டிலும் தனது பொருளாதாரத்தை வளர்த்து வந்த சீனா இப்போது உள்நாட்டுக் கொள்வனவை அதிகரித்து அதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த முயல்கின்றது. தனிநபர் வருமானம் குறைவாக உள்ளதும் இப்போதும் ஒரு வளர்முகநாடாகவும் இருக்கும் சீனாவில் இது மிகவும் சிரமமான காரியம். ஒரு நாட்டின் நாணயத்தின் பெறுமதி குறையப் போகின்றது என்ற எண்ணத்தில் அங்கிருந்து மூலதனம் வெளியேறும் போது நாணயத்தின் பெறுமதி மேலும் மோசமகக் குறைவடையும்.


கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
▶ Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
▶ வியாபாரத்தை பலப்படுத்த...
▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN
BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com
Chartered Accountants and Business Recovery Professionals
- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping
R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

# Hybrid court unworkable in 'Sri Lanka' context



By K. Sivapalan

Internal investigations on violence against Tamils carried out by Commissions of Inquiry (CoI) with members appointed by Sri Lanka officials in the past have always been a failure. "The main reason for the failures can be traced to the absence of political will in successive Buddhist majority governments in 'Sri Lanka' to ensure accountability for grave violations of Human Rights of Tamil people," says K. Sivapalan, the exiled deputy chairperson of a Tamil rights group, North East Secretariat on Human Rights (NESoHR). Two of the commissions had "international" presence in 1963 and in 2006, in a hybrid context, but failed to deliver justice. As a lawyer who represented several victims from the Eastern Province, Mr Sivapalan says, for any criminal investigations to be successful, hearings of the courts will have to be held outside the island.

The present agreement between the SLFP and UNP is only for two years. If the present government loses grip on governance, even a local mechanism assisted by foreign Experts and UNHRC will not be possible, according to Mr Sivapalan who is an Attorney-at-Law (Ilangkai), Solicitor (England and Wales) and Barrister and Solicitor (Australian Capital Territory).

Full text of the article by Mr Sivapalan follows:

G.L.Peiris, a former SL Minister of Justice has also admitted the inability of the domestic system, referring to the three zonal Commissions of Inquiry appointed in November 1984 to investigate Involuntary removals and Disappearances: "Sri Lanka government owes a duty to the kith and kin of those disappeared to ascertain the fate of their loved ones, and offer some compensatory relief to lighten their misery but it is impossible for them to embark on a futile and impossible task to apportion the blame."

There had been nearly eighteen Commissions of Inquiry in the past from 1963 to 2013 and the latest being the Presidential Commission on Missing Persons chaired by Maxwell Paranagama, mandate of which was later extended to cover war crimes.

Majority of these commissions were associated with violence against Tamils. Two of the commissions had "international" presence.

The first notable one being the Commission appointed in June 1963 by William Gopallawa, Governor General of Ceylon to investigate the killing in 1959 of the then Prime Minister S.W.R.D.Bandaranaike and to determine whether there was a wider political conspiracy in the assassination.

Another Commission of Inquiry was appointed to investigate and inquire into sixteen serious violations of Human Rights since 1st August 2005, including the Trincomalee 5 (students) and Moothoor 17 ACF Humanitarian Workers all of whom were Tamil speaking.

The Bandaranaike Commission of Inquiry had Justice T.S.Fernando, Judge of the Supreme Court of Ceylon and two "international" Judges, Hon. Adel Younis, a Judge from United Arab Emirates and Hon.G.C.Mills-Odoi, Judge of the Court of Appeal of Ghana. Both judges were invited by the SL government to participate in the "hybrid court."

The second Commission did not have foreign Judges but had a body of International Observers, the International Independent Group of Eminent Persons (IIGEP), headed by Justice S.N. Bhagwati, a former Chief Justice of India and a former head of the UN Human Rights Committee. The members of the IIGEP were nominated by the then President of Sri Lanka, Mahinda Rajapaksa.

But, during its tenure, the IIGEP quit half way after the investigations began, citing conflict of interest in the proceedings before the Commission, lack of effective legal framework for victim and witness protection, lack of transparency and timeliness in the proceedings, lack of full co-operation by state bodies, and lack of financial independence of the commission.

The IIGEP recommended that the government of Sri Lanka not allow the Attorney General (AG) to function as Counsel assisting the Commission of Inquiry, as there is a conflict of interest with the AG being the Principal legal Officer of the State.

'Sri Lanka' continued to allow the AG to intervene in IIGEP's functions.

When Dr. Manoharan father of Rajiharan, one of the 5 students murdered by the STF in the Trincomalee beach on 02 January 2006, started to give evidence via Satellite from a European country, the testimony presented damaging details implicating the security forces. The SL government promptly withdrew the funding and stopped any video evidence. Dr. Manoharan has recently said that he will not go to 'Sri Lanka' to give evidence if the Hybrid court sits in the island.

Tamil National Alliance (TNA) Member of Parliament (MP) Mr. Sumanthiran has gone on record stating that there are more than 80 witnesses in Sri Lanka who could give evidence.

However, Mr. Muthurasa, the father of Dilrukshan, who was beaten and tortured by prison officers in Vavuniyaa, Anuradhapura and Mahara Prisons, said in a recent radio interview that he would not give evidence if the sittings take place in 'Sri Lanka' as he knows how his son was treated. His son died in Mahara hospital in July 2012 as a result of the injuries after being in coma for weeks.

As an attorney who participated in several cases, I think the same will be true for the other potential witnesses.

With the lack of proper victim and witness protection, and the climate of impunity enjoyed the perpetrators of violence against Tamils, potential witnesses will fear for their lives if asked to give evidence in 'Sri Lanka' against members of the SL State Armed Forces.

For any criminal investigations to be successful hearings of the courts will have to be held outside the island and arrangements have to be made for the witnesses to settle in a country away from 'Sri Lanka' if the local climate continued to be hostile.

Lawyers like me who have appeared even in Courts in matters of Habeas Corpus Applications and in Inquest proceedings of innocent youths killed by the members of SL Armed forces have firsthand knowledge of how witnesses and relatives of the deceased are threatened, if they are prepared to give evidence against them.

In the Trincomalee Gandhinagar 3 murder case, where there was a 'Hartal' (General shut down of shops, working places, protest rally and sit ins) in Trincomalee on 11 October, 2002, observed by Tamil people condemning the killing of 7 Tamils on 9 October 2002 at Kaanchirankudaa in Amparai district within the Eastern Province by the Special Task Force (STF).

The STF is a division of the SL Police, originally trained by the Mossad of Israel at the request of the then SL president J.R.Jayawardene, who was from the UNP and the uncle of the present SL Prime Minister Ranil Wickramasinghe, who is also from the UNP. J.R.Jayawardene's son Ravi Jayawardene was the first Commander of the STF.

The three Tamil youths, namely, S. Konalingam and S. Mayooran from Gandhinagar, and N. Sasitharan from Palaiyoothu, were killed in the attack by the SL Police from Uppuveli Police Station.

I watched the interest of the victims and Ajith Rohana who was the Police Spokesperson in the Rajapakse Government lead evidence.

> With the lack of proper victim and witness protection, and the climate of impunity enjoyed the perpetrators of violence against Tamils, potential witnesses will fear for their lives if asked to give evidence in 'Sri Lanka' against members of the SL State Armed Forces.

The only witness who could identify the policemen believed to be the murderers, was threatened by the SL police so that he left the town and later left the island and went to the Middle East without attending the identification parade and the case collapsed.

The stability of the present Srisena/Wickremasinghe government is questionable given the presence of extreme Sinhala nationalism nurtured by the predecessor Government.

There are about 54 members from the UPFA including the former SL President who was the Defence Minister and the Supreme Commander of the Armed Forces and who according to the chain of command likely bear responsibility for the crimes of the SL Armed Forces. They sit in the opposition benches.


SL President Maithripala Srisena was the acting Minister of defence during the last days of the war. One can hardly expect full cooperation for a Hybrid mechanism, the mission of which is to determine culpability to crimes.

The agreement between the SLFP and UNP is only for two years. If the present government loses grip on governance, even a local mechanism assisted by foreign Experts and UNHRC will not be possible.

*Courtesy: TamilNet*

MGS MASS GLOBAL SHIPPING
Mass Global Shipping
Reliable, Dependable and honourable



Special Offer
Freight
+
Wooden Box
£65.00


உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதுகாப்பாகவும் துரிதமாகவும்
குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.
CITY WAREHOUSE
Located at BIG YELLOW STORAGE, Wandsworth
Mass Global Shipping – 100 Garratt Lane, London SE18 4DJ
T: 020 8864 4244 M: 07940108177
Special Offer
Within London Collection
£10/-*
* Within London Postcode Only
Door 2 Door Island-wide
within Colombo £40*
* T carton
VEHICLES SHIPMENT
From £725 all inclusive*
Conditions Apply
No Hidden Charges
No 3rd Party Agents
Fully Gated Yard Facility 24X7 CCTV Monitoring
No. 58, THE ARCHES, HARROW, HA2 8AA
Tel : 0208 422 1232, 0208 864 4244
Opening Times - Monday to Friday 9am – 6pm | Saturday 9am-6pm
E-Mail: info@massshipping.com Web : www.massshipping.com
4 Collection Points :
Harrow, Watford, Knightsbridge, Croydon

# On Genocide; An Open Letter to ITAK MP Sumanthiran



Dear Mr. Sumanthiran MP,

Permit me to begin by saying, that the use of the "G" word should be measured. That said, I want to make it abundantly clear what happened in Mulliyvaikal was indeed "Genocide" and fits the definition perfectly – if you as a lawyer feel that you can't prove it as such with the mountain of evidence available, your certificate is not worth the paper it is printed upon.

I've never cried Genocide for what happened to our beloved Tamil people and us as a community and citizens of "Sri Lanka." – Yet, it is very evident that since the Sinhala Sri Riots, Sri Lanka has crossed the threshold of the G-word in every communal violence subsequent to that. You yourself was displaced twice as I recall in one of your narratives.

If it would be difficult to get a hearing at the International Criminal Court, for that is the rightful place for any "Genocide" trial to be heard, I am quite happy to have them on the docks on a watered down charge of "War-Crimes and Crimes Against Humanity" in a properly constituted hybrid court within the shores of Sri Lanka. .My wish is to get the perpetrators on the dock wherever and however possible!

However, I take it very personally when you degrade the Northern Provincial Council and our much respected Chief Minister Hon. Wigneswaran and in the process insult every member of our ethnic group – for passing the resolution asserting the actions of the then administration of Mahinda Rajapaksa (not to mention previous governments) constituted "Genocide."

Permit me to throw some light as to why the word "Genocide" came into being. The purpose was to make the crime of mass murder of any or all of a group of people by their own government, an international offence. It is pure and simple one can never take one's Government within the geographic boundaries of that particular country. It is worth noting at the time of the now famous Nuremburg Trial there was no law to deal with a crime of the magnitude of the holocaust. The word "genocide" was not in use before 1944. Before this was established, Winston Churchill referred to it as a crime with no name. In that year, a Polish-Jewish lawyer named Raphael Lemkin described the policies of systematic murder founded by the Nazis as genocide. The word genocide is the combination of the Greek word "geno" (meaning tribe or race) and "caedere" (the Latin word for to kill). The word is defined as a specific set of violent crimes that are committed against a certain group with the attempt to remove the entire group from existence or to destroy them. Lemkin defined genocide as follows:

Generally speaking, genocide does not necessarily mean the immediate destruction of a nation, except when accomplished by mass killings of all members of a nation. It is intended rather to signify a coordinated plan of different actions aiming at the destruction of essential foundations of the life of national groups, with the aim of annihilating the groups themselves. The objectives of such a plan would be the disintegration of the political and social institutions, of culture, language, national feelings, religion, and the economic existence of national groups, and the destruction of the personal security, liberty, health, dignity, and even the lives of the individuals belonging to such groups.

Mr. Sumanthiran, please enlighten me as to which court, other than the International Criminal Court can the crime of genocide be proven? I've watched the video posted on your Facebook and read what you have said in Geneva this week. I respectfully urge you to limit your intellectual arguments to established facts. Just the fact that you are a lawyer does not give you the right to lie, either directly or by inference. In my considered opinion the threshold to "genocide" has been crossed by the armed forces of Sri Lanka and her allies many times over at Mulliyvaikal as defined in the United Nations General Assembly Resolution 260A (III) Article 2 which states; Genocide means any of the following acts committed with intent to destroy, in whole or in part, a national, ethnical, racial or religious group, as such: (a) Killing members of the group; (b) Causing serious bodily or mental harm to members of the group; (c) Deliberately inflicting on the group conditions of life calculated to bring about its physical destruction in whole or in part; (d) Imposing measures intended to prevent births within the group; (e) Forcibly transferring children of the group to another group.

I do understand why the G-word is not preferred. It is because then it makes it an International crime, automatically making it eligible to be tried in the International Criminal Court. I wonder if you have a special tool to say whether massacre qualifies as Genocide and if so where and at which point according to the laws of Sumanthiran.

My advice to you Sir going forward is to let reason be your tool and justice be your cause anything else will not do. Anything less from you will be undermining human rights and democracy itself in Sri Lanka. We want accountability and not excuses and cover ups. You Sir now stand accused as an accomplice after the fact in a cover up of a heinous crime of "Genocide" along with R Sampanthan and the current administration of President Maithripala Sirisena, and Prime Minister Ranil Wickremasinghe – who incidentally called our Chief Minister a liar and vowed that he would never talk to him showing his intent and eventual avoidance of meaningful reconciliation and lasting and meaningful peace in my beloved country, Sri Lanka (I loved it better when it was just plain Ceylon).

Awaiting your reply,

*Your one time fan and supporter,*

*Karthigesu Nirmalan-Nathan*

*Courtesy: Colombotelegraph.com*



# KIDS பேப்பர்

## சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்

போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன்போரிட்டாலும்அவனின்படைமிகவும்சிறியடாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றன். தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனைவென்ற அரசன்கட்டளைபிறப்பித்தான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.


தோல்வி கண்ட அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.



இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கடைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் ? இச் சிறு சிலந்தியே பல முறைதோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்?

நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்? என்று எண்ணினான் மறுபடியம் தன் எதிரியுடன் போர் புரிய தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான்.

தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரைபோதித்தஅந்தசிலந்தியைஅவன்என்றுமேமறக்கவில்லை.




## SuDoku

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 1 | |
| | 2 | | |
| | | 2 | |
| | 1 | 4 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 1 | 2 |
| | | | |
| | | | |
| 4 | 2 | 3 | 1 |

## Jokes...

**Q:** Why did the cat go to Minnesota?
**A:** To get a mini soda!

**Q:** What do you call a fish without an eye?
**A:** Fsh!

**Q:** What goes tick-tock, bow-wow, tick-tock, bow-wow?
**A:** A watch dog.

**Q:** What do you do if your dog chews a dictionary?
**A:** Take the words out of his mouth!

**Q:** Why did the cow cross the road?
**A:** To get to the udder side.

**Q:** What do you call a cold dog sitting on a bunny?
**A:** A chili dog on a bun.

**Q:** Why do fish live in salt water?
**A:** Because pepper makes them sneeze!

**Q:** Where do mice park their boats?
**A:** At the hickory dickory dock.

**Q:** Where did the sheep go on vacation?
**A:** The baaaahamas

**Q:** What do you call a thieving alligator?
**A:** A crookodile

**Q:** What do you call a cow that eats your grass?
**A:** A lawn moo-er.

**Q:** What do you call a girl with a frog on her head?
**A:** Lilly.

**Q:** How does a dog stop a video?
**A:** He presses the paws button.

*- Jakulan*

## Colouring - 250





Pranavee



Sobini

Eatin' good in the neighbourhood

PIONEERS IN CHETTINAD CUISINE WITH SINCE 1964

# ANJAPPAR

Chettinad A/C Restaurant

FOOD HYGIENE RATING 0 1 2 3 4 5 VERY GOOD

Quality and Service is our Motto

## High Class Indian Veg & Non Veg Restaurant

## @ EAST HAM, LONDON



**233-235 High Street North, East Ham, London, E6 1JG**

**Email : anjapparlondon@hotmail.com**

# Tel : 0208 552 1155

Opening Hours : 12.00 to 23.00





INDIA ◇ SINGAPORE ◇ MALAYSIA ◇ DUBAI ◇ ABUDHABI ◇ QATAR ◇ KUWAIT ◇ AUSTRALIA ◇ USA ◇ CANADA

# PLEASE COLLECT DISCOUNT VOUCHER IN A SHOP



CELEBRATIONS by
SHREE VENILALS UK
தீபாவளித் திருநாள் மற்றும் நவராத்திரியை
முன்னிட்டு மாபெரும் விலைச்சலுகைகள் !!
SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES
மங்கையர்
மனங்கவர்
ஆடைகளின்
சங்கமம்!
DESIGNER
LEHNGA
SUITS
DESIGNER
PAVADAI & HALF
SAREES
DESIGNER
SALWAR
SUITS
DESIGNER
COSTUME
JEWELLERY
EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES
ராசியான
கூறைப்புடவைகள்
அனைத்து
வகையான
சாறிகள் மற்றும்
சிறுவர்களுக்கான
உடைகளைத்
தரமாக
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
Shree Venilal's
115/117 Ealing Road
Wembley.
HA0 4BP
Tel: 020 8903 3144
Celebrations
by Shree Venilal's
99/103 Ealing Road
Wembley, HA0 4BP
Tel: 020 8795 3051
Warehouse by
Shree Venilal's & Celebrations
95/97 Ealing Road
First Floor
Behind Bus Stop / On Top Of Jalaram Sweets Wembley.
விலைச் சலுகைகளைத் தவற விடாதீர்கள் இன்றே நாடுங்கள்!!!
உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றிகள்...

# தெய்வமிகழேல்

இறைவன் உண்டு என்பவர்களை ஆர்த்திகர்களாகவும், இல்லை என்பவர்களை நார்த்திகர்களாகவும் கருதப்படுவது உலக வழக்கம். இதில் இறைவழிபாடு, சுருவ வழிபாடு, தியான வழிபாடு என தத்தம் மதசார்பு அடிப்படையில் உலக மக்கள் பிரிந்து தொழுகை செய்வது அந்த இறைவனை நோக்கி என்பதே உண்மை. பிரபஞ்சம் என்ற அண்ட வெளிக்குள், சூரிய குடும்பத்தைப்போல ஏராளமான குடும்பங்கள் இருப்பதாக வானியலாளர்கள் கூறுகின்றனர். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தொலைநோக்கிகள் ஊடாகவும், எத்தனையோ கிரகங்களைக் கண்டுபிடித்தும், இவற்றைப் படைத்த இறைவனை இதுவரை கண்டுகொள்ள முடியாமல் போனது விந்தையிலும் விந்தை.

விஞ்ஞான உலகில் வசிக்கும் எம்மக்களால், மெய்ஞான அறிவினால் எமது முன்னோர் வகுத்து வைத்திருக்கும், வழிபாடுகளை பின்பற்ற முடிகிறதே ஒழிய இறைவனை நேரில் தரிசித்தவர்கள் எவரும் இல்லை. அவரவர் கற்பனைக்கும், சிந்தனைக்கும் ஏற்ற வகையில் இறைவனின் வடிவத்தை, பல்வேறு வடிவங்களில் பதியவைத்து ஆலயங்கள் அமைத்து வழிபடுவதுதான், எமக்கு வகுக்கப்பட்ட தெய்வநெறி. இயற்கையின் படைப்பில், மலைவளம், கடல் வளம், மரம், செடி, கொடி, புல், பூண்டு,உயிரினம், விலங்கினம் அத்தனையும் ஒன்றுக்கொன்று உதவியாகவும், தேவைக்கேற்ற வகையில் தீனியாகவும் செயற்பட வைத்தவர் யார் என்ற கேள்விக்கு விடையே இறைவன் எனப் பகுத்து விட்டனர். அதனால்தான் மனிதராகப் பிறந்த ஜீவராசிகள் தமது குறையையும், நிறைவையும் இறைவனிடத்தில் சமர்ப்பிப்பது உலக இயல்பு.

வாழ்வில் கிடைக்கும் மகிழ்ச்சி, குதூகலம், கொண்டாட்டம் எமக்குக் கிடைக்கும்போது தெய்வத்தைப்புகழாத எம்மக்களால், இடர்கள், துன்பம், வறுமை, பசி, பட்டினி என்பவை அணுகும்போது மட்டும் தெய்வத்துக்கு கண்ணில்லையோ என்றுநிந்திப்பது, சாதாரணமாக எமது செவிகளில் கேட்கும் சலிப்பான எதிரொலி. தெய்வம் எவரையும் பழிவாங்குதில்லை. கல்லினுள் வசிக்கும் தேரைக்குக்கூட இரை தரும் இறைவன் மனிதர்களை வஞ்சிக்கமாட்டார்.

ஒவ்வொரு ஜீவராசிக்கும், அதனதன் பிறப்புக்கமைய சகல வசதிகளையும் தாராளமாகக் தந்துதவும் தெய்வத்தை இகழாதே என்பது ஔவையாரின் வேண்டுதலாகும். எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பது இயற்கையின் வழியில் நாம் வாழ்வோமானால் என்றும் இன்பமே ஒழிய துன்பமே இல்லை. என்ன இடர்கள் வந்தாலும், தெய்வத்தை இகழாமல் வாழப் பழகிக் கொள்வோம்.

# பயோமாஸ் மின் நிலையம்

கார்பன்டைஒக்சைட்டால் வளிமண்டலம் மாசடைவதைத் தடுக்க, பிரித்தானியா முதல் அடி எடுத்து வைத்துள்ளது. அதிகபட்சம் 23 கோடி தொன் எடை மதிக்கத்தக்க $CO_2$ வளிமண்டலத்தில் ஆண்டுதோறும் கலந்து விடாமல் பயோமாஸ் (BIOMASS) எனும் புதிய பொறிமுறை மூலம் மின்சார உற்பத்தியை உருவாக்கலாமென ட்ராக்ஸ் (DRAX) என்ற நிறுவனம் தனது முதல் உற்பத்தி நிலையத்தை யோர்க்ஷயர் பகுதியில் ஆரம்பித்துள்ளது. இங்கு உற்பத்தியாகும் மின்சாரம் பிரித்தானியாவின் பத்தில் ஒரு பங்கு தேவையை ஈடு கொடுக்குமென்பது நம்பிக்கை.

அள்ள அள்ள எத்தனை ஆண்டுகளுக்கு கரிச்சுரங்கங்கள் கை கொடுக்குமென நம்பியிராமல், மரங்களை வெட்டி விறகாக எரித்துக் கிடைக்கும் பயோமாஸ் மூலம், இப் பிரமாண்டமான மின்உற்பத்தி நிலையத்தை இயக்க ட்ராக்ஸ் நிறுவனம் தயாராகி விட்டது. அமெரிக்காவின் மிகப்பெரிய நதியான மிசூசிப்பியின் இருகரையிலும் வளரும் காடுகளிலிருந்து மரங்களை வெட்டி, துண்டு துண்டாகக் காயவைத்து, கப்பல் மூலம் தருவிக்க ஏற்கனவே பேட்டன் டூஸ் (BATON ROUGE) என்ற இடத்திலுள்ள துறைமுகம் தயாராகி விட்டது. இதை விட, பிரித்தானியாவின் வடகடல் பகுதிக் காடுகளும் கை கொடுக்குமென நம்பப்படுகிறது.

அடுத்த ஆண்டளவில் 7 கோடி எடையுள்ள மரக்குற்றிகள், அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து பிரித்தானியாவை அடையுமென திட்டமிடப்பட்டுள்ளது. அழியும் காடுகளுக்குப் பதிலாக புதிய காடுகள் வளர்க்கப்படும் திட்டம் இதனுள் அடக்கப்பட்டுள்ளதால் பசுமைப் புரட்சி இயக்கங்கள் அஞ்சத் தேவையில்லையென ட்ராக்ஸ் நிறுவனத்தின் உப அதிபர் ரிச்சார்ட் பேபேர்டி ((RICHARD PEBERDY) தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி, மின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் 6 மின் வெளியேற்றிகளில் (GENERATORS) நான்கை அடுத்த வருடத்தில் இயங்க வைக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. வளிமண்டலம் மாசடைவதைத் தடுக்க இது ஒரு நல்ல முயற்சி என சுற்றுச்சூழல் நலன்விரும்பிகளால் இத்திட்டம் வரவேற்கப்படுகிறது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

# நல்லூரின் வாசம்

நல்லூர் கோவில் கொடியேறினாலே, யாழ் நகர் தன்னையறியாமலே விழாக்கோலம் பூண்டுவிடும். கோவிலுக்குச் செல்லும் பாதைகள் அனைத்துமே தினந்தோறும் துப்பரவு செய்து, குப்பை கூளங்கள் அகற்றப்பட்டு, கோவிலை அண்மித்த பகுதிகள் நீரினால் கழுவப்பட்டு சுகாதாரம் பேணப்படும். கோவிலின் சுற்றாடலிலுள்ள வீடுகளில் புனிதம் காக்கப்படும்.

இக்கோவிலின் உற்சவகாலம் 25 நாட்கள் என்பதால், யாழ் மாநகர சபை சகல ஒழுங்குகளையும் ஒருங்கிணைத்து, கோவிலைத் தரிசிக்க வரும் அடியார்களின் நலன்கருதி, போக்குவரத்து, சுகாதாரம், பாதுகாப்பு ஆகிய முக்கிய தேவைகளை நன்கு திட்டமிட்டு, பராமரிக்க யாழ் மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் அவர்கள் மிகப்பொறுப்புடன் கடமையாற்றுவதை இங்குள்ள பணிகள் பறை சாற்றுகின்றன.

கோவிலினுள் கூடும் பக்தர்களை வழிநடாத்தும் பணி, கோவில் நிர்வாகத்தின் பொறுப்பில் இருந்தாலும், திரும்பிய பக்கமெல்லாம் சீருடையுடனும், சிவில் உடையுடனும் கடமையாற்றும் காவல்துறையினரை மெச்சாமல் இருக்க முடியாது. கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் ஆண் - பெண் காவல்துறையினர் வெறும் தொழிலாகக் கருதாமல், தொண்டாகப் பணி புரிவது, போர்ச்சூழலின் பின்னர் ஏற்பட்ட பாரிய திருப்பமெனவும் கூறலாம்.

காலை உற்சவங்களையும், மாலை உற்சவங்களையும் காணத்துடிக்கும் பக்தர்களின் கூட்டம் கண்கொள்ளாக் காட்சி. இம்முறை புலம் பெயர்ந்த தமிழர்களின் வருகை அதிகளவில் இருப்பதை அவர்கள் அணிந்திருக்கும் உடைகளும், நகைகளும், கைககளில் ஏந்தி நிற்கும் நவீன செல்பேசிகளும் எடுத்துக்காட்டியது. அலங்காரக் கந்தன் வீதியுலா வரும்போது, கைகளைத் தூக்கி ஆராதனை செய்பவர்களை விட, செல்பேசிகளில் படம்பிடிக்க கை தூக்குபவர்கள் தான் அதிகம். நல்லூர் முருகனுக்கு இவையெல்லாம் பழகிப்போன கலாச்சாரம்.

தெற்கில் இருந்து வருகை தரும் சிங்கள யாத்திரிகர்களின் கூட்டம் தினமும், திக்குத் தெரியாமல் வழிபாடுகளில் ஈடுபடுவதைக் காணும்போது, இவர்களை வழிகாட்ட கோவில் நிர்வாகம் ஏதாவதொரு தொண்டு நிறுவனத்தை அமர்த்தியிருக்கலாமென மனதில்பட்டது. எனினும், அவர்கள் காட்டிய பயபக்தி மனதைத் தொட்டது. தெய்வத்தின் முன் எல்லோரும் சமம். இதில்...., மொழி, இனம் என்ற வேறுபாடே இல்லையென்பதை நிரூபித்தது.

இச் செய்தி பிரசுரமாகு முன்னர், நல்லைக் கந்தன் தேரினிலும் பவனி வந்து, தீர்த்தமும் ஆடிவந்து, திருக்கல்யாண கோலமும் பக்தர்களுக்கு காட்டி விடுவான். இவ் அலங்காரக் கந்தனை இம்முறை காணத்தவறியவர்கள் அடுத்த வருட உற்சவத்திலாவது, பிரசன்னமாக எல்லாம்வல்ல முருகன் அருள்பாலிக்கட்டும்.


SURREY PAWNBROKERS
(அடைவு கடை)
உங்கள் நகை அடைவில் உள்ளதா ?
2.5 % அதி கூடிய வட்டியா ? 2.5 %
கவலை வேண்டாம் !
நாம் நேரில் வந்து உங்கள் நகைகளை மீட்டு
குறைந்த வட்டியில் மீள் அடைவு செய்து தரப்படும்.
CHOOSE YOUR CONTRACT
1 MONTH CONTRACT OR 6 MONTH CONTRACT
(NO NEED APPOINTMENT, CASH AVAILABLE ALL THE TIME)
• நாணய மாற்று சேவை - EURO, USD, CAD
BEST RATE GURANTEED
• காசோலை மாற்றுதல் - CHEQUE CASHING
• LOG BOOK LOAN - உங்களிடம் கார் உள்ளதா? LOG BOOK க்கு பணம்
இலங்கை, இந்தியா மற்றும் ஏனைய நாடுகளுக்கான RIA, Western Union ஊடான பணபரிமாற்று சேவையும் DHL, FEDEX, TNT, UPS ஊடான துரித பார்சல் சேவையும்
உங்கள் நகைகளுக்கு பிரித்தானியாவில் அங்கீகாரமும்,
உத்தரவாதமும் பெற்ற ஒரே தமிழ் நிறுவனம் SURREY PAWNBROKERS
தொடர்புகளுக்கு: Surrey Pawnbrokers
94, TOLWORTH BROADWAY, TOLWORTH,SURREY, KT6 7HT
T: 0208 399 9176 M: 07947 579 682



newlife
Home of Fertility, Immunology & Women's Health
Newlife Fertility Clinic
20 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொண்டு குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்கிடுங்கள்
Access Fertility
நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் விசேட விலைகழிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

We provide the best affordable infertility treatments (IVF, IUI, ICSI)
www.newlifeclinic.org.uk
T : 01372 738 932
The Pines, 2 The Parade, Epsom KT18 5DH

# அமெரிக்க விமான மேலாதிக்கம்

**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

வாஷிங்டனில் நடந்த வான் மற்றும் விண்வெளி தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய ஐரோப்பாவிற்கும்ஆபிரிக்காவிற்குமான அமெரிக்க வான் படைத் தளபதி ஜெனரல் பிராங் கொரேங் இரசியா அமெரிக்காவிற்கும் இரசியாவிற்கும் இடையிலான வான்வலு இடைவெளியை தனது புதிய தரையில் இருந்து வானை நோக்கிச் செலுத்தும் ஏவுகணை முறைமை மூலம் குறைத்து விட்டது என்றார். நீண்ட காலமாக உலக வான் பரப்பில் தன்னிகரில்லாமல் இருந்த அமெரிக்காவிற்கு இரசியாவும் சீனாவும் பெரும் சவால் விடக்கூடிய வகையில் தமது வான் படைகளை வலிமை மிக்கதாக்கிக் கொண்டிருக்கின்றன.

### ◆ சிக்கனமும் படை வலிமையும்

ஐக்கிய அமெரிக்காவின் விமானப் படை உலகில் தனது மேலாதிக்கத்தைத் தக்க வைக்கப் பெரும் பாடு படுகின்றது. அமெரிக்க அரசின் சிக்கன நடவடிக்கைகளுக்கு மத்தியில் விமானப்படைத்துறையினர் தமது உலக மேலாதிக்கத்தை நிலை நாட்ட வேண்டியுள்ளது. 2014-ம் ஆண்டில் இருந்து அமெரிக்கப் பாதுகாப்புத் துறையினரும் அமெரிக்கப் பாராளமன்றமும் வெள்ளை மாளிகையும் பாதுகாப்புச் செலவீனம் தொடர்பாக நீண்ட விவாதத்தை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். வெள்ளை மாளிகையின் பாதுகாப்புச் செலவில் பத்து பில்லியன்களை குறைக்கப் பட வேண்டும் என பாராளமன்றம் வலியுறுத்துகின்றது

### ◆ அமெரிக்காவை வென்ற இந்தியா

2014-ம் ஆண்டு அமெரிக்க விமானப் படையின் தாக்குதல் கட்டளையகத்தின் தளபதி ஹால் எம் ஹோர்ண்பேர்க் இரசியப் போர் விமானங்கள் அமெரிக்கப் போர் விமானங்களிலும் பார்க்க மேன்மையானவை என்றார். இரசியப் படைத்துறையினரையே இந்தக் கூற்று ஆச்சரியப்படவைத்தது. அமெரிக்க விமானப் படையினரும் இந்திய விமானப் படையினரும் நடாத்திய போர் ஒத்திகையின் போதே தான் இதை உணர்ந்து கொண்டதாக ஹோர்ண்பேர்க் தெரிவித்தார். அமெரிக்காவின் F-15C/D Eagle விமானங்களும் இந்தியாவிடமுள்ள இரசியத் தயாரிப்பு Sukhoi Su-30MKI போர் விமானங்களும் ஒன்றை ஒன்று எதிர்க்கும் போர் ஒத்திகை நடாத்திய போது 90 விழுக்காடு தருணங்களில் இந்திய விமானங்கள் வெற்றியடைந்தன.

### ◆ சாம் - இரசியாதான் முன்னோடி

இரசியா தனது சாம் எனப்படும் தரையில் இருந்து வான் நோக்கி ஏவும் ஏவுகணை முறைமைகளை மேம்படுத்தியதன் பின்னர் அமெரிக்காவின் F-22, F-18, A-10 ஆகிய போர்விமானங்கள் இரசியாவின் ஆதிக்கத்திலுள்ள கலினின்கிராட் மற்றும் கிறிமியாப் பகுதிகளை ஒட்டிப் பறக்கும் போது மிகவும் கவனத்துடன் பறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வியட்னாம் போரின் போது ஐக்கிய அமெரிக்காவின் 250 இற்கு மேற்பட்டா விமானங்களைச் சுட்டு வீழ்த்திய இரசியாவின் S-75A Dvina என்னும் சாம் ஏவுகணைகளை இரசியா இப்போது மிகவும் மேம்படுத்தியுள்ளது. அத்துடன் சீனாவிற்கும் அவற்றை விற்றுள்ளது.

### ◆ தொடரும் தலைமுறைகள்

இரசியாவின் ஐந்தாம் தலைமுறை விமானங்கள் அமெரிக்காவின் ஐந்தாம் தலை முறை விமானமான F-35ஐ விட மேன்மையானது எனப்படுகின்றது. படைக்கலங்களை ஏந்திச் சென்று வீசக்கூடிய ரடாருக்குப் புலப்படாத (stealth) ஐந்தாம் தலைமுறை விமானங்கள் உயர் தரப்பறப்புச் செயற்பாடுகளைக் கொண்டதுடன் மிகப் புதிய ரகக் கணனிகளைக் கொண்டதுடன் போர்ச் சூழலில் மற்ற விமானங்களுடனும் படைக்கருவிகளுடனும் கட்டுப்பாட்டகத்துடனும் சிறந்த தொடர்பாடல்களை ஏற்படுத்தக் கூடியவை. பறப்பு வேகம், பக்கக் கூடிய ஆகக் கூடிய தூரம் ஆகியவை அமெரிக்காவின் F-22 இலும் இரசியாவின் T-50 இலும் ஏறக் குறைய சமமாகவே இருக்கின்றன. T-50இன் எடை 37,000 கிலோவாகவும் F-22இன் எடை 38,000 கிலோவாகவும் இருக்கின்றன. இரசியாவின் SU-35 என அழைக்கப்படும் Sukhoi Su-35S Flanker-E என்னும் போர்விமானங்கள் பல மேற்று நாட்டு விமானப் படையினரை கலங்க வைத்துள்ளது.

### ◆ சீனாவின் விமானத் தொழில்நுட்பம்

தொன்மையான தனது விமானப் படையை கடந்த இருபது ஆண்டுகளாக புதுயவையாக்குவதில் சீனா அதிக கவனம் செலுத்தி வருகின்றது. சீனா இரசியாவைப்போல் விமானத் தொழில்நுடப்பத்தில் ஒரு முன்னணி நாடாக இருந்ததில்லை. ஆனால் அது ஒரு முன்னணி நாடாக தன்னை மாற்ற முயற்ச்சிக்கின்றது.

சீன மக்கள் விடுதலைப் படையின் விமானப் படை - China's People's Liberation Army Air Force (PLAAF) அண்மைக்காலங்களாக பல முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை சீனா 2012-ம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் நடாத்திய விமானப்படை ஒத்திகை எடுத்துக் காட்டியது. பதின்நான்கு பல்வேறுபட்ட விமானப் படையணிகளில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட விமானிகள் சீன விமானப் படையின் போர் ஒத்திகையில் ஈடுபட்டிருந்தனர். சீன விமானப்படை வரலாற்றில் இது ஒரு பெரிய ஒத்திகையாகும். இது பதினொரு நாட்கள் நீடித்தது. 30-11-2012இல் சீனா அரங்கேற்றிய விமானப்படை ஒத்திகை பல படைத்துறை ஆய்வாளர்கள் சீன விமானப்படையின் வல்லமையை குறைத்து மதிப்பிட்டிருந்தனர் என்று நிரூபித்தது. நவீன போர் விமானங்கள் எதிரி இலக்குகளை இனம் காண்பதற்கு இரு தொழில் நுட்பங்களைப் பாவிக்கின்றன. ஒன்று Electro-optical Sensor மற்றது Infrared sensor. சீனாவின் J-20 போர் விமானங்கள் இரண்டு தொழில் நுட்பத்தையும் பாவிக்கின்றன. ராடார்களுக்கு தென்படாத stealth fighter விமானங்கள் வைத்திருக்கும் மூன்றாவது நாடாக சீனா 2010இல் இணைந்து கொண்டது. ஆப்கானிஸ்த்தானில் சுட்டு வீழ்த்தப்பட்ட ஒரு அமெரிக்க stealth fighter விமானத்தை சீனா விலைக்கு வாங்கி stealth தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் சீனா அமெரிக்காவின் ரடார்களுக்குத் தென்படாத ஸ்ரெல்த் தொழில்நுட்பத்தை அமெரிக்காவில் இணையவெளிகளில் ஊடுருவி திருடிப் பெற்றுக் கொண்டதாக இரசிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் F-35 விமானங்களின் இரகசியங்கள்தான் சீனாவின் J-20 விமானமாக உருவாக்கப்பட்டது எனப்படுகின்றது. இக் குற்றச் சாட்டை சீனா வன்மையாக மறுக்கின்றது. சீனாவின் J-20 விமானங்களுக்கான எஞ்சின்கள் இரசியாவிடமிருந்தே வாங்கப்பட்டன. இது சீனா இன்னும் விமான உருவாக்கற் துறையில் பின் தங்கியே இருக்கின்றது எனக் காட்டுகின்றது என அமெரிக்கப் படைத்துறை நிபுணர்கள் கருத்து வெளியிட்டனர். சீனாவின் J-20 விமானங்களுக்கான எஞ்சின் சோவியத் ஒன்றியம் இருந்த காலத்தில் உருவாக்கப் பட்ட மிக்-29 போர் விமானங்களின் எஞ்சின்களே. இவை விமானப் படைத்துறையில் நாய்ச் சண்டை என விபரிக்கப்படும் குறுதிய தூரத்தில் இருந்து கொண்டு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று போர் புரியும் பணிகளுக்கு உகந்தவை அல்ல. பின்னர் சீனா இரசியாவின் SU-35 என்னும் ஐந்தாம் தலைமுறை போர் விமானங்கள் இருபத்தி நான்கை வாங்கும் ஒப்பந்தத்தை 2015-ம் ஆண்டு ஜூன் மாதம் கைச்சாத்திட்டது. இது சீன விமானப் படைக்கும் அமெரிக்க விமானப் படைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்தது. ஆனால் சீனா விமான உருவாக்கற் தொழில் நுட்பத்தை அதிலும் எஞ்சின்கள் உருவாக்கும் வல்லமையை எப்படியாவது வளர்த்திட வேண்டும் என்பதில் மிகவும் கரிசனை கொண்டுள்ளது.

### ◆ துல்லிய வழிகாட்டி படைக்கலன்கள்
### Precision-Guided Munitions (PGM)

ஐக்கிய அமெரிக்கா சிறந்த துல்லிய வழிகாட்டி ஏவுகணைகளை உருவாக்கியுள்ளது. ஆப்கானிஸ்த்தானிலும் ஈராக்கிலும் அவை பெருமளவில் பயன் படுத்தப்பட்டன. வானில் இருந்தும் தரையில் இருந்தும் கடற்கலன்களில் இருந்தும் வேறு வேறுவகையான துல்லிய வழிகாட்டி ஏவுகணைகள் அமெரிக்காவால் பயன்படுத்தப் பட்டன. இவ் ஏவுகணைகள் போரை இலகுவாக்கின. அமெரிக்கப் படைகளின் இழப்பைக் குறைத்தன. கணனியில் விளையாடுவது போல் இந்த ஏவுகணைகளை இயக்கலாம். ஈராக்கியப் படையினருக்கு இவை பலத்த இழப்புக்களை ஏற்படுத்தின. ஆனால் ஈராக்கியப் படைகளை முற்றாக ஒழித்துக் கட்டவுமில்லை அவர்களின் போராட்ட மனப்பாங்கை சிதைக்கவுமில்லை.

விமானத் தொழில்நுட்பத்தின் ஒரு முக்கியமான அம்சம் ஒரு விமானம் எவ்வளவு தொலைவில் வைத்து எதிரி விமானங்களை இனம் காணும் என்பதாகும். எதிரி விமானம் தன்னை இனம் காணமுன்னர் எதிரிவிமானத்தை இனம் கண்டு கொண்டால் எதிரியை முந்திக் கொண்டே அதை நோக்கித் தாக்குதலைத் தொடுக்கலாம். அமெரிக்காவிடம் இந்த துரித இனம்காணும் தொழில்நுட்பம் இரசியாவிலும் பார்க்கவும் சீனாவிலும் பார்க்கவும் சிறந்தவையாக இருக்கின்றது. இரசியாவின் SU-35 விமானங்கள் அமெரிக்காவின் F-35 விமானங்களை இனம் காணுவதற்கு நூறு மைல்களுக்கு முன்னதாகவே F-35 விமானங்கள் அவற்றை இனம் கண்டுவிடும்.

### ◆ அடுத்த தலைமுறைக்கான திட்டம்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அல்லது கிழக்கு ஐரோப்பாவில் அமெரிக்க விமானங்கள் எண்ணிக்கை அடைப்படையில் அதிக விமானங்களைக் கொண்ட எதிரியைச் சமாளிக்க வேண்டும். அதற்கு எதிரியிலும் பார்க்க மிக மேன்மையான தொழில்நுட்பத்தைக் கொண்ட விமானங்கள் அமெரிக்கப் படையினருக்கு அவசியம் என்பதை அமெரிக்காவின் பாராளமன்றமும் உணர்ந்துள்ளது. தனது விமானப் படையின் மேலாதிக்கத்தை தொடர்ந்து பேண அமெரிக்கா The Next-Generation Air Dominance program என்னும் திட்டத்தை வரைந்துள்ளது. பல உட்பிரிவுகளை இத் திட்டம் கொண்டுள்ளது. 2030-ம் ஆண்டு வரை அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்தும் வகையில் இத்திட்டம் வரையப்பட்டுள்ளது. 2017-ம் ஆண்டு முதல் 2020-ம் ஆண்டு வரை அமெரிக்கப் பாதுகாப்புத் துறை மொத்த செலவீனத்தில் 25 விழுக்காடு வெட்டு தேவை என அறிவுறுத்தியுள்ளது. இருந்தும் அமெரிக்கப் பாராளமன்றத்தின் மக்களவை அமெரிக்க விமானப்படைக்கு புதிய தொலைதூரத் தாக்குதல் விமானங்களை உருவாக்குவதற்கான செலவீனங்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளது. அமெரிக்கப் போர் விமானங்களில் தற்போது Lockheed Martin நிறுவனம் தயாரித்த F-22 Raptor போர் விமானங்களே தற்போது ஓரளவுக்கு சீனா மற்றும் இரசியப் போர் விமானங்களுடன் நின்று பிடிக்கக் கூடியவை. அமெரிக்காவின் வான் படையினர் 2030-ம் ஆண்டு தாம் உலக வான் பரப்பில் ஆதிக்கம் முழுமையாகச் செலுத்தக் கூடிய திட்டத்தை வரைந்துள்ளனர். இத் திட்டத்தின் முக்கிய அம்சமாக ஆறாம் தலைமுறைப் போர் விமானங்கள் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. அமெரிக்கா தனது ஆறாவது தலைமுறைப் போர் விமானங்களை 2025-ம் ஆண்டிற்கும் 2030-ம் ஆண்டிற்கும் இடையில் உருவாக்க விருக்கின்றது. ஆறாவது தலைமுறை விமானங்களில் microwaves, lasers ஆகியவற்றின் மூலமாக எதிர்க்கவரும் விமானங்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடியவையாக இருக்கும். அண்மையில் வரும் எதிரி விமானங்கள் ஏவுகணைகள் கருக்கி விழுத்தப் படும் இவை ஹைப்பர் சோனிக் விமானங்களாக இருக்கும். ஒலியிலும் பார்க்க ஐந்து மடங்கு வேகத்தில் பறக்கக் கூடியவையாக இருக்கும். ஆறாவது தலைமுறைப் போர் விமானங்களில் microelectronics technologies பாவிக்கப்படும். ஆளில்லாப் போர் விமானங்களின் தொழில்நுட்பம் வேகமாக வளரும் சூழ்நிலையில் ஆறாவது தலைமுறைப் போர்விமானங்கள் விமானிகள் இன்றி தொலைவில் இருந்து இயக்கக் கூடியவையாக அல்லது ரோபோக்கள் மூலம் இயக்கக் கூடியவையாக அமையலாம். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி சிறந்த கட்டளையும் கட்டுப்பாடும் முறைமை command and control முறைமை மிக உன்னதமானதாக இருக்கும். பாதுகாப்புச் செலவீனங்களைக் குறைக்கும் முகமாக அமெரிக்காவின் கடற்படையும் விமானப் படையும் இணைந்து ஆறாம் தலைமுறைப்போர்விமா ஆறாம் தலைமுறைப்போர் விமானங்களை உருவாக்கவிருக்கின்றன.

*கருத்துக்களுக்கு -*
facebook.com/orupaper @orupaper

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா


# ஊடகப் போராளி மாணிக்கம் அவர்களின் நினைவுகள்...



தேசியத் தலைவரின் நம்பிக்கைக்குரியவராக விருந்த மூத்த ஊடகப் போராளியான யு.ஏ.மாணிக்கம் (74), இந்தியாவில் காலமானார், போராட்டம் இறுக்கமடைந்த காலம் எல்லாம் ஊடகத்திற்கே கட்டுப்பாடு அதிகரிக்கப்பட்ட நாட்களில் எல்லாம் தனது எழுத்தாற்றலால் மக்களின் போராட்ட எழுச்சியையும் வாஞ்சையையும் அதிகரித்த பெருமைக்குரியவர் என்றால் மிகையாகாது.

இவர் ஈழநாடு பத்திரிகையின் பிரதான ஆசிரியராகவும், செய்தியாளராகவும் மிக நீண்டகாலமாக சேவையாற்றி நாட்டுக்கும், தமிழ் இனத்துக்கும் மிக பெரும் தொண்டாற்றியவர் என்பது குறிப்பிடப்படத்தக்கது.

பேனா முனையில் ஈழத்தையும் புலம்பெயர் மக்களையும் ஒரே பாதையில் பயணிக்க வைப்பதில் முன்னோடியாக செயற்பட்ட இவர் வடமராட்சியில் பிறந்த யாழ் கட்டுவனில் வசித்து தற்போது இந்தியாவில் வாழ்ந்துவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் போராளிகள் பலர் மாணிக்கம் ஐயா என உரிமையுடன் அழைப்பார்கள். போராளிகளுடன் சரளமாக பழகும் தன்மையுடைய இவர் தன் இறுதி மூச்சு வரை தமிழீழத்தில் அதீத பற்றுடன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றும் இந்திய இராணுவம் தமிழீழ மண்ணை ஆக்கிரமித்த வேளை தலைமைக்கே இந்திய இராணுவத்தால் இறுக்கம் ஏற்பட்ட வேளையில் எல்லாம் ஊடகம் வாயிலாக போராட்டத்துக்கு மிகுந்த சேவையாற்றியவரும் எமது தலைமைக்கு நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்கு உரியவராகவும் செயற்பட்டு பல நெருக்கடியான கால கட்டங்களில் எல்லாம் தலைமைக்கு பாதுகாப்பாகவும், உறுதுணையாகவும் அருகில் இருந்து செயற்பட்டு வந்தவர் ஆவார்.

*- சுதன்*

## எமைவிட்டு.. பறந்துபோக உனக்கு எப்படி ஐயா மனம் வந்தது ?

பன்னிரு நாட்கள் நீ
உண்ணாமல் பருகாமல்..
உருகினாய் உன்னினத்துக்காக..
உன்னிரு விழிகளும் நிரந்தரமாய்
உறங்கியபோது ஈழமே
உனக்காக உருகியதே தம்பி திலீபா!

கண்ணே கலங்காத
தலைவனையே ஒருகணம்..
கண்ணீர் சிந்தவைத்த சக்திஞ்
காவியச் செல்வனே..
உனக்கு மட்டுதான் ஐயா
அன்று இருந்தது!

ஈழத்தை.. எரிக்க வந்த
இந்தியப் படைகளை
காடுகளில்
பற்றி எரிய வைத்தது..என்ன?
தலைவரின்..புலிகளின்..
வீரம் மட்டுமா..? அல்ல..உன்
தியாகமும்தான் ஐயா!

பாத்திருக்க..நாம் பக்கத்தில் இருந்து
பார்த்திருக்க..பார்த்திருக்க..
எமைவிட்டு..
பறந்துபோக உனக்கு எப்படி
ஐயா மனம் வந்தது ?

ஒரு சொட்டு நீர்கூட உனக்கு அந்த
இறுதி நேரத்தில் ஊட்டமுடியாமல்..
நின்ற பாவிகள் ஐயா நாம்..
எத்தனை பிறப்புகள்
பிறந்துவந்தாலும் அங்கே நாம் ..
அந்தக் கடனைத் தீர்ப்போம்
என்பது உறுதி ஐயா

- மு.வே.யோகேஸ்வரன்

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**SEP 27 SUNDAY**

*வீரவணக்க நிகழ்வு*

*தியாக தீபம் திலீபனின் 28வது ஆண்டு வீரவணக்க நிகழ்வு மற்றும் இம்மாதம் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் வீரவணக்க நினைவு நிகழ்வு.*

*இடம்:* Down Barn School, 69 Downs Boulevard
Milton Keynes, MK14 7NA

*தொடர்புகளுக்கு : தமிழர் ஒருங்கிணைப்புக் குழு*

**SEP 27 SUNDAY**

*Summer Sports Festival 2015*

*தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் இருபத்தி நான்காவது ஆண்டு விளையாட்டுப் போட்டிகளும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும்.*

*நேரம்:* காலை 9.00 மணி முதல் மாலை 7.00 வரை

*இடம்:* Rayners Park Sports Ground,
Taunton Avenue, London
SW20 0BH.

**NOV 27 FRIDAY**

*தேசிய மாவீரர் நாள் 2013*

*தமிழீழத் தேசிய மாவீரர் நாள்.*

*நேரம்:* காலை 11.00 மணி ( காலை 10.30க்கு மண்டபம் திறக்கப்பட்டு 11.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்)

*இடம்:* Wembley Arena, Arena Square,
Engineers Way, Wembley Park,
Wembley, HA9 0AA.

## இடமாற்ற அறிவித்தல் - இலண்டன் சுவாமி ஐயப்ப நிலையம்

இல 388 High Street North, Eastham E12 6RH என்ற முகவரியில் இயங்கிவந்த லண்டன் சுவாமி ஐயப்ப நிலையம் 453 high Street North, Manor Park, London E12 6TJ என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறோம்.

தொடர்புகளுக்கு - 0208 586 6761.


Uwps UNIQUE WEDDING PARTY SERVICES

திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் நிகழ்வுகள் மற்றும் அனைத்து தேவைகளுக்கும்

Inspire your guests by creating an event that's truly unique, Passion, Experience & Creativity, we have the perfect formula in UWPS where the occasion always exceeds your expectations



Wedding Decoration | Ballons Decoration | Stage Arrangement
Banqueting Hall Decoration | Videography & Photography
Catering | LCD Backdrop Hire | Fresh Flower Bouquet
Gifts | Party Planning | Chair Cover | Marquee
Table & Chair Hire | Table Cloth Hire | Centre Piece Arrangement

Tel: 0203 086 9915 Mob: 0795 083 3135 – 0787 201 5560
London, UK, Europe
www.uwps.co.uk | uwps@hotmail.co.uk



REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING
UK COOL AND SHOPFITTING Ltd.

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk



Summer Offer



New and Used Fridge for Sale
New Fridge 3.75 Meter
£3900 + VAT

UK COOL & SHOPFITTING
REFRIGERATION
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

SHOP FITTING
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

MOVING & DEVILERY

URGENT REPAIR? CALL:07951854057
1 YEAR PARTS & LABOUR WARRANTY
7 Days 24 HRS Services & Repair

# வன்னியில் ஒரு காலத்தில் தன்னிறைவு கொண்டு விளங்கிய மூன்று கிராமங்களின் கதை




**மகாலிங்கம் பத்மநாபன்**

*பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன். செருக்கன் கிராமங்களின் பொற்காலமும் நீலனாறு, கொல்லனாறுகளால் சூழப்பட்டு பொறிக் கடவை அம்பாளின் அனுக்கிரகத்தால் வாழ்ந்த மக்களின் வரலாறும்.*

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன், செருக்கன் கிராமங்களுக்கும் மீசாலை, சாவகச்சேரி, கச்சாய் என்னும் தென்மராட்சி ஊர்களுக்குமிடையேயான உறவு வரலாற்று ரீதியிலானதாகும். இவர்களின் உறவு பல விதங்களில் பின்னிப் பிணைந்தது ஆகும்.

### கொண்டான் கொடுப்பான் உறவு

இரு பிரிவினரும் ஒருவருக்கொருவர் திருமணத்திற்காக பெண்களைக் கொடுத்தனர். பெண்களை எடுத்தனர். எவ்வாறு நல்லூர் திருவிழா யாழ்ப்பாணத்தில் பல நூறு திருமணங்களுக்கு காலாயமைந்ததோ, அது போல பங்குனி வேள்வியும் இங்கு ஆணையும், பெண்ணையும் சேர்த்து வைத்தது. பொறிக்கடவை அம்மனுக்கு நேர்த்திக்கடன் செய்து பால்ச் செம்பு எடுக்கவந்த நங்கையர் மூன்று கிராமத்து இளைஞர்களின் கண்களில் பட்டனர். காவடி எடுக்க வந்த இளைஞர்களின் தோற்றமும் ஆட்டமும் இங்குள்ள கன்னியர்களைக் கவர்ந்தது.

### திருமணம்

திருமணம் என்றால் பெண்வீடு, மாப்பிள்ளை வீட்டில் ஒருமாதமளவில் ஒரே அமர்க்களம்தான். நாள் பார்த்து பந்தல்கால் நடுதல், உறவுப்பெண்கள் எல்லாம் கூடி நெல்குற்றல், மா இடித்தல், பலகாரம் சுடல், அலங்கரித்தல் என்று ஊரே தடல்புடல் படும். கிடாரம் கிடாரமாக நெல் அவித்துக் காயப்பண்ணி குத்தி அரிசியாக்கப்படும். கிராமத்தில் ஏனைய வீடுகளில் உலை வைக்க மாட்டார்கள். எல்லோருக்கும் திருமணவீட்டில் தான் சாப்பாடு. தமது ஆடு, மாடு, கோழியை ஒழுங்குபடுத்திவிட்டு திருமண வீட்டிற்கு வந்தால், பின் இரவுக் கடமைகளுக்குத்தான் வீடு திரும்புவர்.

மூன்று கிராமத்துப் பெண் அல்லது ஆணாகவும், மாப்பிள்ளை அல்லது பெண் தென்மராட்சியுமாயின் திருமணம் இன்னும் கோலாகலமாக நடைபெறும். மூன்று கிராமத்திலிருந்து பத்துப் பன்னிரண்டு மாட்டு வண்டில்களில் சுட்ட தீவு வரைக்கும் சென்று அங்கிருந்து பத்துப் பன்னிரண்டு வள்ளங்களில் கச்சாய் துறை முகம் செல்வர். அங்கு இவர்களை ஏற்ற வண்டில்கள் காத்திருக்கும். வண்டில்களுக்கிடையேயும் வள்ளங்களுக்கிடையேயும் ஓட்டப் போட்டிகள் நடைபெறும். மூன்று நாட்கள் திருமணக் கொண்டாட்டத்தின் பின் திரும்ப வரும் பயணமும் அவ்வாறே நடைபெறும். பலகாரப் பெட்டிகள் முடித்து, பழைய சோறு குழைத்த உருண்டைகள் சாப்பிட்டு, பாத்திரங்கள் கழுவி முடிக்கும் வரை சிறுவர்கள் தமது வீட்டை நினைத்துப் பார்க்கமாட்டார்கள்.

### பண்டமாற்று

கறுத்தக் கொழும்பான் மாம்பழம், பலாப் பழம், முருங்கங்காய் கட்டு இவை மீசாலை, சாவகச்சேரி மண்ணில் விளையும்போது அவற்றின் சுவையே தனிதான். கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தை இப்போ நினைத்தாலும் வாயெல்லாம் இனிக்கும். மூன்று கிராமத்தில் பனைவளம் இருந்தாலும் கருப்பணி இறக்குதலும், பனங்கட்டி காய்ச்சுதலும் இல்லை. நேரமும் இல்லை. மீசாலைக்காரரின் கைவண்ணமும் இல்லை. எனவே மீசாலை உறவினர்கள் எப்போது வருவர். மாம்பழம், பலாப்பழம் ஒரு கைப்பார்க்கலாம் என்றும் பனங்கட்டியைச் சுவைக்கலாம் என்றும் மூன்று கிராமத்துச் சிறுவர் காத்திருப்பர்.

### நெல் இனங்கள்

மொட்டைக் கறுப்பன் அரிசி, நெய், தேன், இறைச்சி வத்தல் வன்னிக்குப் பெருமை சேர்ப்பன. வன்னியிலிருந்து உறவினர் எப்போ வருவர் மொட்டைக் கறுப்பன் அரிசிச் சோறும் வத்தல் கறியும் எப்போ சாப்பிடலாம் என்று மீசாலை உறவினர் காத்திருப்பர்.

மொட்டைக் கறுப்பன், சீனட்டி, பச்சைப் பெருமாள் என்று நெல் இனங்களின் பெயர் புதிய தலைமுறைக்குத் தெரியாது. மாட்டெரு மட்டும் போட்டு நோய் எதுவும் தொற்றாது இயற்கையாக வந்த நெல்லரிசியைச் சாப்பிட்டு மக்கள் நோயின்றி வாழ்ந்தனர். பசளை, களை கொல்லி, பூச்சி கொல்லிகளை மூன்று கிராம மக்கள் அறிந்திருக்கவில்லை.

எச் - 4, ஐ.ஆர் - 8, பி.ஜி - 11-11 என்று தொடங்கி ‘ஆட்டக்காரி’ என்ற பெயரிலும் நெல் இனங்கள் வந்துவிட்டன. இரசாயனங்கள் பயன்படுத்தியதால் நோய்களும் புதிது புதிதாய் சேர்ந்து வந்தன.

### மேய்ச்சலுக்கு மாடனுப்புதல்

மீசாலை, சாவகச்சேரியில் மாடுகளுக்குப் போதிய உணவு இருக்காது. வன்னியில் புல்லும் வைக்கோலும் நிறைந்து காணப்படும். சுட்ட தீவுக் கடற் கரையிலிருந்து மூன்று கிராமம் வரையான பொட்டல் காடும் சிறந்த மேய்ச்சல் தறைதான். எனவே தென்மராட்சி மாடுகளை மேய்ச்சலுக்காக மூன்று கிராமத்து உறவினர்களிடம் அனுப்பி வைப்பர். சிலர் இரண்டு, மூன்று பேர் இணைந்து மாடுகளை கொடிகாமம், பளை, ஆனையிறவு ஊடாக சாய்த்துக் கொண்டு வருவர். முதல் நாள் இரவு கரந்தாய்க் குளத்தில் தங்கி, தமது கட்டுச்சோறுகளைச் சாப்பிட்டு மாடுகளைக் காலாற விடுவர். இரண்டாம் நாள் பெரிய பரந்தனை அடைவர். இன்னும் சிலரோ கன்றுகளை வள்ளங்களில் ஏற்றி மாடுகளை வள்ளங்களில் கட்டி இழுத்து வருவர். மாடுகளும் முதலில் கடலில் இறங்கப் பயந்தாலும் பின் தலையை மட்டும் நீரின் மேல் வைத்துக் கொண்டு அழகாக நீந்தி வந்து சேரும்.

வரும்போது வற்றி வத்தலாக இருக்கும் மாடுகள் திரும்பப் போகும்போது புசுபுசுவென்று கொழுத்து, மினுமினுத்துச் செல்லும்.

சிலர் வருடக்கணக்கிலும் மாடுகளை வன்னியில் விட்டு வைப்பர். கன்றுகள் பிறந்து குறிசுடும் காலத்தில் அரைவாசிக் கன்றுக்கு உரிமையாளரின் குறியும் மிகுதி அரைவாசிக்கு பார்வையாளரின் குறியும் சுடப்படும்.

பால் தேவைக்காக இடைக்கிடை இரண்டு, மூன்று பசுக்களையும் புசுபுசுவென்று தென்மராட்சி கொண்டு செல்லும் உரிமையாளர் தம்மிடம் வாடி வதங்கிய பசுக்களையும் கன்றுகளையும் மீண்டும் வன்னிக்கு அனுப்புவர்.

வன்னி மக்கள் பசுக்களிலிருந்து சிறிது பாலை மட்டும் கறந்து விட்டு மிகுதியைக் கன்றுக்கு விட்டு விடுவர். கன்றுகள் வாயால் நுரை தழும்ப வயிறு நிறையப் பால் பருகி விட்டுத் துள்ளி ஓடும் அழகை நாள் முழுக்கப் பார்த்து இரசிக்கலாம். கன்றுகள் நிறைந்த பால், நிறைந்த புல் என்பவற்றால் விரைந்து வளர்ச்சியுற்றன.

வயலில் பட்டியடைப்பதனால் வன்னி மண் வளம்நிறைந்ததாய் ஆயிற்று.

### பண்டமாற்று முறை

ஆதியில் மக்கள் எல்லோரும் பண்டமாற்று முறையில் வியாபாரம் செய்த போதிலும் ‘ராக்டர்’ என்ற உழவு இயந்திரம் வன்னிக் கலாச்சாரத்தை அழிக்கும் வரை மூன்று கிராம மக்கள் எதற்கும் கூலியாகவும், விலையாகவும் நெல்லையே அளந்து வழங்கினர்.

உடைகளை வெளுத்து உதவிய கட்டாடி மார்களுக்கும், சிகையலங்காரம் செய்த நிபுணர்களுக்கும், மீன் பிடித்துக் கொண்டு வந்து கொடுத்தவருக்கும், வயல் வேலை செய்தவர்களுக்கும் அவர்களின் சேவைக்காக நெல் அளந்து கொடுக்கப்பட்டது. உடுப்பு, துணிமணி மூட்டையாகக் கட்டித் தலையில் சுமந்து வீடு வீடாக வந்த இஸ்லாமிய வர்த்தகர்களுக்கும் நெல்லே விலையாக வழங்கப்பட்டது. தமது பனைகளில் கள்ளுச் சீவி உதவியர்களுக்கும் நெல் மணிகளே ஊதியமாக வழங்கப்பட்டது. இதனால் மூன்று கிராமத்தவர் என்றும் கஷ்டப்பட்டதில்லை. வயலும், மாடுகளுமே சீதனமாக வழங்கப்பட்டன. ஆண்கள் மஞ்சள் கயிற்றில் கோர்த்த தாலிகளையே திருமணத்தின் போது மணமகளுக்கு அணிவித்தனர். பெண்கள் அதிக அளவு தங்கநைக அணியும் வழக்கமும் அன்று இல்லை. எனவே மக்கள் மிகவும் உற்சாகமாகவும், மகிழ்ச்சியோடும் தன்னிறைவோடும் வாழ்ந்தனர்.

### கெங்கம்மா

விசக்கடிக்கு விசக்கடி வைத்தியரும், நோய்களுக்கு மூலிகை வைத்தியரும் எல்லாவற்றிற்கும் கலையாடி திருநீறு போடப் பூசாரிகளும் இருந்தமையால் வைத்தியசாலையின் தேவை பெரிதாக உணரப்படவில்லை. ஆனால் மகப்பேற்றின் போது சேயோ, தாயோ அல்லது தாய் சேய் இருவரும் தவறிவிடும் சந்தர்ப்பங்கள் சில இருந்தன.

அதனால் ஏழாம் மாதமே கர்ப்பிணிப் பெண்களை மீசாலையில் உறவினர் வீட்டில் விட்டு விடுவர். வயிற்றுக் குற்று ஏற்பட்டதும் இணுவில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவார்கள். இணுவில் ஆஸ்பத்திரியில் இருந்த பெண் மகப்பேற்று வைத்தியரான திருமதி கெங்கம்மா மிகவும் இராசியானவர் என்று மூன்று கிராமமக்கள் கருதினார்கள். அவர் வன்னி மக்களின் அறியாமையைக் கண்டு அவர்கள் மீது மிகவும் அனுதாபத்தோடு நடந்து கொள்வார். எனவே வன்னி மக்கள் ஏதோ நெருங்கிய உறவினரைப் பற்றிக் கதைப்பது போல அவரது மெலிந்த தோற்றம், சக ஊழியர்களிடம் கறாராக நடந்து கொள்ளல், தமது பிள்ளைகளைக் காப்பாற்றியமை தொடர்பில் அவரைப் பற்றிக் கதைப்பார்கள்.

### கூரை தட்டுதல்

வயிற்றுக் குற்று ஏற்பட்டு வைத்தியசாலை செல்லுமுன் அவசரமாக வீட்டிலேயே குழந்தைகள் பிறந்து விடுவதுண்டு. அவ்வாறு வீட்டிலே ஆண்பிள்ளை பிறந்தால் உடனே உலக்கையால் வீட்டின் கூரையில் மூன்று முறை தட்டுவார்கள். கூரை தட்டினால் ஆண்பிள்ளை துணிந்தவனாகவும் வீரனாகவும் வருவான் என்பது வன்னி மக்களின் நம்பிக்கை. அதனால் வீட்டில் பிறந்து, கூரை தட்டப்பட்டவனான என்னை இணுவிலில் பிறந்த எனது சகோதரனை விட வீரனாகவும் துணிந்தவனாகவும் எனது உறவினர் கருதினர். ஆனால் உண்மை அதுவல்ல என்று எனக்கு மட்டும்தான் தெரியும்.

*தொடரும்..*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



**seven | zero**
graphic designers
**020 7043 4310**
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from **concept to design**

# எனது அவுஸ்திரேலியப் பயணம் - 02

பாகம் 178

சென்ற முறை அவுஸ்திரேலியப் பயணத்தின் பாதியை எழுதியிருந்தேன். இம்முறை மிகுதியையும் எழுதி அந்த விடயத்தை நிறைவு செய்து விடலாமென எண்ணுகிறேன். எங்களது பயணத்தில் மிக முக்கியமான விடயமாக இருந்தது பிறிஸ்பேனில் ஐவறி றொக் என்னுமிடத்தில் அமரு என்னும் நிலையத்தில் நடந்த ஐந்து நாள் தொடர் நிகழ்ச்சியாகும். பிறிஸ்பேன் அவுஸ்திரேலிய மாநிலங்களிலொன்றான குயீன்ஸ்லாந்தின் தலைநகரம். சிட்னி, கான்பரா, மெல்போன் போன்ற நகரங்களுள்ள பிரதேசங்களிலும் பார்க்க வளிமண்டலவெப்பநிலைசற்றுஉயர்வாகக் காணப்படும் குயீன்ஸலாந்துப் பிரதேசத்தில் பசுபிக் கரையோடு ஒட்டியதாக பிறிஸ்பேன் காணப்படுகின்றது. பூமத்திய ரேகையின் வடக்கே, வடவரைக் கோளத்திலுள்ள ஐக்கிய ராச்சியத்தில் இலையுதிர் காலம் நெருங்கும் சமயத்தில் பூமத்திய ரேகையின் தெற்கே, தென்னரைக் கோளத்திலுள்ள அவுஸ்திரேலியாவில வசந்த காலம் ஆரம்பிக்கிறது. பிறிஸ்பேனில் ஆவணி மாதத்தில் இரவில் பனியுடன் கூடிய குளிரும் பகலில் சூரியன் உதித்ததும் பனி மறைந்து மிதமானதும், இதமானதுமான வெயிலும் வந்து விடும். அந்தக் காலநிலையை மனதிலிருத்தி அமருவில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் திறந்த வெளியரங்கில் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சிட்னியிலிருந்து பிறிஸ்பேன் கிட்டத்தட்ட 1000 கிலோமீட்டர் தூரத்திலுள்ளது. அதற்கான முக்கிய கடலோரப் பாதை பசுபிக் சமுத்திரத்தின் அருகாகச் செல்வதால் அதைப் 'பசுபிக் ஹைவே' என்று அழைக்கிறார்கள். இதைவிட சற்று உட்பிரதேசங்கடாகச் செல்லும் பாதையுமுண்டு. அதனை 'நியூஇங்கிலண்ட் ஹைவே' என்கிறார்கள். உள்ளூர் விமான சேவையைப் பயன்படுத்திபிறிஸ்பேன்போவதாயின்ஒன்றரை மணித்தியாலங்களுள் சென்று விடலாம். ரயில், பஸ் சேவைகளும் உண்டு. உறவினர் தனது காரைத் தந்ததால் நானும் மனைவியும் காரிலேயே பயணமானோம். போகும்போது கொஞ்ச தூரம்பசுபிக்ஹைவேயியைப்பயன்படுத்திவிட்டு பின்னர் நவிஹேட்டர் (வழிகாட்டி மானி) எங்களை காட்டுவழியில் திருப்பி விட்டுவிட்டது. காரணம் வழிகாட்டி மானிக்கு உறவினர் கொடுத்த தரவுகள்தான். இருந்தாலும் போகப் போக நாங்கள் சென்று சேர வேண்டிய இடத்துக்கான தூரம் குறுகிக் கொண்டே வந்ததால் துணிவாகப் பயணத்தைத் தொடர்ந்தோம். மிகத்தூரமான பிரயாணமாதலால் இடைவழியில் இருட்டிவிட்டது. காட்டு வழியில் மலை ஏற்றங்களிலும் இறக்கங்களிலும் வாகனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தேன். வாகனம் கியர் போடத் தேவையில்லாத கிளச்சுமில்லாத ஓட்டோமாற்றிக் ஹ்யரைக் கொண்டிருந்ததால் ஏற்றங்களிலும் இறக்கங்களிலும் தன் கடமையைத் தானே செய்து எங்களைக் கூட்டிச் சென்றது.

அவுஸ்திரேலியாவில் பெரும்பாலான வாகனங்களை கிளச் இல்லாத ஓட்டோமாற்றிக் கியர் முறைமையிலேயே வைத்திருக்கிறார்கள். நான் காண ஒரேயொரு கார் மட்டுமே மனுவல் எனப்படும், கையால் கியர் போட்டு ஓடும் வாகனமாக இருந்தது. தற்போது இங்கிலாந்திலும் கொஞ்சம் கொஞ்சமாக ஓட்டோமாற்றிக் வாகனங்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய வாகனங்கள் தூரப் பயணங்களுக்கு கை கால் அலுப்பை அதிகம் தராதவையாக இருப்பதால் தொடர்ந்து வெகு தூரம் ஓட்டிச் செல்ல முடிகின்றது.

நான் ஓட்டிச்சென்ற வாகனம் எவ்வளவுதான் ஓட்ட இலகுவானதாக இருந்தாலும் நாங்கள் சிட்னியிலிருந்து புறப்பட்ட நேரம் பிந்தி விட்டதால் நன்றாக இருட்டி விட்டது. பாதையும் பழக்கமில்லாத தெருவிளக்குகள் காணப்படாத மலைப்பாதையாக இருந்ததால் பிரயாணத்தைத் தொடர்வது உசிதமானதாக இருக்கவில்லை. காட்டுப் பிரதேசங்களில் இடையிடையே கங்காரு, போன்ற விலங்குகள் குறுக்கிடக் கூடுமென்ற அபாய அறிவித்தற் பலகைகளும், இடையிடையே வாகனங்களால் மோதுண்டு இறந்து கிடக்கும் விலங்குகளும் தென்பட்டதால் சற்று அவதானமாக வாகனத்தைச் செலுத்தியபடி எங்காவது தங்க இடம் கிடைக்குமாவென்று அவதானித்தவாறு பிரயாணத்தைத் தொடர்ந்தோம். போன பாதையில் கிராமங்கள் மிகுந்த இடைவெளியிலேயே காணப்பட்டன. காரில் பெற்றோலும் தீரும் நிலைக்கு வந்துவிட்டது. ஒருவாறு வழிகாட்டி மானியின் உதவியுடன் பெற்றோல் நிரப்பும் இடமொன்றை உட்பிரதேசமொன்றில் கண்டுபிடித்துஎரிபொருளைநிரப்பிக்கொண்டுஅந்தப் பகுதியிலுள்ள விடுதியொன்றில் இரவுப் பொழுதைக் கழித்து விட்டு அடுத்த நாள் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். விடியற்காலையில் எழுந்து நியூ இங்கிலண்ட் ஹைவேயில் பிரயாணத்தைத் தொடர்வது இலகுவாக இருந்தது. அதிக வாகனங்கள் அந்த நேரத்தில் காணப்படவில்லை.

சிட்னியிலிருந்து புறப்பட்டு பிறிஸ்பேன் செல்கையில் சிட்னியைத் தலைப்பட்டினமாகக் கொண்ட நியூசவுத் வேல்ஸ்பிரதேசத்தைக் கடக்கவே அதிக தூரம் பிரயாணம் செய்யவேண்டும். அடுத்தநாட் காலையிற்தான் எங்களால் நியூ சவுத்வேல்ஸ் எல்லையைத் தாண்ட முடிந்தது.

இந்த இரு நகரங்களுக்குமிடையில் அனேகமாகக் காடுகளும் வெகு தூரத்திற்கப்பால் சிறு சிறு கிராமங்களுமே தென்பட்டன.

நாங்கள் ஒன்றுகூடலுக்காகச் சென்ற 'அமரு' என்று கூறப்படும் நிலையமுள்ள 'ஐவறி றொக்' மிகவும் இயற்கை வனப்பு வாயந்த மலைப்பிரதேசமாகும். கங்காருகள், வலபிகள், கோலாக் கரடிகள் போன்ற மிருகங்களும் வேண்டியளவு நச்சுப் பாம்புகளும், காலையில் தூங்குபவர்களைக் கூக்குரலிட்டு எழுப்ப கொக்கட்டு போன்ற கிளிவகைப் பறவைகளும் குருவிகளும் நிறைந்து காணப்படும் அந்த இடத்தில் நாலாயிரம் பேர் கூடினோம். சிலபேர் பிறிஸ்பேனிலுள்ள ஹோட்டல்களில் தங்கியபடி பகலில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்யப்பட்ட பஸ்களிலும் வண்டிகளிலும் வந்து சென்றனர். அவர்கள் நீங்கலாகக் கிட்டத்தட்ட 3500 பேரும் அமருவிலேயே அந்த இயற்கைச் சூழலில் எங்கள் கூடாரங்களில் தங்கினோம். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அனேக கூடாரங்களை அடித்து அவற்றை வாடகைக்குக் கொடுத்திருந்தனர். எங்களைப் போன்ற பலர் தங்கள் கூடாரங்களைத் தாங்களே கொண்டுவந்து தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அடித்து அதில் தங்கினோம். குடிநீர், குளியல், கழிப்பிட வசதிகளை 'ஐவறி றொக் பவுண்டேஷன்' எனப்படும் நிறுவனத்தினர் மிகவும் நேர்த்தியாக வைத்திருந்ததால் ஆறுநாட் கூடார வாசம் காலக் குளிரைத் தவிர மகிழ்வையே தந்தது. உணவு வகைகளை வாங்கக்கூடியதாகக் கண்டீன் வசதிகளையும் செய்து வைத்திருந்தனர். பொதுவாகமனிதநடமாட்டம்அதிகமில்லாத அந்த வனப்பிரதேசத்தில் பாதைகளில் இரவில் நடந்து செல்லத்தக்கதாகத் தெரு விளக்குகளையும் போட்டு வைத்திருந்தனர். இவையெல்லாம் அந்தப் பிரதேசத்தின் வழமையான இயற்கைத் தன்மையை மாற்றிவிட்டது. பல்வேறு வனவிலங்குகளும் சுதந்திரமாக நடமாடும் அந்தப் பிரதேசத்தில் நாங்களே ஊடுருவல் காரர்கள். அதனால் பெரும்பாலான விலங்குகள் நாங்கள் கூடாரமடித்த இடங்களிலிருந்து விலகி காட்டுக்குள் சென்றுவிட்டன. பறவைகள் மட்டும் மரத்துக்கு மரம் கிளைக்குக் கிளை தாவி சுதந்திரமாகப் பாடியபடி பறந்து திரிந்தன.

## அலசுவாரம்

அலசுபவர் : மட்டைக்கிளப்பான்

பிறிஸ்பேனில் எமது இலங்கை உறவுகள் நிறையவுள்ளனர். நாங்கள் தங்களது இடத்திற்கு அருகில் வந்திருப்பதையறிந்து எங்களைக் காணவந்து அறிமுகமாகினர். இலங்கையின் கிழக்குப் பகுதியிலிருந்து படகுகளில் புறப்பட்டு இந்து சமுத்திரத்தைக் கடந்து கிறிஸ்மஸ் தீவுக்கு வந்து அங்கு அவுஸ்திரேலிய அகதிகளாகத் தஞ்சமடைந்த பலர் பிறிஸ்பேனுக்கு வந்து வாழ்கிறார்கள். இலங்கையின் கிழக்குப் பிரதேசத்திலிருந்து 15 பேர் மட்டுமே பயணம் செய்யக் கூடிய படகுகளில் ஐம்பது பேருக்கு மேல் ஏற்றப்பட்டதாகவும், தொடர்ந்து இருபது நாட்கள் ஊணுறக்கமின்றிக் கடலில் பிரயாணம் செய்து அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவையடைந்ததாகவும், அங்கிருந்து தாங்கள் தெரிவு செய்ததன் பிரகாரம் அவுஸ்திரேலிய அரசாங்கம் குயின்ஸ்லாந்தில் பிறிஸ்பேன் பகுதியில் தங்களை வசிக்க அனுமதித்துள்ளதாகவும் கூறினார்கள்.

தங்களைப் போல பிரயாணம் செய்த பல படகுகள் காணாமற் போய்விட்டதாகக் கூறிய போது அமைதியையும், பாதுகாப்பையும் தேடிக் கடல்களில் அலைந்து இறுதியில் தங்கள் உயிரையே தொலைத்துவிட்ட உறவுகளையெண்ண மிகவும் வேதனையாகவிருந்தது. அண்ணன் வெளிநாடு போகிறான், அப்பா வெளிநாடு போகிறார், தம்பி போகிறான், கணவர் போகிறார் சீக்கிரம் நம்மையும் அழைத்து விடுவார்கள் என்றெல்லாம் குதூகலத்தோடு எண்ணியிருந்த எத்தனை உள்ளங்கள் தங்கள் உறவுகளைப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கின்றனவோ தெரியவில்லை.

எங்களை வந்து சந்தித்த இளைஞர்கள் கூடாரங்களில் நாங்கள் சமைக்க முடியாது என்பதால் சோறுகறி சமைத்துப் பார்சல்களில் கட்டிவந்து தந்ததை மறக்க முடியாது. அந்த நேரத்தில் அவர்கள் கொண்டு வந்து தந்த உணவுகள் அமிர்தமாக இனித்தன. எங்கள் நிகழ்வுகள் முடிந்ததும் நாங்கள் வெளிக்கிட ஆயத்தமானபோது அமருவுக்கு வந்திருந்த தங்கள் இருப்பிடத்திற்குக் கட்டாயம் வரவேண்டுமென்று வேண்டியதை மறுக்க முடியாது அவர்களிடத்திற்கும் சென்றோம்.

தற்போது அவர்கள் சந்தோசமாக வாழ்கிறார்கள். தங்கள் உறவுகளைப் பிரிந்திருப்பதுதான் கவலையாக இருப்பதாகச் சொன்னார்கள். உயிரைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தாலும் அதற்கான பலன் கிடைப்பதாகவும் வாழ்க்கை வீணாகிவிடவில்லையென்றும் கூறினார்கள். நிரந்தர விஸாதான் தற்போது அவர்களுக்குள்ள ஒரே பிரச்சனை.

**பிறிஸ்பேனில் எமது இலங்கை உறவுகள் நிறையவுள்ளனர். நாங்கள் தங்களது இடத்திற்கு அருகில் வந்திருப்பதையறிந்து எங்களைக் காணவந்து அறிமுகமாகினர். இலங்கையின் கிழக்குப் பகுதியிலிருந்து படகுகளில் புறப்பட்டு இந்து சமுத்திரத்தைக் கடந்து கிறிஸ்மஸ் தீவுக்கு வந்து அங்கு அவுஸ்திரேலிய அகதிகளாகத் தஞ்சமடைந்த பலர் பிறிஸ்பேனுக்கு வந்து வாழ்கிறார்கள்.**

அவர்களில் சிலர் திருமணமான இளம் குடும்பஸ்தர்கள். தங்கள் மனைவி, குழந்தைகளை விட்டுப் பிரிந்து வாழ்ந்துகொண்டு எப்போது தங்கள் குடும்பங்களுடன் இணைவது என்ற ஏக்கத்திலிருக்கிறார்கள். அவுஸ்திரேலியக் குடியுரிமை பெற்றாலன்றி அவர்களின் கனவு நனவாகப் போவதில்லை. அதுவரை இலவுகாத்த கிளிகளாக வாழவேண்டியதுதான்.

இலங்கையுறவுகளைச் சந்தித்துவிட்டு பிறிஸ்பேனில் நெடுங்காலமாக வாழும் உறவினர்களையும் சந்தித்து அவர்களுடன் ஒரு இரவைக் கழித்து விட்டு, பசுபிக் ஹைவேயில் சிட்னி நோக்கி வரும் வழியிலுள்ள பிரபலமான கடற்கரைப் பிதேசமான ஹோல்டன் பீச்சிற்கும் சென்று அங்கும் சில மணி நேரங்களைக் கழித்துவிட்டு இரவோடிரவாக சிட்னியை வந்தடைந் தோம்.

வந்து மூன்று நாட்களில் யுகே வர விமான மேறினோம்.

தொடருவம்..

கருத்துக்களுக்கு -
www.facebook.com/orupaper
@orupaper

திருமண நிகழ்வுகள், பிறந்த நாள் விழாக்கள், வியாபாரக் கருத்தரங்குகள் என்பவற்றை மிகச் சிறப்பாக நடாத்திட தொடர்பு கொள்ளுங்கள்

- Capacity of 750 standing or 350 seated
- Licensed until 6am
- Licensed for Marriage
- Extensive Car Park






Birthdays , Corporate Private Hire, Weddings, Club Nights, Day Hire

Crystal
Crystal Club
1 Poppin Building Southway, Wembley, Middlesex, HA9 0HB
For More Details : 020 3576 5765
Facebook: /crystalclubs ✦ Twitter: @crystalclubs ✦ E-mail: info@crystalclubs.com

வெகுவிரைவில் தரணியெங்கும்...

தமிழ்

வணக்கம் தமிழ் | ஞாபகம் வருதே | விம்பம் | உப்பு புளி காரம் |
| வெள்ளித் திரை | ஒளித்தடம் | மயக்கும் மாலைப் பொழுது | அரும்புகள் |
| நான் நீ ! | மருத்துவம் | நாம் யார் ? | நடந்து வந்த பாதை |
| வேங்கைகள் | பாட்டுக்குப் பாட்டு | யாதும் ஊரே | உண்மையின் வெளிச்சம் |
| தரிசனம் | நிகழ்வுகள் | இன்றைய பார்வை |
மற்றும் பல சுவையான நிகழ்ச்சிகள்...

**மேலதிக விபரங்களுக்கு**

Tel : **020 7043 4316**

Web : www.tamil.com

Facebook.com/tamiltelevisionnetwork | @tamiltvnetwork

# பேரினவாதத்தின் பெருந்தூண்கள்



**ச.ச.முத்து**

எப்போதெல்லாம் சிங்களபேரினவாதம் சர்வதேச அரங்கில் முகங்கிழிந்து நிற்கிறதோ அப்போதெல்லாம் சிங்களத்துக்கு ஆதரவான, வருடும் குரல்கள் தமிழர்தரப்பில் இருந்து எழுவது கடந்தகாலங்களில் பலமுறை நடந்தது உண்டு. மிக அண்மைய உதாரணம் சுமந்திரன். இப்போதைய சுமந்திரன் போல தமிழர் வரலாற்றில் ஏராளம் சுமந்திரன்கள் இப்படி சிங்களத்தை பிணை எடுக்கும் கைங்காரியத்தை செய்து தமது சிறீலங்கஅரச விசுவாசத்தை வெளிக்காட்டியதை தமிழர்கள் நிறையே கண்டுள்ளார்கள்.

1997 ஒக்டோபரில் அப்போதைய சிறீலங்கா ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா அரசாங்கத்தின் நிதி நிலை தொடர்பான உயர்அதிகாரிகளின் மாநாட்டில் உரையாற்றும்போது 'விடுதலைப்புலிகள் பௌத்த மத நிறுவனங்கள் மேல் தாக்குதல் நடாத்தினால் ஜனாதிபதியான தானே தெருவில் இறங்கி தமிழர்களை தாக்குவேன் என்று கூறியிருந்ததார். அந்த நேரம் இந்த உரை பலத்த கண்டனங்களுக்கும் கோபத்துக்கும் உள்ளானது.

இதனை போன்ற நேரங்களில்தான் சிங்களத்தை காப்பதற்கென்றே ஆபத்பாந்தனாக சில தமிழ் தலைகள் புறப்படுவது வழமையானதுதானே. அந்த நேரத்தில் நீலன்திருச்செல்வம் தமிழர்விடுதலைக் கூட்டணியை சேர்ந்த ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரின் பெயரில் சந்திரிகாவுக்கு நற்சாட்சி பத்திரம் வழங்கிய கடிதம் ஒன்றை எழுதி அந்த நேரம் சந்திரிகாவை காப்பாற்றினார்.

சிங்களதேச அதிபருக்கு உள்ளே பதுங்கி உறங்கி கிடந்த சிங்களபேரினவாத சிங்கம் எழுந்து உறுமி இனவாதம் கக்கியதை மறைப்பதற்காக ஒரு தமிழ் மேதாவி(?) இன்னொரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரின் கையெழுத்தை பொய்யாக போட்டு கடிதம் தயாரிக்கும் அளவுக்கு சிங்களபேரினவாதத்தின் தாங்கு தூண்களாகவே நின்றிருந்தார்கள் நீலனும் அந்த பா.உ.ம்.

இதனைப் போன்றே இனப்படுகொலையாளியான ஜேஆரின் தமிழின அடக்குமுறைக்கு அங்கீகாரம் வழங்குவதுபோன்ற ஒரு செயலை 83ம்ஆண்டு மார்ச்மாதம் அப்போதைய எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் செய்தார். 83 மார்ச் மாதம் பனாகொடை ராணுவ முகாமில் சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழவிடுதலை இயக்க தலைவர் தங்கத்துரையை இப்போது கனடாவில் வசிக்கும் கரிகாலன் என்பவர் ஆலோசனை மற்றும் ஆதரவுடன் சந்தித்த அப்போதைய எதிர்க்கட்சித்தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் மறுநாள் தங்கத்துரை அவர்களின் பெயரில் ஒரு அறிக்கையை தமிழீழவிடுதலைக்கு எதிராக விடுத்ததும் இத்தகைய சிங்களத்துக்கு ஆதரவான ஒரு செயலாகவே இருந்தது.

இப்படி நிறைய உதாரணங்களை காலகாலத்துக்கு வந்த தமிழ்தலைவர்கள் என்று சொல்லப்பட்டோர் செய்ததை, செய்துவருவதை எழுத முடியும். இதனை இன்னொரு கட்டுரையில் பார்ப்போம் விரிவாக. இப்போது ஏ சுமந்திரனுக்கு வருவோம்.

இனப்படுகொலையை கடந்த அறுபது ஆண்டுகளாக ஒருவித குற்ற உணர்வுமின்றி (அது சிறீலங்காவில் தண்டனைக்கான குற்றம் அல்ல.. குற்றமே அல்ல) செயற்படுத்திவரும் சிங்கள பேரினவாதத்துக்கு பேரிடியாக இல்லாது விட்டாலும் ஒரு சிறு தலையில் குட்டாக வைக்கப்பட்ட சர்வதேச நீதிபதிகள் அடங்கிய விசாரணை என்ற மனிதஉரிமை ஆணையரின் அறிக்கைக்கு ஒரு உப இலவச இணைப்பாக சுமந்திரன் ' நமது பெயரால் மற்றவர்களுக்கு இழைத்த கொடுமைகளை' பற்றி நிறையவே சொல்லி இனஅழிப்பையும் விடுதலைக்கான போர் ஒன்றில் விடுதலைஅமைப்'பு செய்யும் செயற்பாட்டையும் ஒரே தராசில் வைத்து சிங்களத்தை ஆசுவாசப்படுத்தி இருக்கின்றார். மனித உரிமைகளை விடுதலைப்புலிகளும் மீறி இருக்கிறார்கள் என்று சம்பந்தன் ஒருமுறை பகிரங்கமாக பாராளுமன்றத்தில் கூறியதற்கு அச்சொட்டு பிசகாமல் இப்போ சுமந்திரன் ' நமது பெயரால் பிறருக்கு கொடுமைகள் செய்தவர்கள்' பற்றி சொல்லி இருக்கிறார். சிங்கள பேரினவாதம் செய்த இனப்படுகொலைக்கு நியாயம் கற்பிக்கும் ஒருவிதமான தந்திரமே இது.

சுமந்திரன் வக்காலத்து வாங்கும் அந்த 'பிறர்' முப்பதுஆண்டுகளாக எம்மை ஏறிமிதித்த போதும், தெருக்களில் நாயே, அடிமையே, கூலியே என்று இழிவுபடுத்திய போதும், எல்லாவற்றிலும் மேலாக கலவரம் என்ற பெயரில் எம் மக்களை கொன்று குவித்து சொத்துகளை அழித்து வெறியாட்டமாடிய போதும் இந்த இனம் அந்த பிறருக்கு ஏதும் கொடுமைகளை செய்தது இல்லை..

போராடுவதற்காக கையில் எடுத்த அனைத்து அமைதிவழிகளும் அடைக்கப்பட்ட பின்னர் வேறு வழியின்றித்தான் அந்த பிறரை ஆயுத ரீதியில் எதிர்த்து தற்காத்து போரிடும் நிலைக்கு தள்ளப்பட்டது..

எங்களின் தேசியத்தலைவனின் வரிகளில் சொல்வதானால் ' ஜேஆர் ஒரு உண்மையான பௌத்தனாக இருந்திருந்தால் நான் ஆயுதம் ஏந்த வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காது.. என்பதே.

தொடர்ச்சியாக கொடுமையான அடக்குமுறைக்கும் இனஅழிப்புக்கும் சித்திரவதைக்கும் உள்ளான ஒரு தேசியஇனம் இனி வேறு வழியில்லை என்று எழும்போது அது இயல்பாகவே ஆயுதப்போராட்டத்தைதழுவிக்கொள்ள வேண்டியதாக வரலாறு விதித்துவிடுகிறது. இதனையே தமிழீழவிடுதலைப்புலிகளின் போராட்ட வரலாறு (1975-1985) என்ற நூலில் 'சிங்கள இனவெறி அரவு கட்டவிழ்த்துவிட்ட காட்டுமிராண்டித்தனமான இனஅழிவு தழுவிய ஒடுக்கு முறையில் இருந்து தமிழ்மக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள ஆயுதம் ஏந்துவதை தவிர வேறு எந்த வழியும் இருந்திருக்கவில்லை. தமிழ்மண்ணில் தோற்றம் கொண்ட ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை வளர்ச்சியும் விரிவாக்கமும் அடைந்த தமிழரின் அரசியற் போராட்டமாகவே நாம் கருதவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளதை சுமந்திரன்கள் மீண்டும் படித்து பார்க்க வேண்டும்.

அரச ஒடுக்குமுறையையும் இனஅழிப்பையும் எதிர்க்கும் பாதுகாப்பு நடவடிக்கையாகவே ஆரம்பத்தில் தோற்றம் கொண்ட ஆயுத எதிர்ப்பு இயக்கம் சிங்களபேரினவாத ஒடுக்குமுறையும் இனஅழிப்புகளும் கூர்மை அடைந்து எமது மக்கள் அப்பாவிதமிழர்கள் கூட்டம் கூட்டமாக கொல்லப்பட்டபோது அதனை கட்டுப்படுத்துவதற்காக புரட்சிகர எதிர்த்தாக்குதல்களை நடாத்தியே தீரவேண்டிய ஒரு வரலாற்று அழுத்தத்தை சிங்களம் எம்மீது திணித்தது. அதன் வெளிப்பாடுகளாக ஏற்பட்ட அனைத்து அழிவுகளுக்கும் சிங்களபேரினவாதமும் அதற்கு முண்டுகொடுத்து நின்ற நிற்கும் சக்திகளும் தான் பொறுப்பேதவிர தமிழினமும் அதன் விடுதலைக்காக போராடிய அழைப்பும் அல்ல.

இதனை புரிந்துகொள்ள சுமந்திரன்கள் உலக விடுதலை வரலாறுகளையும் புரட்சி வரலாறுகளையும் கொஞ்சம் படித்துப்பார்க்க வேண்டும். இந்த யதார்த்தை உலக விடுதலை அமைப்புகள் அனைத்தினதும் சரித்திரங்களில் காணலாம்.

சிங்கள தூதரக அதிகாரிகளுடன் விருந்துண்ணும் நேரத்திலும், சிங்கள பேரினவாதத்தை இன்னும் என்ன என்ன முறையில் தாங்கிமுண்டுகொடுக்கலாம் என்று சிந்திக்கும் நேரத்திலும் ஒரு சில நிமிடங்களை ஒதுக்கி இவற்றை சுமந்திரன்கள் படித்துபார்க்கலாம்.

மறுக்கப்பட்ட நீதிக்காக முழு இனமும் எழுந்து கண்டங்கள் கடந்து போராடிவரும் இந் நிலையில் சுமந்திரன்கள் எதற்காக இப்படி " நமது பெயரால் பிறருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை" எழுதி சிங்களத்துக்கு வக்கலாத்து வாங்குகிறார்கள் என்பது ஒன்றும் பிரம்மரகசியம் அல்ல. சிங்களம் எறியும் அற்ப எழும்புகளுக்காகவும் அது போடும் சொகுசு வாகனங்கள் மற்றும் வசதிகளுக்காகவுமே ஆகும்.

**சுமந்திரன்கள் என்னதான் சுத்திவளைத்து எழுதி எம் விடுதலைப்போராட்டம் மீதும் அதன் அமைப்பு மீதும் காழ்ப்பும் வஞ்சமும் உமிழ்ந்தாலும் அதனை எதிர்க்கும் தார்மீக உரிமையும் அறமும் எமக்கு உண்டு. உலக தமிழினம் முழுமையும் இதனையே செய்யும்.**

எமக்காக போராடிய அமைப்பு வெறுமனே சும்மா அலுவலகத்தில் இருந்துகொண்டு கட்டுக்கட்டாக கோப்புகளை(பைல்கள்) களை தூக்கி கொண்டு அதற்குள் சரத்துகளை வெட்டியாக தேடிக்கொண்டிருந்தவர்கள் அல்ல. அற்ப பதவிகளுக்காகவும் தமது குடும்பம் பிள்ளைகள் சுகமாக வாழவேண்டும் என்பதற்காகவும் போராடியவர்கள் அல்ல.

தமது உயிர் வாழ்வு இளமை குடும்பம் என்று அனைத்தையும் அற்பணித்து போராடியவர்கள். தாங்கொணாத கடும் உடல்வலிகள் பசி விழுப்புண்கள் என்பனவற்றுக்கு மத்தியில் மிக நீண்டதூரங்களை பாரங்களுடன் கடந்து நடந்து எமக்காக போரடிய எம் செல்வங்களின் செயல்கள் ஒவ்வொன்றையும் வரலாற்று ரீதியாகவும் தர்க்கரீதியாகவும் உலக சரித்திரரீதியாகவும் நியாயப்படுத்தும் உரிமையும் வலுவும் எம்மிடம் உண்டு.

சுமந்திரன்கள் என்னதான் சுத்திவளைத்து எழுதி எம் விடுதலைப்போராட்டம்மீதும் அதன் அமைப்பு மீதும் காழ்ப்பும் வஞ்சமும் உமிழ்ந்தாலும் அதனை எதிர்க்கும் தார்மீக உரிமையும் அறமும் எமக்கு உண்டு.உலக தமிழினம் முழுமையும் இதனையே செய்யும்.

மிக நீண்ட வரலாறுகளை படிப்பதற்கு நேரம் இல்லாதுவிட்டாலும்கூட சுமந்திரன் திருவள்ளுவரின் திருக்குறளை அதிலும் இந்த குறளை கொஞ்சம் திரும்பதிரும்ப படித்து பார்ப்பது மிக நல்லது.

*'யாகாவர் ஆயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு '*

*உசாத்துணை: Neelan – The Other Side of the Story by G.G. Ponnambalam Jr. Hot Spring, London; Aug-Sept, 1999, pp.15-18*


SRI KANTH & CO SOLICITORS



We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

ENGINE TEC MOTORS



We offer Facilities For:

- Serving
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken

உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்.



Ask for Vel or Rajan
Tel: 02086408000 / 02086401230
Mob:07860226476 / 07860770945
Unit 5, 339 London Road, Mitcham, Surrey CR4 4BE
e mail: vel@etmluk.com Web:www.etmluk.com

# இது விதைப்புக் காலம்

புரட்டாதி பிறந்தாலே உடன் நினைவுக்கு வருவது வன்னி வயல் விதைப்புத்தான். இதுதான் விதைப்புக்குரிய காலம். பருவத்தே பயிர் செய் என்பதற்கமைய கமக்காரர்கள் நெல்லை மொழியாக்கி பயிராக பச்சயம் தெரிய வைக்க கங்கணம் கட்டிக்கொண்டு திரிகின்ற காலம் இது. சோற்றுக்குள் கையை வைத்து சுவைத்து உண்ணுகின்றோம். அந்த சோற்றுக்குக் காரணமான நெல்லை விளைவிக்க சேற்றுக்குள் கமக்காரர்கள் படும்பாட்டை அனுபவித்துப் பார்ப்போருக்குத்தான் தெரியும்.

அந்தக் கிளிநொச்சி பிரதேசத்தின் மிகப்பெரிய பகுதிகள் 634 சதுர மைல் பரப்பளவில் உள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய பரப்பளவுகள் நெல் வயல்களால் ஆனது. பல குடியேற்றத்திட்டங்களையும் கொண்ட பகுதி கிளிநொச்சி மாவட்டம். 9 குளங்கள் இந்த வயல் நிலத்துக்கான நீர்ப்பாசன திட்டத்துக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளன. இவற்றை விட காலபோகத்திற்கு வான் பார்த்த பயிராக விளைகின்ற பருப்பு வகைகளும் அதிகம்.

கிளிநொச்சி மண் களிமண் நிலம். உரியபடி பயிரானால் ஏக்கருக்கு 45 மூட்டைகள் வரை நெல் விளையும் நிலங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் நிறைந்திருக்கின்றது. விதையை மொழியாக்கி பயிராக்குவதில்தான் நெற்செய்கையின் மூல வெற்றி தங்கியிருக்கிறது. மழை உரிய படி உரிய நேரத்தில் அளவாக பெய்ய வேண்டும். மண் ஈரப்பதனாக இருக்கும்போது உழுது முடிப்பதற்குரிய வசதிகள் வேண்டும். வரம்புகள் நீரைத் தேக்கி வைக்கக்கூடிய தன்மையுரியதாக திருத்தப்பட வேண்டும். வரம்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் என்பதற்கமைய நண்டுவளைகள் அவை இவையென அடிக்கடி வரம்புகள் பழுதாவதால் ஒவ்வொரு செய்கைப் போகத்திற்கும் வரம்புகள் கட்ட வேண்டியது முக்கிய பணியாகி விடுகின்றது.

சிறுபோக அறுவடை முடிய அடிப்பாகங்களாகக் காய்ந்திருக்கும் பழைய பயிர்அடிகளை வெயில் நேரம் பார்த்து முன்னதாகவே எரித்து விட வேண்டும். ஒட்டு எரித்தல் என்று இதைச்சொல்வார்கள். ஊரில் சிறிய அளவு நிலத்தில் நெல் பயிரிடுவோர் ஆடு, மாடு என்று கால்நடைகளை இந்த வயல் நிலங்களில் இரவில் பட்டி கட்டி படுக்க விட்டு அவற்றின் சாணத்தை உரமாக்கி நிலத்தில் தேக்கி வைக்கும் வழமையும் இருந்தது.

ஆடி உழவு தேடி உழு என்பார்கள். ஆடி மழை பெய்தால் நிலத்தை உழுவதற்கு முடியும். அந்த உழவு மண்ணைப் புரட்டி வைத்து, புரட்டாதி விதைப்புக்குத் தயார்படுத்துவதற்கு உதவியாகும். இவ்வாறு புரட்டி வைத்த நிலத்தில் புரட்டாதிகளில் புழுதி விதைப்பு என்ற முறையில் நெல் விதைப்பு நிறைவுபடும்.

இவ்வாறான புழுதி விதைப்பு மழை பொய்த்தால் பிரச்சினையாகி விடும். ஆடி மழை பெய்யவில்லை என்றால் புரட்டாதி மழை வரை காத்திருக்க வேண்டும். புரட்டாதி மழை ஆரம்பமான முன்னரே அந்த நிலத்திற்கான தயார்படுத்தலோடு அந்த நிலம் இருக்க வேண்டும். புரட்டாதி மழை தொடர்ந்து பெய்தால் உழவு செய்வது சிரமமாகி விடும். இந்த மழை தொடர்ந்து பெய்தாலும், புழுதி விதைப்புக் கண்ட நெல் முளைகள் அழுகிவிடும். வயல் பாத்திகளால் நீரைத்தேக்கி அகற்றிவிட கழிவு வாய்கால்கள் இருக்கும். ஆனால், அந்தக் கழிவு வாய்க் கால்களை பின் வயல்காரர்கள் அடாத்தாகப் பிடித்து நெற்காணி ஆக்கியிருப்பார்கள்.

புழுதி விதைப்பு நீர் முட்டி அழுகி நாசமானால், அல்லது வேறு வகையில் அது பழுதாகி விட்டால் மீண்டும் விதைக்க வேண்டும். மழை விட்டுக்கொடுக்க வேண்டும். நவராத்திரி அது இது என்று பருவமழை கனமாகத் தொடர்ந்தால் பலகை அடிப்பு, சேத்து விதைப்புத்தான் செய்ய முடியும். நெல்லை சாக்கில் தளர்வாகக் கட்டி வாய்க்காலில் அந்த மூட்டைகளை ஒருநாள் அளவில் ஊற வைப்பார்கள். பின்னர் மறுநாள் காலை எடுத்து அடுக்கி சாக்கால் மூடிவிட மூன்றாம் நாள் அவற்றிலிருந்து நெல் மணிகள் வெண்பல் முளைகளாக தள்ளி நீத்தும். அது சேத்து விதைப்புக்குத் தயாராகிவிடும். சேத்து விதைப்புக்கு வரம்பு நிறைய நீர் சேர்த்துக்கட்டி மேலதிகமாக வீல் இரண்டு பூட்டிய உழவு இயந்திரத்தில் சேற்றால் பாத்திகளை கலக்கச் செய்வார்கள். இவ்வாறு ஒவ்வொரு பாத்தியும் சேறு கலக்கி தயாராகி இருக்க பின்னால் தரையை பலகை அடித்து மட்டுப்படுத்த வேலைகள் தொடரும். அகலப்பலகையை பூட்டி அவற்றை மாடுகள் சோடியாக இழுக்க ஆள் பலகை மேல் ஏறி நின்று கலக்கல் சேற்றை சமப்படுத்தி விடுவார். இவ்வாறாக பலகை அடிப்பு முடிய முளை நெல்லை வீசி விதைப்பார்கள். கலங்கல் சேற்றுடன் கலந்த முளைநெல் தரையில் காலூன்றி நிற்கும். அடுத்தநாள் விடிய பாத்தி நீரை வடிய விடுவார்கள். அள்ளல் வெட்டி நீர் வடிய உதவியாகத் தயார் செய்வார்கள். சூரிய வெளிச்சம் காண வீறு கொண்டு பல் முளைகள் இளந்தளிர் பச்சை காணும். இதையே அடைமழை தொடர்ந்தால், பலகை அடிப்பு முளை நெல் நாசமாகிவிடும். மீண்டும் விதைக்க வேண்டும்.

சிறகைக்கு காவல் இருப்பது இன்னொரு கட்டம். முளைத்தால் உரம், களை பிடுங்கல் என்று பயிரை பருவத்திற்குப் பருவம் வளர்ப்பதற்கு செய்ய வேண்டியவை பல. எங்கே என்று தேடி வரும் கிருமிகள், பங்கசுக்கள் பயிரை நாசமாக்கி விடும். அவற்றிலிருந்து பயிரைப் பாது காக்க கிருமிநாசினி, பங்கசுக்கொல்லி என்று வீசிக் கொண்டே இருக்க வேண்டும். இரவிரவாக வயலில்பரண் அமைத்து படுத்திருந்து இந்த சிறகைகள், கூட்டாகவரும் பன்றிகள் என்று அவற்றுக்குக்காவல் இருப்பதுகமக்காரனின் முக்கிய பணி. பகல் பகலாக வயலில் பயிரைப் பச்சயப்படுத்த பாடுபடுவது இன்னொரு பணி. இவற்றை முடித்தால் தான் நெல் விளைச்சலைக் காண முடியும்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

களை பிடுங்கலுக்கு ஆட்சேர்ப்பது சிரமமான ஒரு பணி. ஒரு உழவு இயந்திரத்தில் 35 கூலியாளர்கள் வரை கொண்டு வந்து இறக்கப்படுவார்கள். இவற்றிற்கென தனித்தனியான கங்காணிமார் கூலியாளர்களை அழைத்து வர அமர்த்தப்படுவது அவசியமான ஒரு பணியாக என்றும் இருக்கின்றது.

அதிகாலை யாழ்தேவியில் யாழ்ப்பாண முதலாளி வருவார். வரம்பில் குடை பிடித்துக் கொண்டு வேட்டியை மடித்துக் கட்டியபடி நின்று கண்காணிப்பார். மதியம் யாழ்தேவிக்கு கொண்டுவந்த சாப்பாட்டுப் பார்சலை உண்டுவிட்டு திரும்பிவிடுவார்.

நெல் அறுவடை காலம் என்றால், கமக்காரருக்கு மகிழ்ச்சி தொடங்கும் காலம். உரியபடி அறுவடை முடிக்க முன்பு மட்டக்களப்பு பகுதியிலிருந்து முஸ்லீம்கள் அருவி வெட்டுக்கு என்று வருவார்கள். வயல்களில் வாடி அமைத்து இருப்பார்கள். இரவிரவாக சூடு அடித்து நெல் மூட்டையாக்கி விற்பனைக்குப் போகும்.

நெல் வயல் நிலங்கள் வடமாகாணத்திற்கு இயற்கை தந்த ஒரு கொடை. குளங்களை காலாகாலத்திற்குத் திருத்திப் பராமரித்தால் தான் இந்த நிலங்கள் நல்ல பயன்பாட்டைத் தொடர்ந்து தரும். வாழத் தொடர்ந்து முயன்றதனால் வையத்து உயர்ந்ததல்லவா தமிழர் இனம். செய்யும், வளரும், உயரும் என்று நம்புவோம்.

# கோர்த்து விடும் செய்திகள்

## ▪ பதினாறும் பெற்ற அமெரிக்காவின் வரைபுத் தீர்மான முன்மொழிவு

இலங்கை தொடார்பாக ஐக்கிய அமெரிக்கா முன்வைத்துள்ள வரைபுத் தீர்மான முன்மொழிவில் பதினாறு இடங்களில் வரவேற்கின்றோம், என்றும் பதினாறு இடங்களில் மீளிணக்கம்(சிலர் இதை நல்லிணக்கம் எனக் குழப்புவர்) ஒன்பது இடங்களில் ஊக்குவிக்கின்றோம் என்றும் மூன்று இடங்களில் பயங்கரவாதிகள் என்றும் இரு இடங்களில் மதிக்கிறோம் என்றும் சொற்கள் பாவிக்கப்பட்டுள்ளன. ஒரு இடத்தில் மட்டும் காரிசனையைத் தெரிவிக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓர் இடத்தில் தன்னும் தமிழர்கள் என்ற சொல் இடம் பெறவில்லை. ஆனால் மனித உரிமைக் கழகத்தின் அறிக்கையை ஆள் மாறி ஆள் அமைப்பு மாறி அமைப்பு வரவேற்கின்றோம் என்கின்றார்கள். ஆனால் அந்த அறிக்கையை ஒட்டி ம உ கழகமோ, ஐ நா பாதுகாப்புச் சபையோ அல்லது இலங்கை அரசோ எந்த நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதில்தான் அந்த அறிக்கையின் உயிர் தங்கியிருக்கின்றது. மற்றும்படி அது வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான்.

## ▪ மீம் எனப்படும் படக்கருத்தில் கலாய்க்கப்படும் சுமந்திரன்

சமூக வலைத் தளங்களில் தமிழ்ப்பாராளமன்ற உறுப்பினர் சுமந்திரனின் படமும் போட்டு அவர் போடும் மொக்கைகளையும் போட்டு அவரை நன்கு கலாய்க்கின்றார்கள். ஒரு தொலைக்காட்சியில் தோன்றிய சுமந்திரன் ஒரு கேள்விக்குப் பதில் கூறுகையில் தானே பாராளமன்றத்தில் இலங்கையில் நடந்தது இனக்கொலை என உரையாற்றியதாகத் தம்பட்டமடித்தார். பின்னர் இன்னொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இனப்படுகொலை என்பதற்குப் போதிய ஆதாரம் இல்லையென்றார். இதை வடிவேலுவின் படத்துடன் போட்டு அது போன வாரம் இது இந்த வாரம் என பதிவிட்டுள்ளார்கள். இதில் சம்பந்தர், மாவை போன்றோரையும் விட்டு வைக்கவில்லை. மாவை நீண்ட காலமாக செய் அல்லது செத்து மடி எனச் சொல்வதால் குறைந்தது ஒன்றையாவது செய்யுங்கள் எனப் பதிவிடப்பட்டுள்ளது. சம்பந்தருக்குப் போடப்பட்டிருப்பது வட்டுக்கோட்டையில் தமிழர்கள் விதைத்ததை மருதனாமடம் சந்தையில் விற்றார் என்றும் ஜெனீவாவில் விதைத்ததை நிஷா பிஸ்வாலுக்கு விற்றார் என்று.

எல்லாவற்றிலும் பிற்குறிப்பாக த தே கூட்டமைப்பிற்கு வாக்களித்தமை ஓர் இமாலயத் தவறு என்றும் பதியப்பட்டிருக்க்கும். மீம் என்பதும் ஓர் இலக்கிய வடிவமாம்.

## ▪ ஜெனீவா பேரணியில் அமெரிக்கத் தேசியக் கொடி

ஜெனீவாவில் செப்டம்பர் 21-ம் திகதி நடந்த பேரணியில் ஒரு இளைஞர் அமெரிக்கத் தேசியக் கொடியைப் பிடித்தபடி நின்றார். அதைக் கொழுத்தப் போறாங்கள் போல என்று நினைத்திருந்தேன் ஆனால் அவர் அதை இறுதி வரை பயபக்தியுடன் பிடித்துக் கொண்டிருந்தார். ஈருளியில் போன ஒருவரின் கொடியில் ஒரு புறம் தேசியக் கொடி மறுபுறம் பிரித்தானியாவின் தேசியக் கொடி இதுதான் குடியேற்ற ஆட்சி மனப்பாங்கா (Colonial Mentality)???????

*- ஊருளவாளி*



இனிய நினைவுகளோடு
உன்னைப் போர்க்களத்தில்
பிரிந்திருந்தால் கூட..
இப்படிக் கலங்கி இருக்க
மாட்டோம்..
ஊழிக் காலம் உள்ளவரை
வலிகளுடன் என்னைப் பிரிந்து
வாழுங்கள் என்று..
ஓர் தண்டனையை அல்லவா
எமக்குத்
தந்துவிட்டுப் போய்விட்டாய்?

எமது வலிகளின் தன்மையை வார்த்தைகளில் எப்படி ஐயா வடிக்க முடியும்?
வந்துபார் தமிழ் ஈழம் மலரும் போது கோயில்கள் அங்கே இருக்காது..
ஆனால்.. நாம் வணங்கும் தெய்வமாக நீதான் அதில் குடியிருப்பாய்..
எமது சந்ததிக்கு நீ... ஓர் கடவுள் ஐயா..!

*மு.வே.யோ (வெளிச்சவீடு இணையம்)*

TrainingConnect
For British Citizenship and Indefinite Leave to Remain (ILR) | All Applicants after 28th October 2013
Home Office Approved Test | City & Guilds Approved Centre
Life in the UK Course B1 Speaking & Listening
- Settlement
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport/Naturalisation
IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test
City & Guilds Approved Centre
OUR 100% COMMITMENT
We Train You until You Pass | FREE INITIAL ASSESSMENT
0207 099 2400
694-712 London Road, Hounslow, TW3 1PG
contact@trainingconnect.co.uk | www.TrainingConnect.co.uk

# பிரித்தானிய நாட்டில் நாலவர் பெருவிழா

## ஒரு கண்ணோட்டம்

இலங்கை பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்டிருந்த 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவ மதத்தினை இங்கு பரப்பும் தீர்க்கமான நோக்குடன் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய ஆங்கிலக்கல்வி கல்வியில் மிகவும் பின்தங்கியிருந்த இலங்கைத் தமிழர்களை வெகுவாகக் கவர்ந்தது. தமது பெயர்களையே ஜோன், ஜோர்ச் என மாற்றும் அளவிற்கு ஆங்கிலக்கல்வி மூலமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு வளங்களை இறுக்கமாகக் கைப்பற்றிக்கொண்டு தம் சமயம் மொழி பண்பாடு வாழ்வியல் விழுமியங்கள் அனைத்தையும் புறந்தள்ளி கிறிஸ்தவ சமயத்தையும் அது சார்ந்த மேல்நாட்டுக் கலாசாரத்தையும் கைக்கொள்ள உந்தப்பட்டனர்.

'ஈழம் வாழ் தமிழ் இனத்தின் மிக நெருக்கடியான காலத்தில் நாவலர் தோன்றிப் பணி புரிந்திருப்பின் தமிழருடைய வரலாறே வேறு விதமாய் அமைந்திருக்கும்'. தமிழ் மக்களின் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பெருந் தலைவர் அமரர் சா.ஜே.வே.செல்வநாயகம் நாவலர் மாநாடு-ஆனி 1969 விழா மலரில் தமிழ் மொழிக்கும் தமிழர் கல்விக்கும் நாவலர் ஆற்றிய பன்முகப் பணிகளின் வரலாற்று முக்கியத்துவத்தை மதிப்பிட்டுள்ளது போல் சைவ சமயத்தையும் தமிழ்மொழியையும் அவைசார்ந்த பண்பாட்டு விழுமியங்களையும் இருள் கௌவிக்கொண்ட போராபத்துச் சூழ்ந்திருந்த அத்தகையதொரு பாதகமான காலகட்டத்தில்த்தான் உதயசூரியனென யாழ்ப்பாணம் நல்லூரில் 1822ஆம் ஆண்டு தோன்றி கல்வி கற்பதற்காக ஏறக்குறைய 14ஆண்டுகளை கிறிஸ்தவ சூழலில்க் கழித்த நாவலர் இக்காலத்தில் கிறிஸ்தவர்களின் மூர்க்கமான கிறிஸ்தவ சமயப் பிரச்சார நடவடிக்கைகளினால் மனம் விரக்தியுற்றவராய் மிசனறியிலிருந்து வெளியேறிப் பண பலமும் ஆளணிப் பலமும் கொண்ட கிறிஸ்தவ மிசனறியுடன் எதிர்த்துச் செயற்பட்டு வைசமும் தமிழும் தமிழர் கல்வியும் செழித்து வளரும் வகையில் காலங்கடந்தும் நிலைத்து நிற்கக்கூடிய அரும்பெருந் திட்டங்களை தனிமனிதனாக நிறுவன அமைப்பிற்கு நிகராக முழுவீச்சுடன் முன்னெடுத்து சாதனைகள் பல நிறுவித் தமிழர் வரலாற்றில் புதுயுகம் படைத்த யுகபுருசராவார்.

தமிழ்மொழி தோற்றுவித்த இத்தகைய ஒப்புயர்வற்ற பேராசானுக்கு 'இலண்டன் திரிசக்தி இலக்கிய சங்கமம்' அண்மையில் 'நாவலர் பெருவிழா ஒன்றினை லண்டன் அல்பேட்டன் சனசமூக பாடசாலை மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வில் ஆசியுரை வழங்கிய என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ கமலநாதக்குருக்கள் தமதுரையில் 'சைவ சமயிகள் பின்பற்றி ஒழுகவேண்டிய நடைமுறைகளை விபரிக்கும் நாவலர் சைவசமயிகளுக்கென எழுதிய விஞ்ஞாபனத்திலிருந்து முக்கிய சில பகுதிகளை விளக்கி கூறி சைவமக்களை நெறிப்படுத்திய பெருமகன் நாவலர் எனக் கூறினார். வாழ்த்துரை வழங்கிய புதினம் பத்திரிகை ஆசிரியர் இராஜகோபால், ஈலிங் அம்மன் ஆலயத் தலைவர் திரு.இரத்தினசிங்கம், திரு. யோகநாதன் ஆகியோர் திரிசக்தி இலக்கிய சங்கமத்தின் பணிகளையும் அதன் அமைப்பாளர் திரு.சிவ.தணிகாசலத்தையும் வாழ்த்தியும் பாராட்டியும் பேசினர். அடுத்துப் பேருரை நிகழ்வில் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் சதாசிவம் ஆனந்தத்தியாகர் 'நாவுக்கரசரும் நாவலரும்' என்ற தலைப்பில் 'நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என அரசன் கட்டளையையே நிராகரித்த நாவுக்கரசரின் அஞ்சா நெஞ்சம் நாவலரிடமும் அமைந்திருந்ததால்த் தான் ஆங்கில அரசின் மதமாற்ற நடவடிக்கைகளைத் தீவிரமாக எதிர்த்துச் சைவத்தைப் பாதுகாத்தவர் என்று கூறினார். 'நாவலர் வலம்' என்ற பொருளில் உரை நிகழ்த்திய சிவஸ்ரீ பா.வசந்தன் குருக்கள் சைவத்தையும் தமிழையும் காத்து வளர்தது நாவலர் தமிழுக்கு வலக்கரம் போல் என்றும் பக்கபலமாகவே விளங்கினார் எனக் கூறினார். 'இலக்கண காவலர் ஈழத்து நாவலர்' என்ற தலைப்பில் கவிதை வாசித்த புலவர் சிவநாதன் உணர்ச்சி மிக்க கவிதைகளின் ஊடாக நாவலரின் பணிகளை விளக்கி ஒருசில நிமிடங்கள் சபையைத் தன்வசம் ஈர்த்துக்கொண்டார்.

அறிஞர்கள் சிறப்புரை என்ற நிகழ்வில் ரத்தினம் பவுண்டேசன் அதிபர் கலாநிதி இரத்தினம் நித்தியனந்தன் பேசும் போது சைவத்தைக் கண்டித்து கிறிஸ்தவ மிசனரியினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் தானும் பின்பற்றி அதாவது பிரசங்கம் செய்தல், சமய உண்மைகளை வினாவிடையாக எழுதுதல், கண்டன நூல்கள் எழுதுதல் எனப் பேசியும் எழுதியும் வளர்த்தார் எனக் கூறினார். அடுத்து இல்பேட் செல்வவிநாயகர் அறங்காவற் சபைத் தலைவர் திரு.செல்வராசா உரை நிகழ்த்துகையில் பேச்சுடன் நின்றுவிடாது சைவத்திற்கும் தமிழுக்கும் காலத்தாலழியாத பணி செய்த நாவலருக்கு இலண்டனில் சிலை நிறுவுவதன் மூலம் என்றும் அவரைப் போற்ற வேண்டுமெனக் கூறினார். அடுத்து உரை நிகழ்த்திய க.மாசிலாமணி தனதுரையில் கிறிஸ்தவ ஆக்கிரமிப்பிலிருந்து சைவத்தை மீட்டு பாதுகாத்து வளர்ப்பதுதான் ஆரம்பத்தில் நாவலரின் நோக்கமாக இருந்தாலும் சைவம் நீடுநின்று நிலைக்கவேண்டுமாயின் கல்வியில் மிகமிகப் பின்தங்கியுள்ள தமிழ் மக்களை மையமாகக் கொண்டே சைவத்துடன் அதற்குக் கருவியாகிய கல்வியையும் ஒரு சேர வளர்க்க வேண்டுமென்றும் அதற்காகப் பாடசாலைகளை நிறுவியும் பாடப்புத்தகங்களை படிக்கிரமத்தில் எழுதியும் பெரும் பணியாற்றினார் என்றார். எஸ்.காந்தலிங்கம் தயாரித்து வழங்கிய 'பண்டாரவன்னியன்' நாடகத்தில் பண்டாரவன்னியனாக நடித்த சிறீ காந்தலிங்கத்தின் அபாரமான நடிப்பு நிஜமான பண்டார வன்னியனையே நேரில் கொண்டுவந்து விட்டது.

விழாவின் முக்கிய நிகழ்வாக அடுத்து இடம்பெற்ற தனிமனித சாதனையாளர் விருது எண்பது வயதை எட்டிய வரும் கடந்த ஆறு தசாப்தங்களாக அரசியல் தமிழ்த் தொண்டனாக ,தொழிற்சங்கவாதியாக, சமூகசேவையாளராக, சமூகப்பணியாளராக,எழுத்தாளராக,நூலாசிரியராக, பத்திரிகையாளராக பல்பரிமாணம் கொண்டு பணியாற்றிச் சாதனைபடைத்த சுடரொளி ஆசிரியரும் 1968ல் கொழும்பில் அமைக்கப்பட்டு 1969இல் நாவலர் சிலையினை யாழ்ப்பாணம் நல்லூரில் நிறுவி மிகப்பிரமாண்டமான முறையில் நாவலர் விழாவை மிகச் சிறப்பாக நடத்திய நாவலர் சபையின் இப்போதிருக்கும் ஒரேயொரு உறுப்பினருமான திரு.ஐ.தி.சம்பந்தன் அவர்களுக்கு இன்று இலண்டனில் நடக்கும் நாவலர் விழாவில் வழங்கி அவரைக் கௌரவிப்பது வாழும் போதே வாழ்த்தும் இலண்டன் இலக்கிய சங்கமத்தின் பண்பு போற்றுதற்குரியது.

அடுத்த நிகழ்வாக புலம்பெயர் தமிழ் இளைஞர்களின் இலக்கிய ஈடுபாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் இலக்கிய சங்கமத்தின் பட்டிமன்றம் இடம்பெற்றது. இறுதியாக ஆர்.இரவீந்திரமோகனின் பாராட்டுரையினைத் தொடர்ந்து இலண்டன் இலக்கிய சங்கமத்தின் அமைப்பாளர் சிவ.தணிகாசலம் தன் நன்றியுரையினை புலம்பெயர் நாட்டில் செம்மொழியாம் நம் செந்தமிழின் சிறப்பு அதன் இலக்கியச் செழுமையினை வெளிக்கொணரவும் அதனூடாக இலக்கியச் சுவைஞர்கள் இலக்கிய இன்பம் நுகரவும் தொடர்ந்து செயற்படுவேன் என்று கூறினார். இரவு 10.30 மணியளவில் மிக அருமையான நிகழ்வு ஒன்றைப் பார்த்துச் சுவைத்த மனநிறைவுடன் அடுத்தடுத்து மிகக் காத்திரமான நிகழ்வுகளை வழங்கும் சிவ தணிகாசலத்தின் சோர்விலா முயற்சியையும் அவர் கொண்டிருக்கும் அளவற்ற பற்றுறுதியினையும் விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரினதும் பாராட்டுகளுடன் பெருவிழாவும் இனிதே நிறைவெய்தியது.

*- க.மாசிலாமணி*

# மனித உரிமை விசாரணை..

*- 09ம் பக்கத் தொடர்ச்சி*

இந்த அறிக்கை வெளிவந்த பின்னும் நீடித்திருக்கிறது. இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல பரிந்துரைகளை சிறீலங்கா அரசு அமுல்படுத்தப் போவதில்லை. ஆனால் வெளி வரவிருக்கிற தீர்மானம் மிக முக்கியமான பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு வலியுறுத்துவதோடு உள்ளகப் பொறிமுறையை நிராகரிக்க வேண்டும். அதுவே பாதிக்கப்பட்டவர்களின் குறைந்தபட்ச எதிர்பார்ப்பைத் தன்னிலும் பூர்த்தி செய்யும். ஆயினும், அதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாவதற்குப் பதிலாக அருகிவருவதாகவே அறியமுடிகிறது. இத்தகைய பின்னணயில் தமிழர்கள் கீழ்வரும் விடயங்களில் கவனம் செலுத்துவது பயனுள்ளதாக இருக்கும்.

சிறீலங்காவின் வகிபாகம் கூடிய கலப்புப் பொறிமுயையென்பது நம்பகத் தன்மையற்றது என்பதை நிரூபித்தல்.

அ. கடந்த கால செயற்பாடுகளை கருத்திற் கொண்டு, சிறீலங்காவின் உள்ளகப் பொறிமுறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்க முடியாது என்பதை வெளிவந்துள்ள அறிக்கை சுட்டடிக்காட்டியுள்ளது.

எதிர்காலத்திலும் அந்த நிலை நீடிப்பதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாக உண்டு. அத்தகைய சூழலில் அதனை வெளிப்படுத்தி கலப்புப் பொறிமுறையும் நீதியை வழங்காது என்பதை நிரூபித்தல்.

ஆ. சாட்சிகளை அச்சுறுத்தும் அல்லது சாட்சிகளுக்கு அழுத்தத்தை கொடுக்கும் செயற்பாடுகளை சிறீலங்காவின் கட்டமைப்புகள் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் அவற்றைப் பகிரங்கப்படுத்தல்.

இ. சர்வதேச குற்றங்களைப் புரிந்த ஆயுதப்படையினரும் அரசுக்கு ஆதரவானோரும் முழுமையான தண்டனைகளிலிருந்து காப்பாற்றப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. அத்தகைய தருணங்களில் அவற்றை வெளிப்படுத்தல்.

ஈ. சிறீலங்காவின் நீதித்துறை, நிர்வாகத்துறை, பாதுகாப்புத் துறை மற்றும் காவல் துறை போன்ற தரப்புகள் நீதியான விசாரணைகளை மேற் கொள்ளாமல் இழுத்தடிப்பதையும், நீதியான விசாரணைகள் நடைபெறுவதற்கு தடையாக இருப்பதையும் பகிரங்கப்படுத்தல்.

### சர்வதேச குற்றவியல் விசாரணைக்காக தொடர்ந்தும் போராடல்

அ. கலப்புப் பொறிமுறை போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை வழங்காது என்பதை, அதன் பலவீனங்கள் குறைபாடுகளை வெளிப்படுத்துவதனூடாக, சர்வதேச குற்றவியல் விசாரணைக்கான கோரிக்கையை பலப்படுத்துதல்.

ஆ. ஐ.நா மனித உரிமைகள் பேரவையைத் தாண்டி, ஐ.நா பாதுகாப்புச் சபைக்கும், ஐ.நா பொதுச்சபைக்கும் தமிழர்களுக்கான போராட்டத்தை விரிவாக்குதல். அதனூடாக, சிறீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

இ. நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமான சர்வதேச பொறிமுறைக்கான தமிழர்களின் போராட்டம் மேற்குலகம், தழிழ்நாடு மற்றும் வடகிழக்கோடு மட்டுப்படுத்தப்படாமல், இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கும், உலகின் ஏனைய பகுதிகளுக்கும் விரிவாக்குதல்.

### தமிழின அழிப்பை ஏற்று அங்கீகரிக்க செய்தல்

இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசு இனஅழிப்பு மேற்கொண்டது என்பதை ஏற்று அங்கீகரிக்கச் செய்வதற்கான போராட்டத்தை தொடர வேண்டும். தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தை உள்நாட்டுக்குள் முடக்கும் செயற்பாடுகளை முறியடிப்பதுவும் மிக முக்கிய பணி. அதில் வெற்றி பெறாவிட்டால் தமிழர்களின் நீதிக்கா போராட்டம் கால நீட்சியில் காணமல் போய் இறுதியில் தோல்வியடையும். தமிழர்களின் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, விவேகம், அர்ப்பணிப்பு, ஆக்க பூர்வமான தயாரிப்பும் திட்டமும் கொண்ட நகர்வுகளே தமிழர்களுக்கான உரிமையை மட்டுமல்ல நீதியையும் பெற்றுக்கொடுக்கும்.

அந்தவகையில், தமிழர் அல்லாத முற்போக்கு சக்திகளை ஒன்றுதிரட்டி தமிழர்களுக்காக தமிழர்களே போராடுவதற்கான ஒரு கருவியாக வெளிவந்துள்ள அறிக்கையையும் பயன்படுத்தி தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தை முன்னகர்த்துவது காலத்தின் தேவை.



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 34 வயது, 5'2'' British citizen. Graduate, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5578.

2. 29 வயது, 5'4'' Living in UK working in a shop manager, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5581.

3. 37 வயது, 5'3'' British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5371.

4. 41 வயது, 6'0'' British citizen. Finished degree in MA in computer holding a good job in same field, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5550.

5. 37 வயது, 5'6" Temporary visa finished BA economics now working in a petrol station தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5547

6. 33 வயது, 5'6" living in France தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5549

7. 31 வயது, 5'8" Living in sri lanka finished degree in Bsc bio technology working in a private company in colombo தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5551

8. 37 வயது, 5'7" British citizen, doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5554

9. 25 வயது, 5'10" student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5555

10. 29 வயது, 5'3' refugee visa, Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5558

11. 28 வயது, 5'7" Student visa, Graduated in MA in marketing தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5559

12. 35 வயது, 5'8" British citizen finished degree in computer network engineer ing working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5565

13. 35 வயது, 6'0" student visa finished degree Msc தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5568

14. 28 வயது, 5'6" British citizen catholic graduate now working in a American company as an Analyst தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5569

15. 25 வயது, 5'6" Born and brought up in uk. Graduate working as an underground signally engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5571

16. 38 வயது, 5'9" British citizen working in a NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5500

17. 47 வயது, 5'6" British citizen Graduate IT software consultant working for leading IT consultancy in uk தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 1213

18. 33 வயது, 5'5" Discretionary visa working as an electrical/ electronic engineer in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5218

19. 34 வயது, 5'6" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5535

20. 31 வயது, 5'4" British citizen graduate working in a service industry தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5537

21. 41 வயது, 6'0" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5542

22. 33 வயது, 5'11" work permit graduate working in a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4579

23. 43 வயது, 5'8" Canadian citizen graduate working as an engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5520

24. 29 வயது, 5'5" British citizen graduate working in a services industry தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5521

25. 42 வயது, 5'6" தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5523

26. 27 வயது, 5'6" Born & brought up in uk. Finished degree working as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5524

27. 37 வயது, 5'6" Living in sri lanka working in a medical business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5529

28. 30 வயது, 6'0" living in India. Graduate working as a sales manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5419

29. 32 வயது, 5'8" Born & brought up in uk. Qualified MSC in internet computing working as an IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4710

30. 30 வயது, 5'7" Living in sri lanka. working in a Bank தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5531

31. 30 வயது, 5'5" Asylum seeker working as a decorating job தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5533

32. 30 வயது, 5'7" British citizen working as a Technician for an Electrical Gaming Company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5325

33. 37 வயது, 5'8" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5502

34. 31 வயது, 5'5" British citizen working as a financial sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5509

35. 43 வயது, 5'8'' British citizen working in an Investment bank as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

36. 35 வயது, 5'5'' British citizen Finished degree in MBA working in a supermarket தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5510

37. 28 வயது, 5'7" German citizen. living in uk finished degree in German language (Hons), working as a language translator தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5513

38. 36 வயது, 5'7" swiss citizen living in swiss working in a Own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5512

39. 41 வயது, 5'6" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5516

40. 37 வயது, 5'11" Born and brought up in uk, master degree from Imperial college, working as an Investment banker தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5517

41. 34 வயது, 5'5" British citizen, BSc (Hons) in computer science, working as an accounts manager at Deloitte company தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 236

42. 42 வயது, 5'6" Divorced, British citizen Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4816

43. 41 வயது, 5'8" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5486

44. 31 வயது, 5'10'' Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5488

45. 35 வயது, 6'1" British citizen Graduate working as an IT Programmer and organizer தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5490

## மணமகன் தேவை

1. 30 வயது, 5'4'' Born and brought up in UK, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5575.

2. 40 வயது, 5'4'' British citizen. Graduate working as an Accountant. தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5580.

3. 35 வயது, 5'7'' Born and brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5582.

4. 27 வயது, 5'6'' Born and brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5583.

5. 36 வயது, 5'4'' Now studying PHD in Norway working in a hospital as a medical researcher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5584.

6. 26 வயது, 5'0'' Divorced temporary visa, தகுந்த மணமகனை Ref 5585.

7. 30 வயது, Divorced british citizen , மணமகனை தேடுகின்றனர் Ref 5588.

8. 30 வயது, 5'3'' British citizen. Graduate working in NHS trust as clinical physiologist, மணமகனை தேடுகின்றனர் Ref 5590.

9. 27 வயது, 5'3'' Born and brought up in Uk. Graduate. Medical sector, மணமகனை தேடுகின்றனர் Ref 5343.

10. 27 வயது, 5'6'' British citizen. Graduate Bsc Bio medical working in a clinic coordinator, தகுந்த மணமகனை Ref 5592.

11. 32 வயது, 5'0" British citizen graduated in computer system & electronic engineering now working in a private bank with insurance broker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5560

12. 29 வயது, 5'5'' British citizen finished pharmacist degree now working in a Boots தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5564

13. 20 வயது, 5'5" Divorced living in Sri Lanka தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5567

14. 31 வயது, 5'5" Born and brought up in uk. Graduate working as an Invest ment Banker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5572

15. 42 வயது, 5'3'' Divorced british citizen working in a Food company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374

16. 27 வயது, 5'1" Born in Germany finished degree in Airport Management working in a Airport தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5538

17. 32 வயது, 5'2" British citizen graduate working as a clinical coding supervisor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

18. 30 வயது, 5'6" work permit, Graduate Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5543

19. 29 வயது, 5'3" Born and brought up in Uk தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5540

20. 28 வயது, 5'3" Graduate living in sri lanka தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5544

21. 32 வயது, 5'7" Divorced graduate living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5519

22. 27 வயது, 5'0" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5522

23. 24 வயது, 5'4" Born & brought up in uk. Graduate working as a medical sector தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5526

24. 41 வயது, 5'6" divorced living in Sri Lanka தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5528

25. 27 வயது, 5'4" living in sri lanka graduate working in a international school in colombo as a teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4536

26. 25 வயது, 5'3" Born & brought up in uk finished degree working in a pharmaceutical company as a laboratory technician தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5530

27. 26 வயது, 5'6" Living in sri lanka Finished Dance degree grade 6 தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5532

28. 32 வயது, 5'2" Born & brought up in uk. Finished degree in Finance தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3914

29. 33 வயது, 5'4" British citizen Graduate working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5504

30. 28 வயது, 5'6" British citizen working in at Childcare, christian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5505

31. 27 வயது, 5'3" Finished degree living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5506

32. 25 வயது, 5'4" Studying CIMA at colombo, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5507

33. 30 வயது, 5'3" British citizen Graduate working in medical sector christian (catholic) தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5400

34. 36 வயது, 5'2" Born and brought up in uk, working as a marketing manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5494

35. 27 வயது, 5'2" France Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5481

36. 27 வயது, 5'1" living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5485

37. 25 வயது, 5'4" UK Citizen graduate working as a Financial Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5487

38. 30 வயது, 5'4" British Citizen medical doctor, Catholic, seeking a UK professional தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5489

39. 33 வயது, 5'4" British Citizen working as a research & policy officer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5493

40. 29 வயது, 4'9" British Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5495

41. 32 வயது, 5'5" Born and brought up in uk working as a accounts Manager. Graduates in BSC horns தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5497

42. 22 வயது, 5'6" British citizen graduates தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5457

43. 31 வயது, 5'3" Living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5459

44. 28 வயது, 5'0" Living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5476

45. 30 வயது, 5'2" British citizen graduate working as Accounts Assistant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4754

46. 29 வயது, 5'5" British citizen working medial sector தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3615

47. 31 வயது, 5'6" British citizen working as an investment banker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1722

48. 29 வயது, 5'2" British citizen working medial sector தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3615

49. 29 வயது, 5'7" British citizen graduate working as a information technology தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4703

50. 30 வயது, 5'8" British citizen working medial sector தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3359

51. 36 வயது, 5'1" Divorced Asylum seeker living uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5438

52. 30 வயது, 5'4" Living in Sri Lanka Graduate working in a English teacher at school தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5439

53. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working in a maths teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5447

54. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working Administrative service தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5450

55. 26 வயது, 5'4" British citizen as a doctor தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5448


56. 21 வயது, 5'4" Living in Sri Lanka working as a pharmacist தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5449

57. 35 வயது, 5'3" Living in Sri Lanka Graduate working as a accounts executive தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5425

58. 22 வயது, 5'4" Permanent residence in UK graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5435

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# யார் இந்த ஹோமோ நலேடி (Homo naledi) ?




சுமார் ஐம்பது இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு, பாலூட்டிகளின் உயர் பிரிவைச் சார்ந்த ஒரு ஆபிரிக்க இனம் தன் இரு கால்களைப் பயன்படுத்தி நமிர்ந்து நடக்கத் தொடங்கியது. இரு பாத நடையின் விளைவாக பல அனுகூலங்கள் அதற்கு ஏற்பட்டது. ஒட்டு மொத்தத்தில் இந்த இனம் இன்று உலக உயிரினங்களின் உச்ச நிலையை அடைந்ததற்கு இதன் இரு பாத நடை பெரும் பங்கினை ஆற்றியது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு விடயம்.

இந்த இருபாத இனங்களில் ஒன்றின் பெயர்தான் அண்மைய செய்திகளில் பரவலாகப் பேசப்படுகிறது. அதனால்தான் அந்த ஹோமோ நலடி என்ற பெயர் தலையங்கத்தில் வந்தது. அங்கே ஹோமோ என்ற ஒரு சொல்லும் நலடி என்ற இன்னொரு சொல்லும் இருப்பதை அவதானித்திருப்பீர்கள். உயிரியலில் பெயரிடும் முறை இப்படித்தான் அமையும். முதலாவது சொல் அந்த இனத்தின் மரபுப் பெயராகும். இரண்டாவது சொல் அந்த இனத்தின் சிறப்புப் பெயராகும். நாம் நாளாந்தம் பயன்படுத்தும் வெங்காயம், உள்ளி, லீக்ஸ் ஆகிவற்றின் பெயர்களை ஒருமுறை அவதானிப்போம். அவற்றின் மரபுப் பெயர் அலியம் (allium). இவை மூன்றையும்விட அலியம் என்னும் மரபுப் பெயருடன் நூற்றுக்கணக்கான தாவரங்கள் உள்ளன. நாம் அவற்றை அலியம் என்னும் ஒரு பெயரை மட்டும் வைத்து எப்படி அடையாளம் காண்பது. சிறப்புப் பெயர் தெரிந்தால் உடனேயே அடையாளம் காணுவோம். அலியம் செபா என்றால் வெண்காயம். அலியம் சற்ரைவம் என்றால் உள்ளி. அலியம் பொறம் என்றால் லீக்ஸ். இதைவிட அலியம் என்ற பெயருடன் வீட்டுத் தோட்டத்திற்கு அழகிய பூக்களை அளிக்க வல்ல தாவரங்களின் குமிழ்களை அவற்றின் சிறப்புப் பெயர் மூலமே அடையாளம் கண்டு சந்தையில் வாங்குகின்றோம்.

ஹோமோ என்ற பெயருடன் உள்ள மனித இனத்தவர் வானிலிருந்து குதித்தவர்கள் அல்லர். டார்வின் கோட்பாட்டுக்கமைய அவர்கள் அடைந்த படிநிலை வளர்ச்சிதான் இன்று உலக உயிரினங்களின் உச்ச நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்துள்ளது. ஆனால் இரண்டு கால்களால் நடக்கத் தொடங்கும் போது இந்த இனத்தின் மரபுப் பெயர் வேறு. இருகால் நடையை தொடங்கிய இனத்தின் மரபுப் பெயர் ஆடிபிதெத்கஸ். அது இருகால் நடையுடையதானாலும் முற்றாக மரத்திலிருந்து இறங்கவில்லை. சிம்பன்சிக்கும் அதற்கும் இடையில் உள்ள வேறுபாடு போன்ற சர்ச்சைகளைத் தவிர்பதற்காக 36 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அஸ்ரலோபிதெக்கஸ் மரபுப் பெயர் கொண்ட பல சிறப்பினங்களின் பதிவையே ஆய்வாளர்கள் கவனத்தில் கொள்கிறார்கள். இந்த இனத்தின் லூசி என்ற பெண்ணே ஆதி அம்மாவாகத் தொடக்கத்தில் கருதப்பட்டார். இப்போ மைற்ரோ கொன்றியன் அம்மா என்னும் துல்லியமாகக் குறிக்கும் சொல் வந்துவிட்டது. அஸ்ரலோபிதெக்கஸ்ஸின் படிநிலை மாற்றம் அதன் மரபுப் பெயரை ஹோமோ என்று மாற்றும் சூழலை உருவாக்கியது. மண்டை ஓட்டின் அளவின் மாற்றத்தையே முக்கியமாக இதற்கான காரணியாகக் கொள்ளலாம்.

இன்று வாழும் ஹோமோ புத்திகூர்மை உடையது. அதனால் அதற்கு ஹோமோ சபியன்ஸ் என்று பெயரிடப் பட்டது. அந்த புத்தி கூர்மையுடைய இனம் மேலும் மேம்பாடடைந்ததால் அதன் சிறப்புப் பெயரை சற்று இறுக்கிச் சொல்ல வேண்டி உள்ளது. இதனால் ஹோமோ சபியன்ஸ் சபியன்ஸ் என்றே அழைக்கப்படுகின்றனர். 50 இலட்சம் ஆண்டுகளில் மனித இனம் இரண்டுக்கு மேற்பட்ட மரபுப் பெயர்களுடன் வாழ்ந்தாலும் பல சிறப்பினங்கள் வாழ்ந்திருக்கின்றன. ஒன்று அழிந்தபின்தான் அடுத்தது தோன்றியது என்றில்லாமல் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களாகவும் வாழ்ந்துள்ளனர். ஒன்றுடன் ஒன்று சேர்ந்து உருவான பரம்பரைகளும் உள்ளதால் அழிந்த இனங்களின் மிச்ச சொச்சங்கள் எங்களுள் இருப்பதாகவும் நம்புகிறார்கள். எடுத்துக் காட்டிற்கு 30 ஆயிரம் ஆண்டுகளுக்க முன்பு மறைந்த ஹோமோ நியண்டதலின் பண்புகள் உள்ளதாகக் கருதுகிறார்கள். இந்த இனங்கள் ஒன்றை ஒன்று சந்திக்க நேர்ந்தபோது என்ன நடந்திருக்கும் போன்ற விந்தையான சம்பவங்கள் பற்றி எம் உள்ளம் சிந்திக்கத்தான் செய்யும். இன்று ஹோமோ சபியன்ஸ்சபியன்ஸ் என்னும் ஒரே ஒரு இனம்தான் உலகம் முழுவதும் கறுப்பு, சிவப்பு, வெள்ளை, மஞ்சள், மண்நிறம் என்றும் உயரம் குறைந்த பிக்மீஸ் உயரம்கூடிய வட ஐரோப்பியர் என்றும் வாழுகின்றார்கள். இவர்கள் புத்திகூர்மை கொண்டவர்கள் அல்லவா. ஆகையால் மற்றைய எல்லா இனங்களையும் அழித்துவிட்டு தாங்கள் மட்டுமே உலகம் முழுவதும் வியாபித்துள்ளார்கள். நிற வேறுபாட்டிற்காகவும் மொழி வேறுபாட்டிற்காகவும் ஒருவரை ஒருவர் கொல்லும் இவர்கள் அந்நிய இனங்களைக் கொன்று ஒழித்ததில் வியப்பதற்கு ஏதும் இல்லை.

முதலில் ஹோமோ என்ற மரபுப் பெயருடன் வாழ்ந்த சிறப்பினம் ஹபிலிஸ். ஆயுதங்களை உபயோகித்த இனமென்றே இதை அழைப்பார்கள். அவர்களுக்கு பின் ஜோயிகஸ் என்னும் இனம் அடையாளம் காணப்படுகிறது. அடுத்த எரக்ரஸ் என்னும் இனம்பற்றிய தகவல் 100 ஆண்டுகளுக்கு மேலாகவும் பரவலாகவும் எம் மத்தியில் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. இவ்வினம் 10 இலட்சம் ஆண்டுகள் வரை இப்புவியில் வாழ்ந்திருக்கிறது. இவர்கள் உயரத்தில் குறைந்தவர்களானாலும் நடப்பதில் இன்றைய மனிதனைவிடக் கூடுதல் ஆற்றல் கொண்டவர்களாக இருந்தார்கள். கை கால் எலும்புகளைப் பொறுத்த மட்டில் இன்றைய மனிதனுக்கும் இவர்களுக்குமிடையில் வித்தியாசம் குறைவு. இவர்கள் கையாண்ட ஆயுதங்கள் ஹபிலிஸ் உபயோகித்த ஆயுதங்களை விட வலுவானவை. இவர்கள் உலகில் பரந்து வாழ்ந்தார்கள். முதலில் குகை வாழ்வை மேற்கொண்டதும், நெருப்பை உபயோகித்ததும் இந்த இனம்தான். சீனாவின் தலைநகரிலிருந்து 30 மைல்களுக்கு அப்பால் இவர்கள் வாழ்ந்த சவ்கோரியன் குகை இன்று யுனெஸ்கோவின் தொல் அரும்பெரும் செல்வங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பீக்கிங் மனிதன் என்று அழைக்கப்படும் இந்த இனம் அங்கு 5 இலட்சம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகளை கவரும் இவ்விடத்திற்குப் போனால் அங்கு எம்மை வரவேற்பது வாசலிலுள்ள மியூசியம் தான். சீன அரசு இந்தக் குகையை பேணிப் பாதுகாக்கிறது. இதேபோல் ஜாவா மனிதன் என்ற பெயரில் ஜாவாவிலும் இந்த எரக்ரஸ் இனம் வாழ்ந்துள்ளது. ஏரக்ஸ்சிற்கு அடுத்ததாக அன்ரெசெஸ்சர், ஹைடில் பேசென்சிஸ், அடுத்து முன்கூறிய நியண்டதலென்சிஸ் என இனங்கள் வாழ்ந்தன.

இப்பொழுது தென் ஆபிரிக்காவில் காணப்பட்ட எலும்புக் கூடுகளை ஆய்வுக்கு உள்ளாக்கயதன் விளைவு, இது ஒரு புதிய ஹோமோ இனம் என்பது தெரிய வந்துள்ளது. இதுகாலம் வரை மனிதர்கள் மட்டும்தான்தம் இறந்தவர்களைப் புதைக்கும் அளவுக்கு அக்கறை காட்டுபவர்கள் என்ற அபிப்பராயம் நிலவியது. இப்பொழுது இங்கு கண்டுபிடிக்கப்பட்ட 15 எலும்புக் கூடுகளும் உறவினர்களால் புதைக்கப் பட்டவையா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இறுதி முடிவு இன்னும் இல்லை.

ஆதி அம்மா என்று அழைக்கப்படுவதும் 32 இலட்சம் ஆண்டுகள் சென்றதுமான லூசியின் வயதை ஒத்ததா அல்லது அவரின் அரைவாசி வயதுடைய (16 இலட்சம் ஆண்டுகள்) ரேக்கனா பையனின் வயதை ஒத்ததா என்பதில் இன்னும் தெளிவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகளின் வயது நிர்ணயிக்கப் பட்டாலும் பிரச்சனை தீராது. அந்த இனத்தின் தொடக்கம் எது முடிவு எது என்று அறியும் தரவுகள் கிடைக்கும்வரை இறுதிப் பதில் இல்லை.

அநேகமாக மனித இனத்தை ஒத்த இவ்வினத்திற்கு அஸ்ரலோபிதெகஸ்ஸக்கு உள்ளது போல் சிறிய மண்டையறையும் மூளையும் எப்படி அமைந்ததென்பதில் ஆய்வாளர்கள் குழம்புகிறார்கள். ஒட்டு மொத்தத்தில் ஹோமோ என்னும் மரபுப் பெயருக்குள் வரவேண்டிதுதான் இந்த இனம். அது பற்றிய முழுத் தகவலும் கிடைக்காத படியால் தலையங்கத்தல் போட்டதையே திரும்பவும் போடுகின்றேன். யார் இந்த ஹோமோ நலெடி ?

## ஆயுர்வேத முறையில் மறைந்த இரத்தக் குழாய் அடைப்பு

மும்பையில் இருதய வலிக்காக மருத்துவமனை சென்ற ஒருவர் உரிய பரிசோதனைக்கு உள்ளாக்கப் பட்டார். அவரின் இரத்தக் குழாய்களில் மூன்று இடங்களில் அடைப்பு இருப்பது அடையாளம் காணப்பட்டது. அவருக்கு மாற்றுவழி இணைப்பறுவை (bypass surgery) சிகிச்சைக்கான பரிந்துரைவு செய்யப் பட்டது.

நண்பரொருவரின் ஆலோசனைக்கமைய ஆயுர்வேத மருத்துவரான சையது சாகிப்பிடமும் சென்றார். அவர் நோயாளிக்கு முழுமையான நம்பிக்கை ஊட்டி ஒரு மாதத்திற்கு தேவையான பான மருந்து கொடுத்தார்.

ஒரு மாதம் ஒழுங்காக அந்த மருந்தை எடுத்தபின் அறுவைச் சிக்ச்சைக்காக மருத்துவமனை சென்று சிகிச்சைககான முற்பணம் இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாக்களைச் செலுத்தினார். மறுநாள் அவரைப் பரிசோதித்த டாக்டர்களுக்கு ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியம். அவர் முற்றாக இரத்தக் குழாய் அடைப்புக்களிலிருந்து விடுபட்டிருந்தார்.

மருத்துவர் மந்திரம் மாயம் ஏதும் செய்யவில்லை. அவர் கொடுத்தது சாதாரண மருந்துதான். ஒரு கோப்பை எலுமிச்சம் சாறு அதே அளவு பூண்டு சாறு அதே அளவு இஞ்சி சாறு, இவை மூன்றையும் மேற்கூறிய அளவில் எடுத்து, இவற்றுடன் அதே அளவு அப்பிள் விநிகரையும் எடுத்து நான்கையும் நன்கு கலந்து, இள நெருப்பில் அது மூன்று கோப்பையாக வற்றும்வரை கொதிக்க வையுங்கள். ஆறிய பின் அதனுடன் மூன்று கோப்பை இயற்கை தேனையும் கலந்து போத்தலிலோ சாடியிலோ இட்டு வையுங்கள்.

ஒரு மாதத்திற்கு நாளாந்தம் காலையில் உணவுக்கு முன் அந்தச் சுவையான பானத்தில் ஒரு தேக்கரண்டி குடியுங்கள். விளைவு என்னவென்று மேலே கூறப்பட்டு விட்டதே.

இத்தகவல் உண்மைச் சம்பவம் என்பதால் நாம் மேலதிக விளக்கம் ஏதும் தரத் தேவையில்லை. ஆனால் இதனால் பயனடையப்போகின்றவர்களோ ஏராளம். இதை வாசிக்கும் நீங்களும் இப்படியான நற் செய்தியை உங்கள் நண்பர்களுடன் நிச்சயம் பகிர்ந்து கொள்வீர்கள் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

*தகவல் - சிறி*


பிரித்தானியக் குடியுரிமைப் பரீட்சை
Life in the UK Test
முழுமையான பயிற்சி நெறி
Smart Learning Centre
077 688 244 67

# தமிழ் சினிமா:

## அசலும் நகல்களும்




தமிழ் சினிமா vs plagiarism பற்றின விவாதம் நீண்ட காலமாகவே நடந்து வருவதுதான் என்றாலும் தற்போதைய இணையச் சூழலில் அது சற்று மேலெழும்பி வந்திருப்பதால், ஒரு சினிமா பார்வையாளனாக என்னுடைய 'கருத்தையும்' பதிவு செய்து 'கந்தசாமி'யாக விருப்பம்.

பார்த்த உலகத்திரைப்படங்களை தமிழ்ப் படங்களுடன் ஒப்பிட்டு 'இதான்யா அது' என்பதே அதிகமும் வாசிக்க நேரும் சினிமா பேச்சு. நான் நெடுங்காலமாகவே 'சினிமா பாரடைஸ்' படத்தை ஒட்டி வசந்தபாலனின் 'வெயில்' எடுக்கப்பட்டிருக்கிறது என வாசித்து இருக்கும் போல என நம்பிக்கொண்டிருந்தேன். சமீபத்தில் சினிமா பாரடைஸ் படத்தைப் பார்த்த போது அதிர்ச்சியாக இருந்தது. முற்றிலும் வேறு படம் இது. உண்மையிலேயே சினிமாபாரடைஸை நம்மவர்கள் இப்படித்தான் புரிந்து கொண்டார்களா?

வெயிலில் முருகேசன் ஒரு திரையரங்கில் பணியாற்றுகிறான், அந்த திரையரங்கு இடிக்கப்படுகிறது. அதேபோல ஒரு காலாவதியான கிராமத்திரையரங்கு சினிமா பாரடைஸில் வருகிறது. இவ்வளவுதான் ஒற்றுமை. 'அதிலும் தியேட்டர் இதிலயும் தியேட்டர்' என்ற அளவுக்குத்தான் நம்மவர்கள் உலகசினிமாவை புரிந்து கொள்கிறார்கள் என்று தோன்றுகிறது.

வெயில் படத்தைப் பார்க்கும் எவருக்கும் ஏன் அதில் சினிமா வருகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும். முருகேசன் காலாவதியான ஒரு மனிதன். ஆகவே காலவாதியான ஒரு தொழிலை அவன் செய்யவேண்டும். மக்களுக்கு அது காலாவதியானது என்று தெரிந்த, காட்சியாக காட்டக்கூடிய இயல்புகொண்ட இரு தொழில்கள் டூரிங் தியேட்டரும் கட்டை அச்சும். கட்டை அச்சு அச்சகம் ஏற்கனவே சேரனால் அவரது 'தவமாய் தவமிருந்து' படத்தில் காட்டப்பட்டுவிட்டது. ஆகவே வேறு வழியில்லை. இந்த மாதிரி 'மூலம்' கண்டுபிடிப்பதில் ஒரு பெரும் படையே ஈடுபட்டிருக்கிறது. ஒரு படத்தின் கருவோ சில காட்சிகளோ இன்னொன்றுபோல் இருந்தால் 'அடிச்சுட்டான்யா' என்ற உற்சாகம். 'மூலத்தையே பார்த்தவன்யா நான்' என்ற பெருமிதம்

எந்தெந்த தமிழ் சினிமாக்கள், எந்தெந்த உலகத் திரைப்படங்களிலிருந்து நகல் செய்யப்பட்டவை என்று அதிஉற்சாகமாக தயாரிக்கப்படும் பட்டியல்களை முன்னர் நானும் பார்த்து வாய் பிளந்திருக்கிறேன். "எல்லாத்தையும் காப்பி அடிச்சுடறாங்கடா" என்று உற்சாகமாக உரையாடியிருக்கிறேன். ஆனால் உண்மையாகவே அவ்வாறான பட்டியல்களில் உள்ள திரைப்படங்களை பார்த்து ஒப்பிடும் போது ஏமாற்றமாகவும் ஆயாசமாகவும் இருந்தது. நகல் என்பதின் அடிப்படை புரிதல் கூட இல்லாமல் ஏதோ ஒரு சாயலை, காட்சிக் கோர்வையை, உடல்மொழியை, ஆடை வடிவமைப்பை, தற்செயலான ஒற்றுமையை மாத்திரம் வைத்துக் கொண்டு 'படம் முழுவதுமே இதிலிருந்து அது நகலெடுக்கப்பட்டது' என்ற எளிய முடிவிற்கு உடனே வந்துவிடுகிறார்கள். இது நம்மிடையே உள்ள தாழ்வு உணர்ச்சியின் இன்னொரு வகை வெளிப்பாடே. . 'வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன்தாம்பா' என்ற, உலகின் எந்த சிறந்த விஷயமென்றாலும் அது மேற்குலகில் 'அதிவீர்ய' மூளைக்காரர்களின் தயாரிப்பாகத்தானிருக்க முடியும் என்கிற முன்முடிவுக்கு உடனே வந்துவிடுவது.

நிற்க. நான் ஏதோ உண்மையாகவே அப்பட்டமாக 'காப்பியடிக்கும்' தமிழ் சினிமா இயக்குநர்களுக்கும் நடிகர்களுக்கும் வக்காலத்து வாங்க முனைவதான ஒரு தோற்றம் வருவதால் இங்கு அதை தெளிவுபடுத்தி விடுகிறேன். அதுவல்ல என் நோக்கம். இந்த அறிவுசார் சொத்துத் திருட்டென்பது உலகெங்கும் பரவலாக உள்ளது போல இங்கும் பழைய தமிழ் சினிமாக் காலங்களிலிருந்தே உருவாகி விட்டது. சினிமா என்கிற நுட்பம் வடக்கிலிருந்து தெற்கை நோக்கி பிரபலமாகும் போது இங்கே அப்போதிருந்த தெருக்கூத்தும் புராண அடிப்படை நாடகங்களும் அப்படியே எவ்வித மாற்றமுமில்லாமல் திரைக்கு நகர்ந்தன. பின்னர் அதுவும் சலித்துப் போன போது மிகச்சிறந்த ஹாலிவுட் டிராமாக்கள், இந்தியாவின் மற்ற மாநில குடும்ப டிராமாக்கள் (குறிப்பாக வங்காளம்) 'தமிழ்ப்படுத்தப்பட்டு' வெளியாகின.

இப்பவும் நீங்கள் பிலிம் நியூஸ் ஆனந்தன் போன்றவர்கள் எழுதிய பழைய சினிமாக் கட்டுரைகளை படித்துப் பார்த்தால் "----------- படம் அந்த தயாரிப்பாளருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. இதை தமிழில் எடுத்தால் நிச்சயம் கையைச் சுடாது என்று தோன்றியது. உடனே ---------- நடிகருக்கு இதைப் போட்டுக் காட்டி அவரின் ஒப்புதலைப் பெற விரும்பினார்.' என்று பல சமயங்களில் படங்களின் பெயரைக் குறிப்பிடாமலேயே எழுதப்பட்டிருக்கும். இந்தியாவிற்குள் உருவாக்கப்பட்டிருக்கும் திரைப்படம் என்றால் சமயங்களில் முறையான மறுஉருவாக்க உரிமையை சட்டரீதியாகப் பெற்றிருப்பார்கள். இல்லையென்றால் அதை காப்புரிமை சட்டத்திலிருந்து தப்பிக்கும் வகையில் கதையின் போக்கை மாற்றியமைப்பார்கள். இரண்டு படைப்புகளுக்குமிடையே குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஒற்றுமையான அம்சங்கள் இருந்தால்தான் அது 'திருட்டு' என்று காப்புரிமைச் சட்டம் கூறுகிறது. இரண்டு தனி நபர்களுக்கும் ஒரே மாதிரியான கற்பனை இருந்திருக்க வாய்ப்புண்டு என்கிற benefit of doubt அடிப்படையில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி பல கதை / திரைக்கதையாசிரியர்கள் தங்கள் கைவண்ணத்தை காண்பித்து வருகிறார்கள்.

இவ்வாறு நகலெடுக்கப்படுவதில் பல வகைகளை என்னால் காண முடிகிறது. முழுதிரைப் படத்தையும் காட்சி, காமிரா கோணம், ஆடை வடிவமைப்பு, உடல்மொழி என்று அப்படியே காப்பியடிப்பது. இல்லையென்றால் படத்தின் பிரதான மையத்தை, முடிச்சை மாத்திரம் எடுத்துக் கொண்டு அதை அப்படியே உள்ளூர் கலாசாரத்தில் போட்டுப் பிசைவது. அல்லது குறிப்பிட்ட காட்சிகளை, திரைக்கதை பாணியை என்று ஏதோ ஒரு சிறப்பான அம்சத்தை மாத்திரம் 'தம்முடைய' படைப்பில் உபயோகிப்பது. சமயங்களில் எதனுடைய மூலம் எதுவுடையது என்பதை கண்டுபிடிப்பதே சிக்கலாகவும் அதனுடைய தொடர்ச்சியோடு நூல்பிடித்து பின்னோக்கி பயணிப்பதாக அமைந்துவிடும்.

பொதுவாக நடிகைகள் பேட்டியளிக்கும் போது 'கவர்ச்சியாக நடிப்பேன். ஆபாசமாக நடிக்க மாட்டேன்' என்று மழுப்புவார்களே, அவ வாறு இன்ஸ்பிரேஷனுக்கும் இமிட்டேஷனுக்கும் துல்லியமான வேறுபாடு இருக்கிறதா என்றால் இருக்கிறது. மேற்கண்ட வழிகளில் உருவாக்கப்படுவது இமிட்டேஷன் என்றால், ஒரு படைப்பினால் அகவுணர்வு சார்ந்த பாதிப்பை அல்லது படைப்பின் மையத்திலிருந்து ஒரே ஒரு துளியை தொட்டுக் கொண்டு அதை அசலிலிருந்து முற்றிலும் விலகி தம்முடைய சுய கற்பனை வண்ணங்களின் மூலம் கேன்வாஸில் ஓவியமாக தீட்டுவதை இன்ஸ்பிரேஷனாக சொல்லலாம். இவ்வாறு செய்யப்படுவதை சம்பந்தபட்ட படைப்பாளியே முன்வந்து சொன்னால்தான் சமயங்களில் நம்மால் கண்டுபிடிக்க இயலும். அப்படிச் சொன்னாலும் கூட நம்மால் பெரிதாக எந்தவொரு வித்தியாசத்தையும் கண்டுபிடிக்க இயலாது. உதாரணமாக புதுமைப்பித்தனின் 'சிற்றன்னை' குறுநாவலின் பாதிப்பினால்தான் 'உதிரிப்பூக்களை' உருவாக்கினதாக இயக்குநர் மகேந்திரன் குறிப்பிடுகிறார். ஆனால் இரண்டு படைப்புகளிலும் பெரிதாக எந்தவொரு ஒற்றுமையும் இல்லை என்பதே விமர்சகர்களின் கருத்தாக இருக்கிறது. இது படைப்பாளிகளின் தார்மீகமான உணர்ச்சி சம்பந்தப்பட்டது.

மற்ற படைப்பாளிகள் இவ்வாறு ஒப்புக் கொள்ளாததற்கு காரணமாக சட்டரீதியான சிக்கல்களோ, முதலீட்டின் ஒரு பகுதியை ஒதுக்குவது குறித்த கஞ்சத்தனமோ, மற்றவரின் படைப்பு என்று ஒப்புக் கொள்ள முடியாத ஈகோ பிரச்சினையாகவோ இருக்கலாம். எப்படியிருந்தாலும் ஒப்புக் கொள்ளாத பட்சத்தில் இது மகா பெரிய தவறுதான். நம்முடைய இலக்கியங்களிலிருந்தோ, இலக்கியவாதிகளின் ஒத்துழைப்புடனோ பல நல்ல கதைகளை திரைப்படமாக உருவாக்கலாம். ஆனால் சூப்பர் ஸ்டார்களுக்கு கோடிக்கணக்கிலும் நாயகிக்கு சில்லி சிக்கன் வாங்க ஐம்பது கிலோ மீட்டருக்கு பெட்ரோல் செலவு செய்யத் தயங்காத நம் தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் எழுத்தாளருக்கு பணம் தர வேண்டுமானால் மாத்திரம் இந்த 'சிக்கன் வாதிகள்' உடனே சிக்கனவாதிகளாக மாறி விடுவார்கள். இது மாத்திரமல்லாமல் பெரும்பாலான தமிழ் இயக்குநர்களுக்கு ஒரு பெரிய வியாதி இருக்கிறது. அது கதை, திரைக்கதை, பாடல்கள், எடிட்டிங், ஒளிப்பதிவு, தயாரிப்பு, இசை, டைரக்ஷன், போஸ்டர் ஒட்டுதல், சவுண்ட் மிக்ஸிங், தயாரிப்பு நிர்வாகம், என ஒரு பெரிய பட்டியலையே டைட்டில் கார்டில் போட்டுக் கொள்ள விரும்பும் மோகம்தான் அது. இதனாலேயே மற்ற படங்களிலிருந்து காப்பியடித்ததை ஒப்புக் கொள்வதில்லை. மேலும் யாராவது கண்டுபிடித்து சுட்டிக்காட்டினாலும் மறுத்து சுட்டிக் காட்டியவர் மீதும் பாய்வது.

உலக சினிமாக்களிலிருந்து நகலெடுக்கப்பட்ட தமிழ் சினிமாக்கள் என்ற பட்டியலைப் பற்றி ஆரம்பத்தில் சொல்லியிருந்தேன் அல்லவா? அதில் சில சதவீத உண்மையிருந்தாலும் மற்றவை எவ்வாறு அரைகுறை புரிதலோடு இடம் பெற்றிருக்கிறது என்பதைப் பார்ப்போம். மணிரத்னத்தின் ஆய்த எழுத்து, Amores perros என்கிற மெக்சிகன் திரைப்படத்தின் அப்பட்டமான நகல் என்று நீண்ட ஆண்டுகளாக சொல்லப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

**முன்னரே சொன்னது போல தமக்கான கதைகளை டிவிடிகளில் தேடாமல் தமிழ் அல்லது மற்ற மொழி இலக்கியங்களிலிருந்தும் எழுத்தாளர்களிடமிருந்தும் அவற்றுக்கான முறையான ஒப்புதலோடு தேடினால் பல நல்ல தமிழ் சினிமாக்கள் உருவாகும்.**

ஒரு சம்பவத்தை மையமாக்கி அதன் மூலம் சம்பந்தப்பட்ட பல தனி நபர்களின் வாழ்க்கை நிகழ்வுகள் பின்னோக்கி சொல்லப்பட்டிருக்கிறது என்கிற திரைக்கதை உத்தி மாத்திரமே இரு படத்திற்குமான ஒற்றுமை. முழுத்திரைப்படமும் அல்ல. அரசியலை அரசியல்வாதிகளை மேம்போக்காக குற்றஞ்சொல்லிக் கொண்டிருக்காமல் அதை ரவுடிகளிடம் ஒப்படைக்காமல் படித்த மாணவர்கள் அரசியலில் பங்கு பெற முன் வர வேண்டும் என்பதுதான்ஆய்த எழுத்து திரைப்படத்தின் மையம். Amores Perros-ல் இப்படியான மையமே கிடையாது. பல தனி நபர்களின் சம்பவங்கள் அதன் போக்கில் அதற்கான வன்முறையின் உக்கிரத்தோடு சொல்லப்படுகின்றன.



கௌதம் மேனன், சசி போன்று சில இயக்குநர்கள் தங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தின படைப்பின் மூலத்தை டைட்டில் கார்டிலேயே சமீபத்தில் குறிப்பிட்டு வருவது ஆரோக்கியமான விஷயம்.

முன்னரே சொன்னது போல தமக்கான கதைகளை டிவிடிகளில் தேடாமல் தமிழ் அல்லது மற்ற மொழி இலக்கியங்களிலிருந்தும் எழுத்தாளர்களிடமிருந்தும் அவற்றுக்கான முறையான ஒப்புதலோடு தேடினால் பல நல்ல தமிழ் சினிமாக்கள் உருவாகும்.

*- சுரேஸ் கண்ணன்*

Kayaal IT Solution Ltd
CCTV Camera Installation & Maintenance
EST Aug 2012

- CCTV Installation and Maintainance
- We are Offering cameras 1000 TVL at Different Prices from £25
- AHD - 720P, 1080p ,1.3 Megapixel Camera, CMOS 1000 TVL all available all day
- Wireless HD IP Cameras also available
- DVR all quality - Sunvision make
Simply and Friendly Easily In Your Pocket Money!!!
If Any One Start Pay with Month 50 Pounds Then Year after You Make Weekly Earn Regular and Continue Until You Member Weekly earn 250 pounds For More Details Call - JOTHY -07859892657
FRIENDLY SERVICES BY QUALIFIED ENGINEER.....


CCTV in operation
Only £ 500.00 (Inc VAT)
4 Dome camreas, DAY AND NIGHT, 1000tvl, cmos 4 ch dvr, 500 GB Hard Disk and Install, Online Support.
Only £ 650.00
4 Dome Cameras 12 MM Lens, 30 Meter, Day And Night Vision , 720p, 1080p, 1.3 Mega Pixel AHD 1000 TVL AHD 4 CH dvr With 1TB Hard Drive, All Install And Online Setup
Please Contact : KAYAL-07457178826
JOTHY - 07859892657
Electrical and Electronic Engineer [BEng Hons ], CITY UNIVERSITY,LONDON
MCP2.0, MCT, [WINDOWS7], MCT[WINDOWS8]. PAT CERTIFIED [CITY AND GUILDS]

Paying Method : By PayPal or Cash
83, Roberts Bridge Road, Carshalton, SM5 1AH
E-Mail : info@kayaalcctv.com
Web : WWW.KAYAALCCTV.COM
COMPANY REG NO : 08193915

# சினிமா




சிறந்த தமிழ்படத்திற்கான தேசிய விருது, சிம்பாப்வே உள்ளிட்ட சர்வதேச திரைப்பட விழாக்களில் வாகை சூடல் என குற்றம் கடிதல் பெற்ற அங்கீகாரங்கள் பல. ஆனால் திரையரங்குகளில் தக்க தருணம் பார்த்து ரிலீஸ் செய்ய நீண்ட காத்திருப்பு. அதற்கான விடியல் இன்று தான். ஆஸ்கர் விருதுக்கு இந்தியா சார்பில் பரிந்துரைக்கப்படும் என நம்பப்பட அந்த வாய்ப்பை மராத்திய படமான 'கோர்ட்' தட்டிச்சென்று இருக்கிறது.

ஆங்கிலம் மற்றும் தமிழ் நாடகத்துறையில் தேர்ந்த அனுபவம் கொண்டவர் இயக்குனர் பிரம்மா. குற்றம் கடிதல் (திருக்குறள்) அதிகாரத்தின் 'குற்றமே காக்க பொருள்ஆகக் குற்றமே அற்றம் தரூஉம் பகை' 434 வது குறளை தனது கதையின் அடிப்படையாக தேர்வு செய்திருக்கிறார். விளக்கம்: அழிவு தரும் குற்றம் என்னும் பகைப்பொருள் வராவாறு விலக்கு.

ஃபோர்த் ஜெனரேஷன் எனும் மெட்ரிகுலேஷன் பள்ளியின் ஆசிரியை மெர்லின். புதிதாய் திருமணம் முடிந்து மீண்டும் பள்ளிக்குள் அடியெடுத்து வைக்கிறார். கணவருடன் வெளியே செல்வதால் 'எனது வகுப்பு மாணவர்களை இன்றொரு நாள் சமாளித்துக்கொள்' என மெர்லினிடம் சக ஆசிரியை கேட்டுக்கொள்கிறார். அராத்து பிள்ளைகள் அதிகம் இருக்கும் ஐந்தாம் வகுப்பில் மாணவன் செழியன் செய்யும் சேட்டைக்கு அவனது கன்னத்தில் மெர்லின் வைக்கும் ஒரு அறைதான் கதையின் மையம்.

செழியனை அறைந்து விட்டோமே எனும் பதற்றத்துடன் கைகளை பார்க்கும்போது (சற்று) கண்டிப்பான டீச்சர்களின் மனசாட்சியும் நடுங்கத்தான் செய்யும். ஏற்கனவே அச்சத்தில் இருக்கும்போது மாணவி ஒருத்தி சம்பவத்தை மிகைப்படுத்த மீண்டும் மெர்லினின் கைகள் தன்னிச்சையாக அவளை அடிக்க துடிக்கும் காட்சி நன்று. இதுபோன்ற விவகாரங்கள் வரும்போது அதனை மூடி மறைக்க மெட்ரிக் பள்ளி நிர்வாகம் செய்யும் தந்திரங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோர்கள் செய்வதறியாது திகைக்கும் நிலை குறித்து வலுவான பதிவினை செய்திருக்கிறார் இயக்குனர் பிரம்மா.

செழியனாக அஜய். இச்சிறுவனை பல நாட்கள் வலை வீசி பிடித்திருக்கிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது. அதிகபட்சம் ஐந்து நிமிடங்கள் கூட திரையில் தோன்றவில்லை. ஆனால் அஜய் வரும் சிற்சில நொடி காட்சி ஒவ்வொன்றும் அழுத்தமாய் மனதில் பதியும். தடித்த கண்ணாடி, இருள் சூழ்ந்த முகம். அதில் வெளிப்படும் எகத்தாளம். அபாரமான உடல்மொழி. அசத்தி இருக்கிறான்.

கதை நாயகி மெர்லினாக ராதிகா பிரசித்தா. செழியனை அறைந்து விட்டோம் எனும் பதற்றத்திற்கு இணையாக நடிப்பிலும் சில தடுமாற்றங்கள். மற்றபடி குற்ற உணர்ச்சிக்கு ஆளாகும் ஆசிரியையாக சிறப்பான நடிப்பு. செழியனின் தாயாரை கண்டு கதறும்போது கண்களை ஈரமாக்கி விடுகிறது ராதிகாவின் நடிப்பு. சாய் ராஜ்குமார் (மெர்லினின் கணவர்), பள்ளி முதல்வர் மற்றும் அவரது மனைவி, செழியனின் தாயார் என இயல்பாக நடிக்கும் நபர்களால் படத்துடன் ஒன்றி விட முடிகிறது. செழியனின் மாமாவாக பாவல் நவகீதன். கோபக்கார கம்யூனிஸ்ட் தோழர். முக்கியமான துணை கதாபாத்திரம். விளையாட்டு ஆசிரியரை அறைவது போன்ற சில இடங்களில் தேவைக்கு மீறி முறுக்கி கொள்வதை தவிர்த்து இருக்கலாம். மற்றபடி தகுந்த இருப்பு.

நகரத்தின் விடியலை சொல்லும் 'காலை நிலா', பள்ளியில் ஒலிக்கும் 'சிங்', நெகிழ்வான 'சின்னஞ்சிறு கிளியே' என கதையுடன் பயணிக்கும் வரிகள் அனைத்தும் மனதில் நிற்கும். சினிமாத்தனம் இல்லாத மணிகண்டனின் ஒளிப்பதிவு பெரிய சிறப்பு.

உலக சினிமாக்களில் தென்படும் அம்சங்கள் சிலவற்றை துருத்தாமல் வைத்திருந்தால் குற்றம் கடிதல் இன்னும் கச்சிதமாய் இருந்திருக்கும். பேருந்து நிறுத்தத்தின் அருகே இருக்கும் ஃபோன் பூத்தில் இருந்து மெர்லின் பேசும்போது பின்னணியில் ஒலிக்கும் 'ஒண்ணா இருக்க கத்துக்கணும்', 'தன்னந்தனி காட்டுக்குள்ள' பாடல்கள், தமிழா அல்லது ஆங்கில சேனலா என்று குழப்பும் 'To Beat or Not to Beat' விவாத நிகழ்ச்சி, தெருக்கூத்து இத்யாதிகள் எல்லாம் சற்று பழைய கலைச்சினிமா யுக்திகள் ஆயிற்றே? குற்றம் கடிதலின் ரிலீஸ் தாமதம் ஆனதால் இம்மாதிரியான விஷயங்கள் அழுத்தத்தை உண்டாக்க தவறி விட்டன என்று சொல்லலாம்.

செக்ஸ் கல்வி தமிழக பள்ளிகளில் சொல்லித்தரப்பட வேண்டுமா? இல்லையா? என்பதை துவக்கத்திலும், இறுதியிலும் விவாதிக்கிறார்கள். ஆனால் ஒற்றை முத்தம் தந்ததற்கும் அதனை செக்ஸ் கல்வியோடு முடிச்சு போடுவதற்கும் அவ்வளவு பெரிய தேவை என்ன வந்துவிட்டது என்பது முக்கியமான கேள்வி.

மற்றபடி செக்ஸ் கல்வியின் தேவை அல்லது மாணவர்கள் மீது கையை ஓங்கும் ஆசிரியர்கள் குறித்து பெரிதாய் பிரச்சாரம் செய்யாமல் சம்பவங்களை அடிப்படையாக கொண்டே நகர்வது குற்றம் கடிதலின் ஹைலைட். தெரியாமல் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டே ஆக வேண்டுமென தீர்க்கமாக இருக்கும் மெர்லின் டீச்சர், 'சுற்றி என்ன நடந்தால் என்ன? எனது மகன் பிழைப்பானா?' என விரக்தியுடன் காத்திருக்கும் தாயார், இவ்விருவரும் இணையும் புள்ளியில் வைக்கப்படும் கனமான க்ளைமாக்ஸ் போன்றவை குற்றம் கடிதலை உலக சினிமா தரத்திற்கு உயர்த்தி இருக்கின்றன.

தமிழில் இவ்வாண்டு காக்கா முட்டைக்கு பிறகு வந்திருக்கும் பொன்முட்டையிது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் தவறவே விடக்கூடாது.

*- நண்பேன்டா*

## சினித்துளி

### சிவாவைத் தாக்கிய கமல் ரசிகர்கள்!



மதுரை விமான நிலையத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் கமல் ரசிகர்களால் தாக்கப்பட்டிருப்பது திரையுலகில் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் அளித்துள்ளது. சிவகார்த்திகேயனும் சென்னையில் இருந்து மதுரைக்கு விமானத்தில் சென்றுள்ளனர். மதுரை விமான நிலையத்தில் கமல் முதலில் வெளியேறிவிட.. பின்பு நடிகர் சிவகார்த்திகேயனும் வெளியில் வந்துள்ளார். அப்போது அவரைச் சூழ்ந்து கொண்ட கமல் ரசிகர்கள் கோபத்துடன் சிவகார்த்திகேயனை தாக்கியிருக்கிறார்கள்.

இதன் வீடியோ பதிவில் இது அப்பட்டமாகத் தெரிகிறது. ஒரு நடிகர் ரசிகர்கள் மற்றொரு நடிகரைத் தாக்கும் அளவுக்கு செல்வது திரையுலகத்திற்கு நல்லதல்ல..! இதனை சம்பந்தப்பட்டவர்கள் முளையிலேயே கிள்ளி விடுவது அவர்களுக்கும், திரையுலகத்திற்கும் நல்லது..

### மிஷ்கின் அடுத்த படம் இயக்கத் தயார்!



சவரகத்தி படத்தில் நடித்து வரும் இயக்குநர் மிஷ்கின், தனது இயக்கத்தில் அடுத்த புதுப் படத்தை அறிவித்துள்ளார். மிஷ்கின் இயக்கத்தில் கடைசியாக வெளிவந்த பிசாசு படம் நல்ல வெற்றியைப் பெற்றது. அதன் பிறகு தனது புதுப் படத்தை அறிவிக்காமல், 'சவரகத்தி' படத்தில் நடிக்கப் போய்விட்டார். இப்போது தனது இயக்கத்தில் அடுத்த புதுப்படத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். இந்தப் படத்துக்கான படப்பிடிப்பை வரும் நவம்பரிலிருந்து தொடங்கவிருக்கிறார்.

'சவரகத்தி' படத்தின் இடை விடாத படப்பிடிப்புக்கிடையே மிஷ்கின் தனது புதிய படத்தின் கதை, திரைக்கதையை எழுதிக் கொண்டிருக்கிறார். இது ஒரு க்ரைம் த்ரில்லராக உருவாகிறது.

### விசால்-பாண்டிராஜ் ஆடும் கதகளி



பாயும் புலி படத்திற்கு பிறகு விஷால், இயக்குனர் பாண்டிராஜ் இயக்கும் புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமானார். இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் பூஜையுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.இப்படத்திற்கு தலைப்பு தேர்வு செய்யாமலேயே படப்பிடிப்பு நடத்தி வந்த படக்குழுவினர் தற்போது இந்த படத்திற்கு 'கதகளி' என்று தலைப்பு வைத்துள்ளனர். இதில் விஷாலுக்கு ஜோடியாக கேத்ரீன் தெரசா நடிக்கிறார். சூரியும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

### சசிகுமாரின் 'வெற்றிவேல்'



படத்திற்கு படம் புதுமையும், வித்தியாசமும் நிறைந்த கதாபாத்திரங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தவர் இயக்குநரும், நடிகருமான சசிகுமார். பாலாவின் இயக்கத்தில் 'தாரை தப்பட்டை' படத்தில் நடித்து முடித்த கையோடு தனது புதிய படத்திற்கு ஆயுத்தமாகிவிட்டார் சசிகுமார். ரவிந்திரன் தயாரிக்கும் இந்த புதிய படத்தை ஜில்லா படத்தில் உதவி இயக்குனராக இருந்த வசந்தமணி என்கிற புதிய இயக்குநர் இயக்கவுள்ளார்.

'வெற்றிவேல்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தில் நாயகனாக சசிகுமார் நடிக்க, பிரபு, தம்பி ராமையா, ரேணுகா, விஜி மற்றும் பலர் நடிக்கவுள்ளனர். இப்படத்தின் கதாநாயகியாக புதுமுகம் ஒருவர் அறிமுகமாகிறார். டி இமான் படத்திற்கு இசையமைக்கிறார்.

Maths Tuition
Shan Master
* Shan Master specialises in GCSE & A-level Maths
* Home visits
For prices & Availability
PLEASE CALL 02086406119
Or email ShanMathsMaster@gmail.com

திருமண சேவை
மணமகள் - மணமகன் தேவையா ?
எம்மிடம் 6000க்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பற்றிய தகவல்கள், படங்கள், குறிப்புக்கள் உள்ளன.
சேவை நேரம்:- திங்கள், வெள்ளி, ஞாயிறு: 1 மணி முதல் மாலை 4 வரை
குறிப்பு: 29 வயது (இந்து) லண்டனில் வசிக்கும் படித்த மணமகனுக்கு மணமகள் தேவை
27 வயது (இந்து) இலங்கையில் வசிக்கும் படித்த மணமகளுக்கு படித்த மணமகன் தேவை
எம்முடன் தொடர்பு கொள்ள - 07939531418
EMail:- info@friendsmatrimony.com
முகவரி:- Temple House, Station Road, Harrow, London, HA1 2TH

# THE MORTGAGE ORGANISATION

AUTHORISED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY

Contact:

**David Eva**
OR
**Ernest Sri**

258- High Street North
Manor Park, London E12 6SB

Tel: **020 8475 0755**
Fax: **020 8470 4755**
Mob: **07803 600 543**

## RESIDENTIAL & COMMERCIAL MORTGAGES

**Commercial Loans**

- Petrol Stations, Social Clubs
- Hotels, Restaurants &
- Takeaways
- Convenience Shops
- Pharmacies, Care Homes,
- Optician, Dentist
- Children Nurseries

**Residential Mortgages**

- Re-Mortgages
- Buy to Let
- Bridging Loans
- Right to Buy
- Help to Buy



**Loans can be arranged for leasehold and freehold businesses**

**Arrangements are made to meet senior business manager from leading banks in our premisesTHE MORTGAGE ORGANISATION**

**How will a 'YES' make you feel ?**

**YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE**

# JPN

Shipper | Movers | Transporters

Shipping: World Wide Door to Door
Air Cargo: Faster and Promised Delivery
Removal Services: Rate Lower - Job Higher

குறைந்த செலவில்
விமான மற்றும் கடல்-தரை
மார்க்கமான பொதி சேவை
பாதுகாப்பு - விரைவு - நம்பிக்கை

யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை !


**உலகெங்கும் கடல், வான் மார்க்கமாக பொருட்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே நிறுவனம்**

- *Shipping & Airfreight*
- *Worldwide Destination*
- *Import & Export*
- *Packing & Crating*
- *Collection & Delivery*
- *All Sizes & Weights*
- *Immediate Insurance Cover*
- *Complete Documentation Service*

*Now we are Operating the Coaches Europe Wide!*










Machinaries & Commercial Cargo Clearances and Door Deliveries to any Corner of Srilanka @ Best Rates

குறைந்த விலையில் இலங்கைக்கு பொதிகளை மட்டுமல்லாமல் இலத்திரனியல் பொருட்களையும் பாதுகாப்பான முறையில் அனுப்பிக் கொள்ளலாம். உங்கள் பொருட்களை உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று அனுப்பும் சேவையும் உள்ளது.

**Passenger Vehicles Available from 9 to 60 Seater Coaches**

**JPN Shipping Ltd.**
**Unit-A2c, Redlands, Coulsdon,**
**CR5 2HT, Surrey.**

Web: www.jpnshippingltd.co.uk
Email: info@jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk

Call us .........
Tel: **020 8668 0252**
Mob: **079 3119 7571**

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
## Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
## சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED